பக்கங்கள் : பதினாறு

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 தை 12 செவ்வாய்க்கிழமை (25.01.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :60

# பொதுக் கட்டமைப்பை உருவாக்கும் இணக்க ஏற்பாட்டில் சுறுசுறுப்பு

## அரசிடமிருந்து புதிய தகவல் புலிகள் தரப்புக்குப் பறந்தது

கொழும்பு, ஜனவரி25

**ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கான பொதுக்கட்டமைப்பு ஒன்றை - பொறிமுறை ஒன்றை - இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் இணங்கி உருவாக்குவதற்கான ஏற்பாடுகள் சூடுபிடித்திருக்கின்றன.**

**இதுதொடர்பாக அரசுத் தலைமைக்கும் புலிகள் தலைமைக்கும் இடையில் தகவல் மற்றும் கருத் துப் பரிமாற்ற நடவடிக்கைகளில் நோர்வே அனுசரணைத் தரப்பு மாறிமாறி - பறந்து பறந்து - ஈடுபட்டு வருகின்றது.**

நோர்வே அனுசரணைக் குழுவின் உயர் மட்டப் பிரதிநிதியான அந்நாட்டின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன் மற்றும் கொழும்புக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் ஆகியோர் நேற்றும் திடீரெனக் கிளிநொச்சிக்கு ஹெலிகொப்டரில் பறந்து சென்றனர்.

இலங்கை அரசுத் தரப்பிடமிருந்து புதிய தகவலை அவர்கள் எடுத்துச் சென்று புலிகளின் தலைமைக்குத் தெரிவித்தனர் என விடயமறிந்த வட்டாரங்கள் கருத்து வெளியிட்

(16ஆம் பக்கம் பார்க்க)



நேற்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்த நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸனை புலிகளின் அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் சொ.தங்கன், சமாதான செயலக பணிப்பார் புலித்தேவன் ஆகியோர் வரவேற்பதைப் படத்தில் காணலாம்.
(படம்: கிளிநொச்சி செய்தியாளர் சேந்தன்)

## நேற்றிரவு வெள்ளவத்தையில் தமிழ் இளைஞர் சுடப்பட்டார்

வெள்ளவத்தை 33ஆவது ஒழுங்கையில் நேற்றிரவு 9.45 மணியளவில் இளைஞர் ஒருவர் இனந்தெரியாதவர்களால் சுடப்பட்டார்.

காலிவீதியுடன் 33ஆவது ஒழுங்கையில் சேருமிடத்தில் அமைந்துள்ள சைவ உணவகம் ஒன்றின் முன்பாக வைத்து இந்த இளைஞன் சுடப்பட்டார்.

இவரின் வலது தோள்மூட்டின் கீழ் இரு துப்பாக்கிச் சூட்டுக்காயங்கள் காணப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது. படுகாயமடைந்தவர் களுபோவில வைத்தியசாலையில் தீவிரசிகிச்சைப் பிரிவில் சிகிச்சைபெற்றுவருகிறார் என்றும், அவரது நிலை கவலைக் கிடமாக உள்ளது என்றும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

சுடப்பட்ட இளைஞன் ஜெகன்(வயது 32) எனத் தெரிவிக்கப்பட்டபோதும், நேற்றுப் பின்னிரவு வரை பொலீஸார் மேலதிக விவரங்கள் எதனையும் தெரிவிக்கவில்லை.

(16ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாவின் படத்தை ஜே.வி.பியினர் காரைதீவில் அடித்து நொறுக்கினர்

### மக்கள் ஆத்திரமடைந்ததால் முறுகல் நிலை

கொழும்பு.ஜன.25

காரைதீவு தமிழ்ப்பாடசாலையில் மாட்டப்பட்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் படத்தை ஜே.வி.பியினர் அடித்து நொறுக்கினர். இதனால் பொது மக்களுக்கும் அவர்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது. பாடசாலை அதிபர் பெரும் பிரயத்தனத்துடன் ஜே.வி.பியினரை பாடசாலை வளவில் இருந்து வெளியேற்றி நிலைமையைச் சுமுகமாக்கினார்.

இச்சம்பவம் நேற்றுப் பகல் காரைதீவில் இடம்பெற்றது.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட காரைதீவு தமிழ் வித்தியாலயத்தைச் சுத்தம் செய்வதாகக் கூறிக்கொண்டு சுமார் 20 ஜே.வி.பி. தொண்டர்கள் பாடசாலைக்குள் வந்துள்ளனர்.

இவர்கள் பாடசாலையைத் துப்புரவு செய்து கொண்டிருக்கும்போது அங்கே காணப்பட்ட புலிகளின் தலைவர் பிரபாகரனின் படத்தை எடுத்து ஆத்திரத்துடன் அடித்து உடைத்து நொறுக்கியுள்ளனர்.

ஜே.வி.பியினரின் நடவடிக்கையினால் ஆத்திரமடைந்த மாணவர்களும் பொதுமக்களும் ஜே.வி.பியினருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இரு சாராருக்கும் இடையில் முறுகல் அதிகரித்து மோதல் ஏற்படும் நிலையேற்பட்டது.

(16ஆம் பக்கம் பார்க்க)

### நிவாரணப் பொருள்களுடன் வந்து சேர்ந்த

## ஹெலிகளின் உதிரிப்பாகங்கள் குறித்து குற்றப்புலனாய்வுத்துறை விசாரணை

கொழும்பு.ஜன.25

முன் அனுமதி இல்லாமல் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட இரு ஹெலிகொப்டர்களின் பாகங்கள் தொடர்பான விசாரணைகளைக் குற்றப் புலனாய்வுப் பிரிவு ஆரம்பித்துள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை நடத்துவதற்கான அனுமதி குற்றப்புலனாய்வுப் பிரிவிடம் நேற்று வழங்கப்பட்டது எனப் பொலீஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்தார்.

இது தொடர்பான விசாரணை அறிக்கையைத் தம்மிடம் இன்று ஒப்படைக்குமாறு குற்றப்புலனாய்வுப் பிரிவுக்குத் தாம் ஆலோசனை வழங்கியுள்ளார் எனவும் அவர் தெரிவித்தார்.

ஆழிப்பேரலை நிவாரணத்துக்காக வெளிநாடுகளிலிருந்து வந்த பொருள்களுடன் ஹெலிகொப்டருக்கான பாகங்கள் இருந்ததைக் கண்டுபிடித்த சுங்க அதிகாரிகள் அவற்றைக் கைப்பற்றியிருந்தனர்.

இலங்கையில் செயற்படும் அரச சார்பற்ற

(16ஆம் பக்கம் பார்க்க)

### அனர்த்த நிவாரணப் பணியுடன் தொடர்புடைய

## மாவட்ட மட்டத்திலான செயலணி குறித்து அதிகாரிகளோடு புலிகள் கலந்தாலோசனை

### தமிழ்ச்செல்வன் தலைமையில் நேற்று நடந்தது

கொழும்பு.ஜன.25

ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின் மனிதநேய உதவிகளைச் செம்மையாக மேற்கொள்வதற்கான மாவட்ட மட்டத்திலான செயற்பாடுகள் தொடர்பில் விடுதலைப் புலிகள் ஆழமாகக் கலந்துரையாடியுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் திட்டமிடல், அபிவிருத்திச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலிலேயே இவ்விடயம் குறித்துக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில் வடக்கு - கிழக்கில் உள்ள எட்டு மாவட்டங்களினதும் அரச அதிபர்கள், பிரதேச செயலாளர்கள், வடக்கு -கிழக்கில் உள்ள அரச திணைக்களங்களின் தலைவர்கள், வடக்கு - கிழக்கு மாகாணத்தின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் ஏறத்தாழ 120 பேர் பங்கு கொண்டனர். புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் அங்கு உரையாற்றினார்.

இது குறித்துப் புலிகளின் திட்டமிடல், அபிவிருத்திச் செயலகம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ்ச்செல்வன் தமது ஆரம்ப உரையில் உள்ளூர் கட்டமைப்புப் பொறிமுறை பற்றி எடுத்துரைத்தார்.

அரச அதிபர்கள் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற தொண்டர் அமைப்புகள், தமிழர் புனர்வாழ்வுக் கழகம், உள்ளூர் அரசசார்பற்ற அமைப்புகள், சிவில் சமூக அமைப்புகளின் நடவடிக்கைக் குழுக்கள், செயலணிகள் போன்றவற்றின் செயற்பாடு பற்றியும் அவற்றின் தொண்டு குறித்தும் அவர் எடுத்துரைத்தார்.

அவரின் உரையில் உள்ளூர் மட்டப் பொறிமுறையைக் கட்டமைப்பதின் அவசியம் குறித்தும் வலியுறுத்தப்பட்டது.

அவ்வாறு - உள்ளூர் மட்டப் பொறிமுறையை உருவாக்கி நிறுவனமயப்படுத்துவதே இப்பணிகளைச் செம்மையாக முன்னெடுக்க வழிவகுக்கும் என்றார் அவர்.

மனிதநேய நடவடிக்கைகளில் ஈடுபடும்

(16ஆம் பக்கம் பார்க்க)




அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான தாரண வருடம் தை மாதம் 12ஆம் நாள் (25.01.2005) செவ்வாய்க்கிழமை காலை 9.07மணி தொடக்கம் 10.24 மணி வரையுள்ள சுபவேளையில் எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற ஞானரதம் வாகன சுத்திகரிப்பு நிலையம் என்னும் நிலையத்தை ஆரம்பித்து நடத்த இருப்பதால் அத்தருணம் நண்பர்கள், வாகன உரிமையாளர்கள் அனைவரையும் இவ்வைபவத்தில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

GNANARATHAM LUBRICATION SERVICE CENTRE

பருத்தித்துறை வீதி,
(கோப்பாய் கிராம சபைக்கு முன்பாக),
கோப்பாய்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:
திரு.S. அற்புதமூர்த்தி

(C/40594) உதயன் Graphics



தியாகி அறக்கொடை நிதியத்தின் விற்பனை நிலையத் திறப்பு விழா நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு வருகை தந்த நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் குத்துவிளக்கு ஏற்றுவதையும், விற்பனை நிலையத்தை மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன் நாடாவை வெட்டித் திறந்துவைப்பதையும், விற்பனை நிலையத்தைப் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்:- அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

# சிறுபான்மை மக்களாகிய நாம் எங்கு வாழ்ந்தாலும் ஒரு பெரும் சக்தியாக உருவெடுக்க வேண்டும்

## மலையய மக்கள் முன்னணித் தலைவர் உரை

யாழ்ப்பாணம்.ஜன.25

சிறுபான்மையின மக்களாகிய நாம் எங்கு வாழ்ந்தாலும் ஒரு பெரும் சக்தியாக உருவாக வேண்டும்.

- இவ்வாறு நேற்று நடைபெற்ற தியாகி அறக்கொடை நிறுவன விற்பனை நிலையத் திறப்புவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய மலையக மக்கள் முன்னணித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பெ.சந்திரசேகரன் தெரிவித்தார்.

அவர் தனதுரையில் மேலும் தெரிவித்ததாவது:-

இங்கு ஒரு பிரச்சினை என்றால் அது மலையகத்திலும் பிரதிபலிக்க வேண்டும். மலையகத்தில் ஒரு பிரச்சினை என்றால் அது இங்கும் பிரதிபலிக்க வேண்டும்.

தியாகியைக் கௌரவிப்பதற்காகத்தான் நான் வந்தேன். தியாகி இங்கு மட்டுமல்ல மலையகத்திலும் பல பிள்ளைகளுக்குப் புலமைப்பரிசில் வழங்கியுள்ளார்.

இதை அவராகவே முன் வந்து செய்துள்ளார். மலையகத்திலும் ஏதாவது செய்யவேண்டும் என்று கூறி பல உதவிகளைச் செய்துள்ளார் - என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் தனதுரையில் தெரிவித்ததாவது:-

அனர்த்தம் நிகழ்ந்தவுடன் கத்தோலிக்க மதகுருமார் வந்து சேவை செய்தார்கள். இந்து ஆலயங்கள் சமூகப் பணிகளில் ஈடுபடுவதில்லை. அவர்கள் இராஜகோபுரம் கட்டுகிறார்கள் - மதில் கட்டுகிறார்கள் - அன்னதானம் செய்கிறார்கள் இதை நான் வெட்கத்துடனேயே கூறுகிறேன். இந்து ஆலய தர்மகர்த்தா சபையினரும் சமூகப் பணிகளில் ஈடுபட முன்வரவேண்டும் - என்றார்.

மல்லாகம் மாவட்ட நீதிபதி சரோஜினி இளங்கோவன் தனதுரையில் தெரிவித்ததாவது:-

தனி மனிதர் தனது தனி முயற்சியால் நலிவுற்ற மக்களுக்குச் செய்யும் சேவை பரந்த மனப்பான்மையுடையது. இச்சேவைக்கு அனைவரும் பங்களிக்க வேண்டும் - என்றார்.

அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதி எஸ்.பரமநாதன் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற இறைவாக்கிற்கிணங்க சேவையாற்றி வருவதே தியாகி - என்றார்.

ஓய்வுபெற்ற அதிபர் சந்திரசேகரம் உரையாற்றுகையில். தியாகியின் பணி மிக முக்கியமானது. அதிலும் கல்விக்கு அவர் ஆற்றும் பணி மிகவும் முக்கியமானது - என்றார்.

கல்விப் பணிப்பாளர் விக்கினேஸ்வரன். பொருண்மிய நிறுவனத்தைச் சேர்ந்த தேவா உட்படப் பலர் உரையாற்றினார்கள்.

இந்நிகழ்வில் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரிக்கு நூல்களும். இளம்பிள்ளைவாதத்தினால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு சக்கர நாற்காலியும் தியாகி அறக்கொடை நிலையத்தால் அன்பளிப்புச் செய்யப்பட்டன. தையல் பயிற்சி பெற்றவர்களுக்கு சான்றிதழும் வழங்கப்பட்டது.

மலையக மக்கள் முன்னணி தலைவர் சந்திரசேகரன் தியாகி அறக்கொடை நிலையத்திற்குப் பத்தாயிரம் ரூபாவை அன்பளிப்புச் செய்தார். (8)

## தையல் பயிற்சி நெறி

வலி.தென்மேற்கு,ஜன.25

யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபை பண்டத்தரிப்புப் பரிஷ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின அனுசரணையுடன் நடத்தும் மகளிருக்கான இலவச தையல் மற்றும் மனைப்பொருளியல் பயிற்சி நெறி அடுத்த மாதம் 6 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

பண்டித்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் ஆறுமாத காலம் நடைபெறவுள்ள இப்பயிற்சி நெறியில் தையல், மனைப்பொருளியல், பூ வேலை, தலையலங்காரம், தலைமைத்துவம், கூட்டுறவு ஆகியன உட்படப் பல்வேறு பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. (8-135)

## இறுவட்டு வெளியீடு

யாழ்ப்பாணம்,ஜன.25

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி சித்திரத் துறை நான்காம் அணி உள்ளகப் பயிற்சி மாணவன் இறக்காமம் ஜனாப் எஸ்.எல்.எம்.குத்தூஸின் 'கல்லூரித்தாயில் முகிழ்ந்த இதழ்கள்' எனும் இறுவட்டு வெளியீட்டு விழா நாளைமறுதினம் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ள இந்நிகழ்வில் ஆசியுரையை பீடாதிபதி கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதனும் அறிமுகவுரையை நுண்கலை மன்றக்காப்பாளர் க.ரட்ணேஸ்வரனும் வெளியீட்டு உரையை யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜாவும் நிகழ்த்தவுள்ளனர். (ஐ-12)

# புதிய கப்பல்களையும், தாக்குதல் படகுகளையும் கொள்வனவு செய்வதில் கடற்படைத் தளபதி ஆர்வம்

கொழும்பு,ஜன.25

இலங்கைக் கடற்படை சுனாமியால் நாசமாக்கப்பட்டுள்ள தனது தளங்களை மீளக்கட்டி எழுப்புவதற்கே கிடைக்கவிருக்கும் வெளிநாட்டு நிதி உதவிகளின் பெரும்பகுதியைப் பயன்படுத்திக்கொள்ளவிருக்கும் அதேசமயம், கடற்படைக்கெனப் புதிய கப்பல்களையும் போர்ப்படகுகளையும் கொள்வனவு செய்வதற்கு கடற்படைத் தளபதி தயா சந்தகிரி ஆர்வம் காட்டிவருவதாகத் தெரியவருகிறது.

இந்தவகையில், ரூபா 358 மில்லியன் செலவில் புதிய கப்பல்கள் வாங்கக் கடற்படை விரும்புவதுடன், 10 விரைவு தாக்குதல் படகுகளை வாங்கவும் விரும்புவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கொழும்பு டொக்யார்ட் லிமிட்டட் ஸ்தாபனத்துடன் 10 தாக்குதல் படகுகளை கொள்வனவு செய்தவற்கென டிசெம்பர் 21 ஆம் திகதியே தளபதி சந்தகிரி ஓர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுவிட்டார் என்று கொழும்புப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டிருக்கின்றது. சுனாமி தாக்கத்தின் காரணமாகத் தனது மக்களின் நலனைக் கட்டியெழுப்புவதில் விடுதலைப் புலிகள் முழுமூச்சாக ஈடுபட்டிருக்கின்றார்கள். போர் ஒன்றைப்பற்றி அவர்கள் இப்போது எதுவித அக்கறையும் கொண்டிராத நிலையில் 3000 மில்லியன் ரூபா செலவில் தாக்குதல் படகுகளைக் கொள்முதல் செய்ய ஏன் இவர்கள் அவசரப்படுகிறார்கள் என்பது விளங்காமலிருப்பதாக அப் பத்திரிகை விமர்சனம் செய்துள்ளது. (ப)

# அனர்த்தத்தில் உயிரிழந்தோருக்கான ஆத்மசாந்திப் பிரார்த்தனைகள்

யாழ்ப்பாணம்,ஜன.25

சுனாமி இயற்கை அனர்த்தத்தினால் பெரும் எண்ணிக்கையான மக்கள் பாதிக்கப்பட்டும், உயிரிழந்தும் இன்றுடன் 31 நாள்கள் நிறைவடைகின்றன.

பாதிக்கப்பட்ட மக்களின் நலன் வேண்டியும், உயிரிழந்தவர்களின் ஆத்மா சாந்தி பெறவும் பல இடங்களில் பூசை வழிபாடுகள் நடைபெறுகின்றன.

பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ள ஆலயங்களின் விவரம் வருமாறு:-

யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில், கடந்த மாதம 26ஆம் திகதி இடம்பெற்ற இயற்கை அனர்த்தத்தில் சிக்கி உயிரிழந்த மக்களின் ஆத்மா சாந்தியடையவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆத்ம பலம் வேண்டியும் நாளை புதன்கிழமை விசேட பிரார்த்தனை நிகழ்வு இடம்பெறும்.

காலை 6.45 மணிக்கு விசேட பூசை நடைபெற்று மோட்சதீபம் ஏற்றப்படும். தொடர்ந்து 9 மணிக்கு விசேட அபிஷேகமும் பூஜையும் மோட்ச அர்ச்சனையும் நடைபெற்று கூட்டுப் பிரார்த்தனை இடம்பெறும். (8-204)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜன.25

வழக்கம்பரை முத்துமாரியம்மன் ஆலயத்தில அண்மையில் இடம்பெற்ற இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான மக்களின் நலன் வேண்டியும் உயிரிழந்தவர்களின ஆத்மா சாந்தியடையவும் நாளை புதன்கிழமை ஒளி விளக்குகள் ஏற்றப்பட்டு விசேட ஆராதனைகள் நடைபெறவுள்ளன.

ஆயிரத்து எட்டு விளக்குகள் ஏற்றப்பட்டு நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளைத் தொடர்ந்து அஞ்சலி உரைகள் நடைபெறும். (8-204)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜன.25

சுனாமி கடல் பேரலையின் போது பலியானவர்களை நினைவுகூர்ந்து இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணியளவில் யாழ். மரியன்னை பேராலயத்தில் விசேட திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். (8-190)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜன.25

இயற்கை அனர்த்தத்தின்போது இறந்தவர்களை நினைவுகூரும் பொது ஆராதனை வழிபாடு நாளை புதன்கிழமை மாலை 5 மணியளவில் யாழ். திருமறைக் கலாமன்றத்தில் நடைபெறும். (8-190)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜன.25

இயற்கை அனர்த்தத்தின்போது இறந்தவர்களுக்கான பிரார்த்தனை இன்று காலை 6.30 மணிக்கு பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெறும். (8-190)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜன.25

ஆழிப்பேரலை அனர்த்தத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் உயிரிழந்த மக்களின் 31ஆம் நாள் கண்ணீர் அஞ்சலியும் இரங்கல் திருப்பலியும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.45 மணிக்கு முல்லைத்தீவு புனித சூசையப்பர் சிற்றாலயத்தில் நடைபெறும். (8-7)

### உயர்பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள

# தெல்லிப்பழை கூட்டுறவுச் சங்க கட்டடத் தொகுதி திறந்துவைப்பு

வலி.வடக்கு,ஜன.25

உயர்பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

80 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட சங்கத்தின் தலைமைக் காரியாலயம் மொத்த, சில்லறை விற்பனை நிலையங்கள் என்பவை திறந்துவைக்கப்பட்டன.


சங்கத் தலைவர் சி.சிவமகாராசா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், முன்னாள் யாழ்.மாவட்ட அரச அதிபரும், உலக வங்கியின் வடக்கு - கிழக்கு புனர்நிர்மாண வீடமைப்புத் திட்டப் பணிப்பாளருமான செ.பத்மநாதன் நாடாவை வெட்டிக் கட்டடத் தொகுதியைத் திறந்துவைத்தார்.

முன்னதாக மங்கள விளக்கினை 515 ஆவது படையினின் கட்டளைத் தளபதி மோகன் ஜெயவர்த்தன, யாழ். மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, கூட்டுறவு உதவி ஆணையாளர் கனகசபாபதி ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

முதன்மை விருந்தினர்களாகக் கலந்துகொண்ட முன்னாள் அரச அதிபர் செ.பத்மநாதன மற்றும் மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி ஆகியோர் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்பட்டனர்.

தொடர்ந்தும் இடம்பெற்ற நிகழ்வில் கூட்டுறவுச் சங்கங்களின் கிராமிய வங்கிகளின் சமாசத் தலைவர் செ.குமாரவேலு, நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் க.கிருஷ்ணராசா, கட்டைவேலி - நெல்லியடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ஆ.சிதம்பரப்பிள்ளை, கூட்டுறவுக் கணக்காய்வுப் பகுதி உதவி ஆணையாளர் க.சிவலிங்கம், பதில் முகாமையாளர் அ.கமலசிங்கம் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

இந்நிகழ்வுகள் உயர்பாதுகாப்பு வலயத்தில் இடம்பெற்றபோதிலும் இருநூறுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (8-86)



ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் மற்றும் தொழிற் சங்கங்களின் உறுப்பினர்கள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று 'உதயன்' விருந்தினர் விடுதியில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட ஊவா மாகாண முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே.வேலாயுதம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் வ.கணேசமூர்த்தி, அதன் துணைப் பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம், ஆடைத் தொழிற்சாலைத் தொழிலாளர்களின் மத்திய நலன்புரி நிலைய இணைப்பாளர் திருமதி எஸ்.புஸ்பராணி, சர்வதேச தகவல் பரிமாற்று நிறுவக ஆசியப் பிராந்திய இணைப்பாளர் பற்றீசியா லோட் இறைன் ஆகியோரைப் படங்களில் காணலாம்.

*(படங்கள்:- அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி, தொலைநகல் - 222 2030, 222 2083, 222 3837.

## குழப்பும் ஜே.வி.பி.

'காலைச் சுற்றிய பாம்பு கடிக்காமல் விடாது' என்பார்கள். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பொறுத்தவரை அதுதான் இப்போதைய அனுபவப் பாடமாகும்.

மக்களால் ஆறு வருடங்கள் ஆட்சி செய்வதற்குத் தெரிவுசெய்யப்பட்ட - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான - ஐக்கிய தேசிய முன்னணி அரசை நேர காலத்துடன் வீட்டுக்கு அனுப்பிவிட்டு ஆட்சி அதிகாரத்தைப் பிடிக்கத் திட்டமிட்டார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. அதற்கான ஜே.வி.பி. என்ற - பேரினவாத நஞ்சைக் கக்குகின்ற - சர்ப்பத்துடன் கூட்டமைத்துக் கொண்டார் அவர். அதைப் பயன்படுத்தித் தமது திட்டப்படி - எதிர்பார்ப்புப்படி - ஆட்சியையும் கைப்பற்றிக்கொண்டார். ஆனால், அவர் தேடி அணைத்ததால் அவரது காலைச் சுற்றிய பாம்பு கடிக்காமல் விடுவதில்லை என்பதில் குறியாக இருப்பதாகத் தெரிகின்றது.

ஐந்து தசாப்தகால இனப்பிரச்சினைக்கு - இரண்டு தசாப்தகால மோசமான இனப்போருக்கு - அமைதி வழியில், சமாதான முறையில், இணக்கத் தீர்வு காண்பதற்கு முன்னைய ஐ.தே.மு. அரசு எடுத்த சமாதான முயற்சிகளை, ஆட்சியைப் பிடிக்கவேண்டும் என்ற குறுகிய அரசியல் லாப நோக்குக்காகப் போட்டுடைத்தார் ஜனாதிபதி குமாரதுங்க.

பௌத்த, சிங்கள மேலாண்மைப் போக்கும் பேரினவாதச் சிந்தனையும் கொண்ட ஜே.வி.பி.யுடன் கூட்டமைத்து ஆட்சியைப் பிடிக்க சித்தம் கொண்ட ஜனாதிபதி குமாரதுங்க, ஜே.வி.பிக்குப் பிடித்தமானதை நிறைவு செய்யும் வகையில் அதுவரை கட்டி எழுப்பப்பட்ட சமாதான முயற்சிகளைப் போட்டுடைத்தார்.

சமாதான வழியில் தீர்வு காண்பதற்கு - அமைதி வழியில் இணக்கத்தை எட்டுவதற்கு - கிடைத்த வாய்ப்பைக் குழப்பியடித்த ஜனாதிபதி குமாரதுங்க அந்த வினைக்கான பயனை அறுவடை செய்யவேண்டிய நிலைக்குத் தற்போது தள்ளப்பட்டிருக்கின்றார்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் ஏற்பட்ட சேதங்களை ஒட்டிச் செய்யப்படவேண்டிய மீள் கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்கு அரசும், புலிகளும் சேர்ந்து இணக்கமான கட்டமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டும் எனச் சர்வதேச சமூகம் அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றது.

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் இலங்கைத் தீவுக்கு ஏற்பட்டது பெருஞ்சேதம். அந்த அழிவிலிருந்து நாட்டை மீளக் கட்டியெழுப்புவதாயின் அதற்குப் பெரும் தொகை நிதி தேவை. சர்வதேச சமூகத்தின் உதவியின்றி இத்துணை நிதியைப் பெறமுடியாது. சர்வதேச சமூகத்தின் உதவிகளைப் பெறுவதாயின் இவ்விகாரம் தொடர்பாக அது முன்வைக்கும் நிபந்தனைகளை அரசு ஏற்றாக வேண்டும்.

எனவே உதவிகளைப் பெற்று அதைப் பாதிக்கப்பட்டோருக்கு உரியமுறையில் பகிர்ந்தளிக்கவும், பயனாளிகள் பாரபட்சமின்றி உரியவற்றை - உரிய முறையில் - உரிய அளவில் - பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்தவும், அரசும் புலிகளும் சேர்ந்து இணக்கமான கட்டமைப்பு ஒன்றை - பொறிமுறை ஒன்றை - கண்டாகவேண்டும் என்று சர்வதேச சமூகம் வலியுறுத்துகின்றது. அந்தச் சமூகத்தின் தாராள உதவியைத் தங்கு தடையின்றிப் பெற்றுத் தனது நாட்டையும், மக்களையும் உயர்த்த வேண்டும், மீள்கட்டுமானப் பணிகளை விரைந்து, உரிய முறையில் மேற்கொள்ள வேண்டும் என்றெல்லாம் அரசு கருதுமானால் சர்வதேச சமூகத்தின் இக்கோரிக்கையை சாதகமாகப் பரிசீலித்து அதற்கேற்ப இணங்க - இயங்க - செயற்பட - அது முன்வர வேண்டும்.

அப்படிச்செயற்பட அரசும் ஜனாதிபதியும் விரும்பினாலும் கூட - சர்வதேச சமூகத்தின் எதிர்பார்ப்புக்கமைய, ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண மீள்கட்டுமானப் பணிகளுக்கு புலிகளுடன் இணைந்து இயைபான கட்டமைப்பு ஒன்றை உருவாக்க ஜனாதிபதியும் அவரது சகாக்களும் இணங்கிப் போனாலும் கூட - அப்படி ஓர் இணக்கம் ஏற்படுவதை அனுமதிப்பதற்கு அரசுக் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. தயாரில்லை என்பது தெட்டத் தெளிவாகியிருக்கின்றது.

ஏற்கனவே அரசுக் கூட்டமைப்பில் நீடிப்பது தொடர்பாக ஜே.வி.பி. ஒன்றுக்கொன்று முரணான சமிக்ஞைகளை வெளிப்படுத்தி வருகின்றது.

ஆனாலும் கூட்டமைப்புக்குள் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான லடாய் உச்சக்கட்டத்தை அடைந்திருப்பதாகச் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

சுதந்திரக் கட்சியின் முக்கிய இரு பிரமுகர்களுக்கு - அமைச்சர்களுக்கு - கூட்டமைப்பு விவகாரம் தொடர்பாகக் காரசாரமான கடிதங்களை அனுப்பிவைத்திருக்கின்றது ஜே.வி.பி.

அந்தச் சிக்கல் ஒருபுறம் நீடிக்கும் நிலையில்தான் ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின்னரான வடக்கு - கிழக்கு புனர்நிர்மாண நடவடிக்கைகளில் விடுதலைப் புலிகளையும் இணைத்துக்கொள்வதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்க தெரிவித்திருக்கின்றார்.

"முறையான அரசு ஒன்று அதன் உத்தியோகபூர்வ நடவடிக்கைகளில் ஆயுதம் தாங்கி அரசை எதிர்த்துப் போராடிய இயக்கம் ஒன்றை உள்ளீர்க்கமுடியாது. அப்படிச் செய்வது அந்த ஆயுதக் குழுவின் நிர்வாகத்தை ஏற்றுக் கொள்வதாக அமையும். இதனை ஜே.வி.பி. ஒருபோதும் அனுமதிக்காது" - என்றும் அவர் கூறியிருக்கின்றார்.

புலிகளோடு சேர்ந்து இணக்கமான பொதுக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்கும் முயற்சியில் அரசுத் தரப்பு விரும்பியோ விரும்பாமலோ இறங்கி வந்து, விட்டுக் கொடுத்து, உடன்பட்டுப் போவதற்குத் தயாராகும் இச் சந்தர்ப்பத்தில்தான்

'வெண்ணெய் திரண்டு வரும் சமயத்தில் சட்டியைப் போட்டு உடைப்பது போல' விவகாரத்தைக் குழப்பியடிக்கும் வகையில் கருத்து வெளியிட்டுத் தூள் கிளப்பியிருக்கின்றார் ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்க.

கூடாத கூட்டம்தனைக் கூட்டிக்கொண்டு கூட்டமைத்ததால், இப்போது நல்லவற்றையும் - கட்டாயம் செய்தாக வேண்டியவற்றையும் - செய்யவிடாமல் அரசினதும் ஜனாதிபதியினதும் காலை வாருகின்றது ஜே.வி.பி.!

# அடையாள அட்டை மீளப் பெறுவதற்கு பொலிஸ் அறிக்கை தேவையில்லை

## கிராம அலுவலரின் கடிதம் மட்டும் போதும் என அறிவிப்பு

வலி.மேற்கு.ஜன.25

அடையாள அட்டையைத் தொலைத்தவர்கள் மீண்டும் அடையாள அட்டையைப் பெறுவதற்கு பொலீஸில் முறைப்பாடு செய்து அறிக்கையைச் சமர்ப்பிக்கத் தேவையில்லை என்று ஆள்பதிவு திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

அடையாள அட்டை தொலைந்தமை தொடர்பாகக் கிராம அலுவலரிடம் முறைப்பாடு செய்து அந்த முறைப்பாட்டு அறிக்கையை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புவதன் மூலம் அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று ஆணையாளர் நாயகத்தினால் பிரதேச செயலர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பப் படிவத்தில் முத்திரை ஒட்டத் தேவையில்லை எனவும் தொலைந்த அடையாள அட்டையின் இலக்கத்தை விண்ணப்பத்தில் குறிப்பிட்டு அனுப்பி வைத்தல் வேண்டும் எனவும் அந்தச் சுற்றறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் பொலீஸில் முறைப்பாடு செய்த அறிக்கையை விண்ணப்பத்துடன் அனுப்பிவைக்கவேண்டும் என்ற நடைமுறை இருந்துவந்தமை குறிப்பிடத்தக்கது.

(10-175)

## பண்டத்தரிப்பு வைத்தியசாலையில் ஏற்பு நோய் தடுப்பூசி மருந்து

வலி.தென்மேற்கு.ஜன.25

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலையில் நோயாளர்களுக்கு ஏற்பு நோய் தடுப்பு ஊசி மருந்து கடந்த வாரம் தொடக்கம் ஏற்றப்பட்டு வருகின்றது.

இந்த வைத்தியசாலைக்கு அண்மையில் மின்சார வசதி ஏற்பட்டதை அடுத்து இங்குள்ள குளிர்சாதனப் பெட்டி செயற்பட ஆரம்பித்துள்ளது.

யாழ்.சுகாதாரத் திணைக்களம் ஏற்பு நோய் தடுப்பு ஊசி மருந்தைக் கடந்த வாரம் இவ்வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்ததை அடுத்து நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் நோயாளர்களுக்கு ஏற்புநோய் தடுப்பு ஊசி மருந்து ஏற்றப்பட்டு வருகின்றது. (10-135)

## கொரிய நாட்டின் பிரதிநிதிகள் நிவாரணப் பொருள்களுடன் வருகை

யாழ்ப்பாணம்.ஜன.25

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்குக் கொரிய அரசு நிவாரண உதவிகளை வழங்கியுள்ளது.

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் ந.யோகராஜனின் கோரிக்கைக்கமைய கொரிய அரசின் இலங்கைக்கான பிரதிவதிவிடப் பிரதிநிதி ஜொங்ஆலோ தலைமையில் 34 பேர் கொண்ட குழுவினர் நிவாரணப் பொருள்களுடன் நேற்று யாழ். வந்தனர்.

இக்குழுவில் கொரிய நாட்டு வைத்தியர்களும், பல்கலைக்கழக மாணவர்களும் அங்கம் வகிக்கின்றனர்.

இக்குழுவினர் ஒருவார காலம் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து யாழ். தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களுடன் இணைந்து தாம் கொண்டுவந்த கற்றல் உபகரணங்களையும், மருந்துப் பொருள்களையும் பகிர்ந்தளிக்கவுள்ளதுடன், பல்வேறு உதவி நடவடிக்கைகளிலும் ஈடுபடவுள்ளனர். (10-202)

**சுனாமி வேலிகளை அடித்துச் சென்றதால்**

## வலி.மேற்குப் பிரதேச நெல்வயல்களை அழித்துவரும் கட்டாக்காலி மாடுகள்

வலி.மேற்கு.ஜன.25

பொன்னாலைப் பிரதேசத்தில் கடற்படையினரால் அமைக்கப்பட்ட கம்பிவேலிகள் சுனாமி அனர்த்தத்தினால் அடித்துச் செல்லப்பட்டுள்ளமையால் கட்டாக்காலி மாடுகள் நெல் வயல்களுக்குள் புகுந்து பயிர்களை அழித்து வருவதாக அப்பிரதேச விவசாய சம்மேளனங்கள் தெரிவித்துள்ளன.

இதனால் விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு வழங்கவேண்டுமென வலி.மேற்குப் பிரதேச விவசாயக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வலி.மேற்கு பிரதேச விவசாயக் குழுக் கூட்டம் பிரதேச செயலர் சீ.எம்.மோகன்றாஸ் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

பொன்னாலையில் முகாமிட்டிருக்கும் கடற்படையினர் காரைநகர் பகுதியில் இருந்து பொன்னாலை, சுழிபுரம், மூளாய் பகுதிகளில் உள்ள வயல் நிலங்களுக்குள் கட்டாக்காலி மாடுகள் செல்லாமல் தடுப்பதற்கு கம்பிவேலி அமைத்திருந்தனர்.

சுனாமி அனர்த்தத்தினால் இந்தக் கம்பிவேலிகள் அனைத்தும் அள்ளிச்செல்லப்பட்டுவிட்டன. கடற்படையினருக்கும் பலதடவைகள் விவசாயக் குழுக் கூட்டத்திற்குச் சமுகளிக்குமாறு அவர்கள் அழைப்பு விடுத்தும் அவர்கள் கூட்டங்களில் கலந்துகொள்வதில்லை. கம்பி வேலிகளையும் மீள அமைக்கவில்லை.

இதனால் நெற்பயிர்களைக் கட்டாக்காலி மாடுகள் நாள்தோறும் அழித்து வருவதாக விவசாயச் சம்மேளனங்களின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மீனவர்களைப் போலத் தாமும் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயச் சம்மேளனங்களின் பிரதிநிதிகள் அக்கூட்டத்தில் தெரிவித்தனர். (10-175)

## கடனைச் செலுத்தாதவர்கள் மீது சட்ட நடவடிக்கைக்கு முஸ்தீபு

வலி.தென்மேற்கு.ஜன.25

மானிப்பாய் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தில் சுழற்சி முறையிலான சுயதொழில் முயற்சிக்கடன் பெற்றவர்களில் நீண்ட காலமாகியும் கடனைத் திருப்பிச் செலுத்தாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு சங்க நிர்வாகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

(10-135)

## பண்டத்தரிப்புப் பட்டினத்தில் வீதி விளக்கு இன்றி மக்கள் சிரமம்

வலி.தென்மேற்கு.ஜன.25

பண்டத்தரிப்பு பட்டினப் பகுதியிலுள்ள முக்கிய வீதிகளுக்கு வீதி விளக்குகள் பொருத்தப்படவில்லை.

இதனால், இரவு வேளையில் மக்கள் போக்குவரத்தில் சிரமங்களை எதிர்நோக்குவதுடன் திருடர் பயமும் அதிகரித்துள்ளது.

வலி.தென்மேற்கு பிரதேச சபை பொருத்தமான இடத்தில் வீதி விளக்குகளைப் பொருத்துவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் ஒன்றை கடந்த ஆண்டு ஜூலை மாதம் 7ஆம் திகதி மானிப்பாயிலுள்ள தலைமை அலுவலகத்தில் நடத்தியது .

பல பொது நிறுவனங்கள், சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு தத்தமது பகுதிகளில் வீதி விளக்குகள் பொருத்தவேண்டிய இடங்கள் பற்றிய விவரங்களைச் சமர்ப்பித்திருந்தனர்.

பண்டத்தரிப்பு கிராம அபிவிருத்தி சங்கமும் பண்டத்தரிப்புப் பகுதியில் பிரதான வீதிகளில் மின் விளக்குப் பொருத்த வேண்டிய இடங்கள் பற்றிய விவரத்தை சமர்ப்பித்திருந்தது.

ஆனால் ஆறு மாத காலம் முடிவடைந்தும் இதுவரை வீதி மின் விளக்குகள் இப் பகுதியில் பொருத்தப்படவில்லை என்று கவலை தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை - சில்லாலை கிராம அபிவிருத்திச் சங்கமும் சில்லாலைப் பகுதியிலுள்ள பிரதான வீதிகளுக்கு மின் விளக்கு பொருத்தப்படவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளது.

வலி.மேற்கு பிரதேச சபையின் செயலாளருக்கு மேற்படி சங்கம் இது தொடர்பான கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது. (எ-135)

## போக்குவரத்தில் சிரமத்தை விளைவிக்கும் பண்டத்தரிப்பு–பெரியவிளான் பிரதான வீதி

வலி.தென்மேற்கு.ஜன.25

பண்டத்தரிப்பு - பெரியவிளான் பிரதான வீதி குண்டும் குழியுமாக மக்கள் போக்குவரத்திற்கு சீர்கெட்ட நிலையில் உள்ளது. பொது மக்களும் வாகனங்களும் பலத்த சிரமத்தின் மத்தியில் இவ் வீதியில் செல்லவேண்டியுள்ளது. எனவே, வீதியைத் திருத்துவதற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இளவாலைப் பகுதியிலுள்ள முள்ளானை வீதியும் நீண்டகாலமாகப் புனரமைப்புச் செய்யப்படவில்லை. இந்த வீதியின் இருபுறத்திலும் பற்றைகள், செடிகள் வளர்ந்து வீதியை ஆக்கிரமித்துள்ளன. இதனால் இவ்வீதிவழியாக சிறுவிளான் இந்து மயானத்துக்குப் பிரேதங்களைத் தகனக்கிரியைக்காகக் கொண்டு செல்வோரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாகவும் இதனைப் புனரமைப்புச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் இப் பகுதி மக்கள் மேலும் தெரிவித்தனர்.

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் பராமரிப்பில் இவ்வீதி உள்ளதால் மேற்படி பிரதேசசபை இதனைப் புனரமைப்புச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் இவர்கள் கருத்துத் தெரிவித்தனர். (எ-135)

**சுனாமியால் பாதிக்கப்பட்ட**

## உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு இலவச வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்.ஜன.25

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட இவ்வாண்டில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான இலவசக் கல்வி வழிகாட்டல்களை டயலொக் ஜி.எஸ்.எம். நிறுவனமும் தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒழுங்கமைப்பும் இணைந்து வழங்கவுள்ளன.

இத்திட்டத்தில் பாடக்குறிப்புகள், பரீட்சைக் குறிப்புகள் என்பவற்றைத் தவற விட்ட மாணவர்களுக்கு பிரபல ஆசிரியர்களின் பாடக் குறிப்புகள், கையேடுகள் என்பவற்றை அச்சிட்டு இலவசமாக வழங்குவதுடன், பிரபல ஆசிரியர்களின் அனுசரணையுடன் இலவச கருத்தரங்குகளையும் நடத்தவுள்ளனர்.

கருத்தரங்குகள் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை அண்மித்த பாடசாலைகளில் நாளை முதல் ஒரு மாத காலத்திற்குத் தினமும் பிற்பகல் 2.30 மணிமுதல் நடைபெறவுள்ளன.

முதற்கட்டமாக நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் இக்கருத்தரங்குகள் நடைபெறும்.

இக்கருத்தரங்கை தங்கள் பாடசாலையிலும் ஒழுங்குபடுத்த விரும்பும் நிர்வாகிகளும் மாணவர்களும் இல.401/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடனோ, 0773153873 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளுமாறு திட்ட இணைப்பாளர் ம.அருள்குமரன் தெரிவித்துள்ளார்.

(-202)

**நாளை**

தை 13
(26.01.2005)
புதன்கிழமை
திதி : பிரதமை
மாலை 6.41 வரை
நட்சத்திரம் : ஆயிலியம்
பின் இரவு 05.04 வரை
சுபநேரம் : 05.06 - 06.36
ராகுகாலம்: 12.36 - 02.06
(யாவும் பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

தனி மனிதனுடைய அல்லது நாட்டினுடைய வளர்ச்சிக்குத் திருப்தியின்மையே முதற்படியாகும்.
- ஆஸ்கார் ஒயில்ட்.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

கலர்மீன்கள், மீன்தொட்டிகள், லவ்பேட்ஸ், யாவா, பிஞ்சஸ, ஆபிரிக்கன் லவ்பேட்ஸ், கொக்கொடைல் குருவிகளும், கூடுகளும் மற்றும் அடுக்குச செவ்வரத்தை, றோசாக்கன்றுகள், குறோட்டன், பூச சாடிகள் அனைத்தும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 40/11, சீனியர்லேன், தட்டாதெருச்சந்தி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். (41246)

## தவறிவிட்டது

1¾ பவுண் நிறையுடைய கைச்சங்கிலி ஒன்று (23.01.05) அன்று சுன்னாகத்திற்கும் நீர்வேலிக்கும் இடையில் தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் யோ. பிலிப் கபிரியல் ஜோர்ச் வைத்தியசாலை, சுப்பிரமணியம் வீதி, சுன்னாகத்தில் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். T.P.: 021 2225689, 0776913056. (41224)

## வீட்டுப்பணிப்பெண் தேவை

வீட்டு வேலைகள் செய்வதற்குப் பணிப்பெண் தேவை (தங்கி நின்று வேலையாற்றுபவர் விரும்பத்தக்கது). தொடர்பு: R.விஸ்வலிங்கம், இல.235,கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (41183)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான நம்பர் - 01 பகிரா புறொயிலர் குஞ்சுகள் 26.01.05 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும். தொடர்பு: றாஜீவ் ஆனைக்கோட்டைச் சந்தி, T.P.: 222 2867, 222 3529, P.ரவி - தபாற கந்தோர் வீதி, சாவகச்சேரி, தாரகை - முதலாம் கட்டை, பருத்தித்துறை, ரஞ்சித் - 517, ஸ்ரான்லி றோட், ஸ்ரீராம் - பருத்தித்துறை பஸ்நிலையம் முன்பாக. (41203)

## இமயம் நாடகநூல்

சனிக்கிழமை இரவு 9 மணிக்கு வானொலியில் 'பெண்பார்க்கும் படலம்' நாடகம் கேட்டீர்களா?. கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் மாணவர்கள் படிப்பதற்கும் நடிப்பதற்கும் பொருத்தமான நாடகநூல் 'இமயம்'. (41211)

## திருமண சேவை

உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்களின் ஜாதகங்கள் எம்மிடம் உள்ளன. உங்கள் பிள்ளைகளின் வளமான வாழ்வுக்கு எமது திருமண சேவையை நாடுங்கள். த.சிவானந்தன், பிரபல சோதிடர், 264, பலாலி வீதி, கந்தர்மடம். (41032)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், விசாகம், 35 வயது நிரம்பிய சிவந்த பெண்ணிற்கு (பாவம் 72) பெற்றோர் வெளிநாட்டில் அல்லது உள்நாட்டில் மணமகனை எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: விளம்பர இல. 2484, மே/பா. உதயன. (41231)


## அதிரடி மலிவு விற்பனை

P IV 2.4 GHZ கணனி
- ஒரு வருட உத்தரவாதம் -
தொடர்புகளுக்கு: நோர்த் கொம்வேல்ட் கொமினிக்கேஷன்,
415/1, நாவலர் வீதி, யாழ்.
T.P.: 0777 273629, 021 222 6092.



# IELTS

Learn with Professionals
*Duration: One month (Crash Course)*
*Fees:Rs.4000 (No Registration Fees)*

UniVentures Institute
55, Martin Road, Jaffna.
021 222 7666
UNIVENTURES
(C/40620((42-11-15)


## 31ஆம் நாள் துயரத்துளிகள்



செல்வன்

### இராஜேந்திரன் நிஷாந்தன்

| சுந்தரனாய் மண்ணில் | சுனாமியால் விண்ணில் |
|---|---|
| 1983-07-20 | 2004-12-26 |

அன்பிற்கு ஒரு மகனே ஆசை உடன்பிறப்பே!
இயற்கையின் சீற்றத்திற்கு இரையாகவா உனை வளர்த்தோம்?
மாயவாழ்வு இதுவெனக் காட்டி ஒரு நொடியில் மறைந்ததேனோ?
காலங்கள் கடந்திடினும் எம் கண்ணில் ஈரம் என்றும் காய்ந்திடாது.

எம் செல்வத்துடன் கீரிமலையில் சுனாமிக்கு இரையான அனைத்து உறவுகளினதும் ஆத்மா சாந்தியடைய ஆறாத்துயருடன் ஆண்டவனை வேண்டுகின்றோம்.

*கரளிகோயிலடி, மல்லாகம்.* (41239)(24-11-15-42)
காலமெல்லாம் கண்ணீருடன்: பெற்றோர், உடன்பிறப்புகள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

*அன்னை மடியில்* 17 – 07 – 1949



*இறைவன் அடியில்* 05 – 02 – 2004

### அமரர் கந்தையா வடிவேலு (பூராசா)

எங்கள் ஆருயிர் தெய்வமே!
பாசத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து
ஓராண்டிற்குள் எங்கள் அன்பு
பாசத்தையும் காட்டி சடுதியில்
மறைந்து விட்டீர்களே அப்பா!
ஆயிரம் உறவு இருந்தென்ன?
அப்பா என்றழைக்க நீங்கள்
இல்லையே! ஓராண்டு மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் எம் நெஞ்சை
விட்டு அகலாது அப்பா!

*உங்கள் ஆத்மா சாந்திடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*அம்மன் வீதி, பண்டத்தரிப்பு.* (41228)(42-11-14)
அன்பு மனைவி, பிள்ளைகள்.

## தைப்பூசத் திருவிழாவும் அன்னதானமும்

வருடாவருடம் நடைபெறும் தைப்பூசத் திருவிழா இன்று (25.01.2005) செவ்வாய்க்கிழமை யாழ்.கோட்டை முனீஸ்வரர் ஆலயத்தில் நடைபெறும் என்பதையும் அதைத் தொடர்ந்து அன்னதானமும் வழங்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

*யாழ்ப்பாணம் சிறைச்சாலை.* (41242)(42-11-15)
சிறைச்சாலை அத்தியட்சகரும் உத்தியோகத்தர்களும்.

## அறிவித்தல்

.பூர்வாங்க அளப்பனவு ஆணை
மாவட்ட நீதிமன்றம் - சாவகச்சேரி

**வழக்கு இல.: 7212**

மேற்படி வழக்கில் தம்பிஐயா சபாநாயகம் உத்தரவு பெற்ற நில அளவையாளராகிய யான் மேற்படி நீதிமன்றினால் ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளேன். எனவே, 2005-02-07ஆம் திகதியும் அதனைத் தொடர்ந்து வரும் நாள்களிலும் 1977ஆம் ஆண்டு 21ஆம் இலக்க பிரிவிடற் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி அளப்பனவு செய்யப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஆதன டாப்பு (பிரிவீடுதலுக்குரிய வாதனம்)

வடமாகாணம், யாழ். மாவட்டம், தென்மராட்சிப் பகுதி, வரணிக் கோவிற்பற்று, தாவளை, இயற்றாலை, இறைகுமரணி அல்லது மரணிவயல் நி.ப. 16. இதற்கு எல்லைகள்:

கிழக்கு : முத்துக்குமாருவுக்கும் சின்னையாவுக்கும் மறுபேருக்கும்,
வடக்கு : குளமும் அருளம்பலத்துக்கும்
மேற்கு : வேதாரணியம் சிதம்பரநாதருக்கும் உரிமைக்காரருக்கும்
தெற்கு : சின்னவன் கந்தவனத்திற்கும் மறுபேருக்கும்.

இதடங்கலும்.

(சி-40621)(24-11-15-42) த.சபாநாயகம், நீதிமன்ற ஆணையாளர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

*பிறப்பு* 26 – 05 – 1929



*இறப்பு* 26 – 12 – 2004

### அமரர் பேதுருப்பிள்ளை ஜோன்லோறேற்

~ தாளையடி ~

| | |
|---|---|
| அலைவந்து கரைமேவும் | கடல்வந்து உனைக் |
| தாழையம் பதியதிலே | காவிச் சென்றதுவோ? |
| தள்ர்வயதான போதும் | பொழுதுகள் மூ பத்துடன் ஒன்றும் |
| தனிநடை போடும் தாத்தா! | முழுதாய்க் கழிந்த போதும் |
| விடியலின் பொழுதில் - உம் | மனதோடு உம் நினைவென்றும் |
| திருமுகம் விழிகாணமுன்பே | மறையாது நிலைக்கும் தாத்தா! |

*அன்றைய தினம் இவருடன் சாவடைந்த* ஙவ.முத்தாச்சி, கு.பரமேஸ்வரி, அ.பிறின்சியா, அ.டனுஜியா, அ.டிலுஜியா, கி.ஜெனேஸ்வரன் *மற்றைய ஏனையோருக்கும் எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.*

*தாழையடி.* (41233)(42-11-15)
தகவல்: சுதா (பேரன் குடும்பத்தினர்).

## ஈர விழிகளுடன் ஈராண்டு நினைவுகள்



மண்ணில் 12.01.1922 மனதில் 18.01.2003

### தம்பு சிவபாக்கியன்

(திதி:25.01.2005)

பாசமுடன் எம்மைப் பக்குவமாய் வளர்த்து
நேசமுடன் சீர்தந்து நிறைந்த கல்வி நிதியும் – தந்து
பார்போற்ற வாழவைத்த பண்புமிகு தந்தையே!
எங்கள் விழிகள் எந்நேரமும் உங்களைத் தேடுதே
ஐயா என்றழைக்க நீங்களின்றித் தவிக்கிறோம்.
எங்கே ஐயா சென்றீர்கள்?
கண்ணியம் தவறாது கருத்தாய்க் காத்த எங்கள்
தெய்வமே!
கனவிலும் மறவோம் ஐயா என்றும் உங்களை!

198, சென். பெனடிக் றோட், அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.
- குடும்பத்தினர்.

## மணற்காட்டுப் பகுதியில் துப்புரவுப் பணி

தென்மராட்சி,ஜன.25

சுனாமி கடல் கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு மணற்காட்டுப் பகுதியைத் துப்புரவு செய்யும் பணியில் குடாநாட்டில் உளள பொது அமைப்புகளின் உறுப்பினர்கள், அரச உத்தியோகத்தர்கள, பாடசாலை மாணவர்கள் ஆகியோர் ஈடுபட்டு வருகின்றனர்.

தினமும் அனைத்துப் பிரதேசங்களிலிருந்தும் நூற்றுக்கு மேற்பட்டோர் சிரமதான முறையில் துப்புரவு செய்துவருகின்றனர்.

சேதமடைந்த கட்டடங்களை அப்புறப்படுத்தி மக்களை விரைவில் மீளக் குடியமர்த்துவதற்கு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(10-117)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

*அன்னையின் மடியில்* 26 – 05 – 1949



*எமதர்மன் பிடியில்* 26 – 12 – 2004

### அமரர் செல்லத்துரை இரத்தினசாமி

(சந்திரன். ஆம்ஸ்ரோங்)

வானத்து வண்ண நிலவாய்
சிறகடித்து சிரித்தாய் - ஐயா
காலத்தின் வலையில் - நீ
சுனாமியில் அகப்பட்டாயோ - ஐயா

ஐயா! இரத்தினசாமி ஐயா
உன் பெயர் மங்காதிருக்க
ஆம்ஸ்ரோங் சந்திரனோ - ஐயா
உன் பெயர் எப்ப உச்சரிப்பது

வானத்தின் வண்ணச் சூரியனை
சுட்டெரித்தாலும் இரத்தினசாமி
என்ற பெயர்
மங்காது - ஐயா

வானத்து வண்ண நிலவான
சந்திரனைச் சுட்டெரித்தாலும்
ஆம்ஸ்ரோங், சந்திரன் - என்ற
பெயர் மங்காது ஐயா

*ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை.*
- குடும்பத்தினர். (41235)(42-11-15)

# முல்லை மக்களை மீளக்குடியமர்த்த உரிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது

## கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை தகவல்

புதுக்குடியிருப்பு,ஜன.25

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவுப் பிரதேச மக்களை மீளக் குடியமர்த்த நடவடிக்கை எடுத்து வருவதாகக் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை தெரிவித்தார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பான கலந்துரையாடல் அண்மையில் முல்லைத்தீவு மீட்புப் பணிச் செயலகத்தில் நடைபெற்றது.

அதில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கேணல் சூசை தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

இடம்பெயர்ந்து அல்லற்படும் மக்களை அவர்களின் விருப்பப்படி தற்காலிகமாகக் குடியிருத்த நடவடிக்கை எடுக்கப்படும். பின்னர் 6 மாத காலத்துக்குள் அவர்களின் விருப்பத்தின் பிரகாரம் பாதுகாப்பான இடங்களில் அவர்கள் குடியமர்த்தப்படுவார்கள். மின்சாரம், குடிதண்ணீர் மற்றும் அத்தியாவசிய தேவைகள் நிறைவுசெய்யப்படும்.



இனிவரும் காலங்களில் சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்களுக்கு முகங்கொடுக்கத் தக்க வகையில் நகரத் திட்டமிடல் அமையும். முல்லைத்தீவு நகரத்திலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் குடியிருப்புகள் அமைப்பது தொடர்பாக திட்டமிட குழு ஒன்று விரைவில் முல்லைத்தீவுக்கு வருகை தரவுள்ளது என்று அவர் தெரிவித்தார். (எ-353-204)

## செஞ்சிலுவையின் உறவிணைத்தல் சேவை

கிளிநொச்சி,ஜன.25

சுனாமி அனர்த்தத்தின் போது காணாமற் போன நண்பர்கள், உறவினர்கள், பெற்றோர்கள், பிள்ளைகள் சம்பந்தமான தேடுதலுக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சிக் கிளையுடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி உறவிணைத்தல் சேவை இலவசமாக நடைபெறுகின்றது என்றும் -

சேவையைப் பெறவிரும்புபவர்கள் 021-228 5843 என்ற தொலைபேசி இலக்கம் - தொலைநகல் (பக்ஸ்) இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ)

# கால்நடை வைத்திய நிலையம் இதுவரை திறக்கப்படவில்லை

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்துக்குட்பட்ட கால்நடை வைத்திய உப நிலையம், கட்டி முடிக்கப்பட்டும் இதுவரை திறக்கப்படவில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மாங்குளத்தில் கட்டடம் அமைக்கப்பட்டு பல மாத காலமாகியும் இதுவரை திறக்கப்படவில்லை. இதனால் இக்கட்டடத்தை சுற்றி பற்றைக் காடுகள் வளர்ந்துள்ளன. அத்துடன் கட்டடத்தின் கதவு பலத்த சேதமாக்கப்பட்டுள்ளன.

மேற்படி நிலையம் செயற்படாமையினால் 24 கிலோமீற்றர் தூரத்திற்கு அப்பாலுள்ள ஒட்டுசுட்டான் கால்நடை வைத்திய நிலையத்திற்கே மக்கள் கால்நடைகளைக் கொண்டு செல்லவேண்டியுள்ளது.

இதனால் சம்பந்தப்பட்டவர்கள் இந்த நிலையம் இயங்கவைக்க உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என இப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (எ-341-204)

# வீதிகள் பலவும் பலத்த சேதமடைந்த நிலையில்

கிளிநொச்சி,ஜன.25

கிளிநொச்சிப் பிரதேசத்தில் உள்ள வீதிகளில் பலவும் பலத்த சேதமடைந்து போக்குவரத்துக்குப் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளன.

இதனால் இவ்வீதிகளால் போக்குவரத்துச் செய்யமுடியாது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

உதயநகர், வட்டக்கச்சிப் பிரதான வீதி, உருத்திரபுரம் மற்றும் கனகபுரம் போன்ற கிராமங்களில் உள்ள உள்வீதிகளே இவ்வாறு மிகவும் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன.

சம்பந்தப்பட்டவர்கள் இது விடயத்தில் உரிய கவனம் எடுத்துச் செயற்படவேண்டும் என பயணிகள் கோரியுள்ளனர். (எ-203-305)




# முல்லைத்தீவு மக்களுக்கு உதவ மன்னாரில் இருந்து சாரணர்கள்

புதுக்குடியிருப்பு,ஜன.25

முல்லைத்தீவில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் முகமாக மன்னார் மாவட்டத்திலிருந்து 16 பேர் கொண்ட சாரணர் குழுவினர் வருகைதந்துள்ளனர்.

இவர்கள் முள்ளிவளை வித்தியானந்தாக் கல்லூரியில் முகாம் அமைத்துத் தங்கியுள்ளனர். நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு அவர்கள் பல்வேறு வழிகளில் உதவி செய்துவருவதையும் காணமுடிகிறது.

இக்குழுவிலுள்ள சாரணர் ஒருவர் தமது சேவை குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில்:-

அனர்த்தம் என்று அறிந்து பாதித்த மக்களுக்கு உதவி செய்யப்போகிறோம் என்றவுடன் எமது பெற்றோர்களும் அனுமதி வழங்கினர்.

எமது அரச அதிபரிடம் முறைப்படி அனுமதி பெற்று எமது உறவுகளுக்கு உதவி செய்ய நாம் இங்கு வருகைதந்துள்ளோம் - என்றார். (எ-353-204)

# தமிழீழ வைப்பகத்தின் மாங்குளம் கிளையில் சிறப்புற நடந்த பரிசளிப்பு

மல்லாவி,ஜன.25

தமிழீழ வைப்பகத்தின் மாங்குளம் மற்றும் ஊரகக் கிளையில் 'சிறார் உண்டியல் கணக்கு' வைத்திருப்போரில் தெரிவுசெய்யப்பட்ட சிறுவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு கடந்த 19ஆம் திகதி நடைபெற்றது.

கிளை மேலாளர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் துணுக்காய் பிரதேச சபைச் செயலாளர் திருமதி த.கோமளவல்லி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இந்த வைப்பகத்தினால் அறிமுகம் செய்யப்பட்ட சிறார் உண்டியல் என்ற சிறப்புத் தேட்டத் திட்டத்தில் ஆண்டுதோறும் சேமிப்புத் தொகையின் அடிப்படையில் பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-322-204)

# ஒட்டுசுட்டான் கமநல நிலையத்தில் விவசாயிகள் கௌரவிப்பு நிகழ்வு

ஒட்டுசுட்டான்,ஜன.25

விவசாயத் திணைக்களமும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் இணைந்து நடத்திய சிறந்த விவசாயிகளைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த மாதம் ஒட்டுசுட்டான் கமநல அபிவிருத்திச் சேவை நிலையத்தில் சிறப்புற நடைபெற்றது.

முல்லை, மாவட்ட விவசாய உதவிப் பணிப்பாளர் கோகுலதாசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பொதுச் சுடரினை ஒட்டுசுட்டான் - மாங்குளம் கோட்டப் பொறுப்பாளர் ஈழவன் ஏற்றினார். தமிழீழத் தேசியக் கொடியினை முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஏற்றி வைத்தார்.


தொடர்ந்து முல்லை மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கனகரட்ணம் முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன், விவசாயபீட பாட விதான உத்தியோகத்தர் எஸ்.ஜெயராசா, விவசாயி சூ.நித்தியானந்தன் ஆகியோரின் சிறப்புரைகள் இடம்பெற்றன.

மானவாரிச்செய்கை, நீர்ப்பாசனச் செய்கை, உப உணவுச் செய்கை, மிளகாய்ச் செய்கை, நாற்று நடுகை, பழமரச் செய்கை என்பவற்றில் ஈடுபட்ட புதுக்குடியிருபபு, துணுக்காய் உடையார் கட்டு, குமுழமுனை, ஒட்டுசுட்டான், பாண்டியன் குளம், முத்தையன்கட்டு, ஒலுமடு முள்ளியவளை, அளம்பில் ஆகிய இடங்களைச் சேர்ந்த விவசாயிகள் கௌரவிக்கப்பட்டு பெறுமதிமிக்க விவசாயத் தேவைக்கான பரிசில்களும் காசோலைகளும் வழங்கப்பட்டன. (எ-341-204)







கடந்த சனிக்கிழமை முல்லைத்தீவுக்கு விஜயம் செய்த நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸன், அந்நாட்டின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் ஹில்டி எவ்.ஜோன்ஸன் அம்மையார், விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோர் அடங்கிய உயர்மட்டக் குழுவினர் சுனாமியால் பாதிப்படைந்த முல்லைத்தீவுப் பிரதேசத்தைப் பார்வையிடுவதையும், கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை, சமாதானச் செயலகப் பொறுப்பாளர் புலித்தேவன் மற்றும் அதிகாரிகளுடன் கலந்துரையாடுவதையும் படங்களில் காணலாம்.

இதோ! புதிதாக
ஆரம்பிக்கப்பட்டுள்ளது!

## மல்லிகை மிக்சர் தொழிலகம்

இன்று (25.01.2005) தைப்பூசம் முதல்
தரமான ~ ருசிமிக்க ~ சுவையான மிக்சர் விநியோகம்
நண்பர்கள், ஆதரவாளர்கள், அன்பர்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உரிமையாளர்: இராமசாமி சத்தியசீலன்
மானிப்பாய் வீதி, கூழாவடி,
ஆனைக்கோட்டை.

(41215)(21-11-18)

## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி

**26.12.2004** ஆழிப்பேரலையின் கோரப்பசிக்கு இரையான எமது சங்கப் பணிப்பாளரினதும் பணியாளர்களினதும் இரத்த உறவுகளை நினைந்து எம் கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்.

| பணிப்பாளர் | உறவு | உயிரிழந்தோர் |
|---|---|---|
| 1. செ.இரத்தினசிங்கம் | தாய் | செ.தங்கரத்தினம் |
| | சகோதரி | அ.நிர்மலாதேவி |

| பணியாளர்கள் | உறவு | உயிரிழந்தோர் |
|---|---|---|
| 1. சி.தவராசா | மனைவி | த.பரமதேவி |
| 2. வா.மோகனராசா | மகன் | மோ.யுனேஷ் |
| வா.மோகனராசா | மாமி | த.அன்னலட்சுமி |
| 3. சி.பேபி பத்மா | தாய் | வே.அன்னம்மா |
| சி.பேபி பத்மா | சகோதரி | து.சந்திரவதனா |
| 4. வே.இரவிச்சந்திரன் | தாய் | வே.சரஸ்வதி |
| 5. சி.கணபதிப்பிள்ளை | தாய் | சி.தங்கமலர் |
| ,, | சகோதரன் | சி.புஸ்பரஞ்சன் |
| ,, | சகோதரி | பொ.இந்திராதேவி |
| 6. வ.திருநாமக்கரசு | சகோதரி | து.இலட்சுமிதேவி |
| ,, | ,, | பு.நாகரத்தினம் |
| ,, | ,, | செ.மனோன்மணி |
| 7. வ.உதயலதா | சகோதரி | ச.உதயசசி |
| 8. க.பேரின்பநாயகி | சகோதரி | அ.திலகவதி |
| 9. ம.உபசிங்கம் | மாமி | வே.சின்னக்குட்டி |
| 10. கி.மனோரஞ்சன் | அம்மம்மா | ஆ.வள்ளிப்பிள்ளை |

மேலும் எமது சங்கப்பிரதேசத்தில் சுனாமியால் உயிரிழந்த 1038 மக்களினதும் மற்றும் ஏனைய பிரதேசங்களில் உயிரிழந்த மக்களினதும் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர்களும்-பணியாளர்களும்
வடமராட்சி கிழக்கு-ப.நோ.கூ சங்கம்
தாழையடி மருதங்கேணி.

(சி-40609)(21-11-18)

## 31 ஆம் நாளினிலே...

கடந்த **26.12.2004** அன்று கடற்பேரலையினால் காவுகொள்ளப்பட்ட யா/செம்பியன்பற்று றோ.க.த.க.பாடசாலை அதிபர் **சிவபாதம் ஜெயந்திரன்** அவர்களின் அன்பு மகள்

**சி.ஜெ.நிலானி**

மற்றும் எமது பாடசாலை மாணவர்களான:

| | |
|---|---|
| ம.பிரசாந் | தரம் 2 |
| ஜே.டினுசியா | தரம் 2 |
| பி.பிரித்தயாழினி | தரம் 4 |
| லோ.நிருஷியா | தரம் 4 |
| அ.சுவேனியா | தரம் 6 |

ஆகியோர்களையும் 2005ஆம் ஆண்டு தரம் 1இல் அனுமதி பெற இருந்து ஆழிப் பேரலையினால் காவுகொள்ளப்பட்ட மாணவர்களையும் இந்நாளில் நினைவு கூர்வதோடு இச்சிறார்களின் இழப்பினால் துயரடைந்திருக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து இவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/செம்பியன்பற்று றோ.க.த.க.பாடசாலை.

(41002)

O/L Completed ?
Your Next Step @ Asian.

இம்முறை O/L பரீட்சை எழுதிய மாணவர்க்கான
விசேட 3-4 மாத கால கொம்ப்யூட்டர் பாடநெறிகள்

- Diploma in MS Office
- Diploma in Computer Studies
- Diploma in Computer Programming
- Diploma in Computerized Accounting

ICM England Authorised Training Centre



ASIAN COMPUTER SYSTEMS

| 2 G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். | 108, K.K.S.வீதி, சுன்னாகம் (Jet Motors மேல் மாடி) | கொடிகாமம் வீதி நெல்லியடி. | கண்டி வீதி சாவகச்சேரி. |
|---|---|---|---|
| ✆ 021-222 5677 | ✆ 071-2501589 | ✆ 0773-122198 | ✆ 077-3039587 |

## மென் பொருள் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஜன.25

வடக்கு - கிழக்கு மோட்டார்ப் போக்குவரத்துத் திணைக்களத்தைக் கணனிமயப் படுத்தும் ஆரம்ப நிகழ்வும் மென்பொருள் வெளியீடும் கடந்த 19ஆம் திகதி யாழ். செயலகத்தில் அரச அதிபர் கே.கணேஸ் தலைமையில் இடம்பெற்றன.

ஏற்கனவே பல அரச, தனியார் நிறுவனங்களைக் கணனிமயப்படுத்திய எஸ்.ரி.பி.கணனி நிறுவனத்தினரால் இந்த மென்பொருள் தயாரித்து வெளியிடப்பட்டது.

இந்நிகழ்வில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பிரதேச செயலர்கள் மற்றும் அலுவலர்கள் உட்படப்பலர் கலந்துகொண்டனர். (ஜ.203)

## மூக்குக் கண்ணாடி அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.25

சமூக சேவைத் திணைக்களத்தின் அனுசரணையுடன் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் துணுக்காய், கிளிநொச்சி வலயப் பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடி, காது கேட்கும் உபகரணங்கள் என்பன வழங்கப்படவுள்ளன.

இதற்கான உபகரணத்தொகுதியுடன் உதவிக்கல்விப் பணிப்பாளர் க. சதானந்தன் இன்று வன்னி வருகைதரவுள்ளார் எனத்தெரிவிக்கப்பட்டது. (த-202)

## இன்று அறுவடைநாள்

தென்மராட்சி,ஜன.25

தென்மராட்சி தெற்குப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கையின் அறுவடை தைப்பூச தினமான இன்று ஆரம்பமாகுமென நெற்செய்கையாளர்கள் தெரிவித்தனர்.

நான்கு வருடங்களின் பின்னர் சுமார் 215 ஹெக்டெயர் நிலப்பரப்பில் இம்முறை மேற்கொள்ளப்பட்ட காலபோக நெற்செய்கை அமோக விளைச்சலைக் கொடுக்கும் என தெரிவிக்கப்படுகிறது. (10-117)

## அவசர சந்திப்பு

யாழ்ப்பாணம்,ஜன.25

யாழ்.பல்கலைக்கழக மீன்பிடியியல் டிப்ளோமா பயின்ற மாணவர்களுக்கான அவசர சந்திப்பு இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10மணிக்கு யாழ் பல்கலைக்கழக கடல் வள அபிவிருத்தி நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இச்சந்திப்பில் அனைத்து மாணவர் களையும் கலந்து கொள்ளுமாறு நீர் உயிர்வள ஆசிரியர் சங்கம் கேட்டுள்ளது. (10-204)

## கடற்றொழில் உபகரணங்கள் வழங்குமாறு வேண்டுகோள்

வலிமேற்குஜன.25

சுனாமி பேரழிவினால் கடற்றொழில் உபகரணங்களை முழுமையாக இழந்த சுழிபுரம் பகுதி மீனவர்கள் கடற்றொழில் உபகரணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வலிமேற்கு பிரதேச செயலரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சுழிபுரம் சவுக்கடி, புளியந்துறை, திருவடி நிலை ஆகிய கடற்பிரதேசங்களில் வாடிகளை அமைத்து மீன் பிடித் தொழிலில் முழுமையாக ஈடுபட்டு வந்த சுழிபுரம் பகுதி மீனவர்களில சுமார் 300 பேரின் மீன் பிடிவலைகள், வள்ளங்கள், கட்டுமரங்கள் முழுமையாகச் சுனாமி பேரழிவினால் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

மீனவர்களில் வாடிகளும் அழிந்து விட்டன. இதனால் மீனவர்கள், தற்காலிக கொட்டில்களை மீன்பிடித் துறைகளில் அமைத்துத் தருமாறும் மீன்பிடி உபகரணங்களை, வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் பிரதேச செயலரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (10-175)

## 3 ஆயிரத்து 220 பட்டதாரி பயிலுநர்கள் நியமனம்

வடக்கு - கிழக்கில் மாகாண பொது நிர்வாக அமைச்சின் கீழ் 3 ஆயிரத்து 220 பட்டதாரி பயிலுநர்கள் நியமனம் பெற்றுள்ளனர் என்று பொது நிர்வாக அமைச்சின் மாகாண செயலாளர் திருமதி கமலா சிவசிதம்பரம் தெரிவித்துள்ளார்.

இவர்களில் ஆயிரத்து 400 பேர் ஆசிரியர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

ஏனையோர் வடக்கு-கிழக்கின் பல வேறு அரச திணைக்களங்களுக்கு நியமனம் பெற்றுள்ளனர்.

பட்டதாரி பயிலுநர் நியமனத் திட்டத்தின் கீழ் நியமனம் பெற்ற பட்டதாரி பயிலுநர்களுக்கு அரச வர்த்தமானி அறிவித்தல் மூலம் நிரந்தர நியமனம் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(10-185)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 24 - 01 - 1964



உதிர்வு 26 - 12 - 2004

### திருமதி மேரி ஜெலன் அன்ரன்

*(கலா)*

ஈரிரண்டு வாரங்கள் ஆகியும்
ஈரவிழி காய மறுக்குதம்மா
காத்திருந்து அரவணைத்த உன் கைகள்
காலமெல்லாம் எமை விட்டுப் போனதேனோ?
நேற்று நீர் பேசிய வார்த்தைகள்
இன்னும் எம் காதில் ஒலிக்கிறதே
மலர்ந்த உன் வதனச் சிரிப்பை
வாழ்நாளில் காணக் கிடைக்குமா?

உம் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

செம்பியன்பற்று.

(41154)(21-11-18)

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 20 - 11 - 1938



விண்ணில் 25 - 01 - 1995

அமரர்

### பொன்னையா சிவலிங்கம்

(மருந்தாளர், மாநகரசபை, கொழும்பு)

மனிதரில் மாணிக்கமாய் மாந்தருள் திலகமாய்
புனித வாழ்வு வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே!
வருடங்கள் பல உருண்டோடினாலும்
உங்கள் நினைவுகள் என்றும்
எம் நெஞ்சைவிட்டு நீங்காது.

நீங்காத நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

18, இலந்தைக்குளம் வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்

(41130)(21-11-18)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 10 - 05 - 1930



மறைவு 28 - 01 - 2002

### திருமதி தம்பிஜயா நாகம்மா

(பரராசசிங்கம்)

திதி: தை பௌர்ணமி

ஆண்டுகள் மூன்று ஆகிவிட்டாலும்
உங்கள் நினைவலைகள்
எங்கள் நெஞ்சைவிட்டு
என்றும் நீங்கவே நீங்காது.

குடும்பத்தினர்.

இணுவில் மேற்கு
இணுவில்.

(சி-41202)(21-11-18)



சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குவதற்கென 'உதயன்' ஆரம்பித்துள்ள நிவாரணப் பணிக்கு வெரித்தாஸ் நேயர் மன்றத்தினர் ஒருதொகுதி பொருள்களை வழங்குவதை முதலாவது படத்திலும் சர்வ தேச இந்து குருமார் ஒன்றியத்தினர் பொருள்களைக் கையளிப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

ஆழிப்பேரலையில் சிக்கி மரணித்த

# 21 வெளிநாட்டினரின் சடலங்கள் அடையாளம் காணப்படவில்லை

கொழும்பு,ஜன.25

ஆழிப் பேரலைக்குள் சிக்குண்டு மரணித்த 21 வெளிநாட்டவர்களின் சடலங்கள் அடையாளம் காணப்படாமல் கொழும்பு பொலீஸ் நிலைய பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன. இவற்றை அடையாளம் காண்பதற்கு மேலைத் தேச நாடுகளின் உதவியைப் பொலீஸ் திணைக களம் கோரியுள்ளது.

சுனாமி அனர்த்தத்தில் கொல்லப்பட்ட 75 வெளிநாட்டவர்களின் சடலங்கள் பொலீஸ் நிலைய பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தன. அவற்றில் 54 சடலங்கள் அடையாளம் காணப் பட்டன. ஏனைய 21 சடலங்கள் அடையாளம் காணப்படாதபோதும் அவற்றில் 11 சடலங்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்களுடையவை எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மேலைத்தேச நாடுகளில் அடையாளம் காணமுடியாதவர்களை அவர்களின் பற்களை வைத்து அடையாளம் காணும் ஒரு முறையுள்ளது. தற்போது பிரான்ஸிலிருந்து வந்திருக்கும் வைத்திய குழுவொன்று அடையாளம் காணப்படாத சடலங்களின் பற்களைப் பரிசோதித்து அவற்றின் விவரங்களை ஆஸ்திரியாவின் தலைநகரான வியன்னாவிலுள்ள ஆய்வுகூடமொன்றுக்கு அனுப்பிவைத்துள்ளது. இறுதி முடிவு வரும்வரைக்கும் பூதவுடல்களைப் பாதுகாப்பதற்காக வெளிநாட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட குளிரூட்டப்பட்ட சொகலன்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன எனப் பிரதிப் பொலீஸ்மா அதிபர் ஜயந்த விக்கிரமரத்ன தெரிவித்தார்.

காலி உனவட்டுன கடற்கரையில் எட்டுச் சடலங்கள் புதையுண்டு உருக்குலைந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளன. அவை வெளிநாட்டவர்களின் சடலங்களாகவும் இருக்கலாம் என நம்பப்படுகிறது.

கடந்தவாரம் யால வனப் பகுதியில் ஜப்பான் நாட்டு இளம் பெண்ணொருவரின் சடலம் உருக்குலைந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது. அருகில் கிடந்த கைப்பையொன்றில் இருந்த பொருள்களையும் அவரது கடவுச்சீட்டு இலக்கம் போன்றவற்றையும் வைத்துச் சடலம் அடையாளம் காணப்பட்டது.

(ஐ)

# இங்கிருந்து அம்பாறைக்கு உளவளத் துணையாளர்கள்

பாதிக்கப்பட்ட மக்களை ஆற்றுப்படுத்த!

யாழ்ப்பாணம்,ஜன.25

சுனாமி கடல் அனர்த்தத்தினால் அம்பாறை மாவட்டத்தில் பாதிப்புக்குள்ளாகி இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு உளவளத்துணை வழங்குவதற்காக யாழ். சுகவாழ்வு நிலையத்தின் உளவளத் துணையாளர்கள் 12பேர் கடந்த வியாழக்கிழமை அம்பாறை மாவட்டத்திற்குச் சென்றுள்ளனர்.

அங்கு சென்றுள்ள இவர்கள் மக்களோடு மக்களாக நின்று இடைத்தங்கல் முகாம்களில் உள்ள மக்களுக்கு உளவள ஆற்றுப்படுத்தும் நிகழ்வுகளை மேற்கொள்ளவுள்ளனர் என யாழ்.சுகவாழ்வு நிலையத்தினர் தெரிவித்துள்ளனர்.

(த-190)

# அதிபர் – ஆசிரியர் பிணக்குக்கு ஆணைக்குழு சுமுகத் தீர்வு

யாழ்ப்பாணம்,ஜன.25

கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட இடமாற்றத்தின்படி புதிய பாடசாலையில் கடமையேற்கச் சென்ற ஆசிரியர் ஒருவருக்கும் அப்பாடசாலையின் அதிபருக்குமிடையில் ஏற்பட்டிருந்த முரண்பாட்டுக்கு தீர்வு எட்டப்பட்டுள்ளது.

தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்த தேசியப் பாடசாலை ஒன்றின் ஆசிரியர் ஒருவருக்கு யாழ்.நகரிலுள்ள பிரபல பாடசாலை ஒன்றில் கடமையாற்றுவதற்குத் தேசியப் பாடசாலைகள் கல்வி அமைச்சினால் கடந்த முதலாம் திகதியிலிருந்து இடமாற்றம் வழங்கப்பட்டிருந்தது.

குறிப்பிட்ட ஆசிரியர் புதிய பாடசாலையில் தமது கடமையைப் பொறுப்பேற்பதற்குச் சென்ற போது சம்பந்தப்பட்ட பாடசாலையின் அதிபர் அவரை கடமைக்கு ஏற்க மறுத்தார் எனக் கூறப்படுகின்றது.

இதுகுறித்து குறிப்பிட்ட ஆசிரியர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் கடந்த 6ஆம் திகதி முறைப்பாட்டு ஒன்றைச் செய்திருந்தார்.

இந்த முறைப்பாடு தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அரச திணைக்களங்களுக்கான அதிகாரி ரி.சுவேந்திரன் விசாரணைகளை மேற்கொண்டிருந்தார்.

விசாரணைகளை அடுத்து குறிப்பிட்ட பாடசாலை அதிபர் அந்த ஆசிரியரைத் தனது பாடசாலைக்கு உள்வாங்கினார்.

குறிப்பிட்ட பாடசாலையில் மேலதிகமாக ஆசிரியர்கள் பணியாற்றுவதால் தான் அந்த ஆசிரியரை முன்னர் அனுமதிக்க முடியாமல் போய்விட்டதாக சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர் தெரிவித்ததாக விசாரணை அதிகாரி ரி.சுரேந்திரன் உதயனுக்குத் தெரிவித்தார்.

(ஐ-13)

## கடல்வள டிப்ளோமாதாரிகளுக்கு கிளிநொச்சியில் முக்கிய சந்திப்பு

யாழ்ப்பாணம்,ஜன.25

யாழ்.பல்கலைக்கழகத்தில் கடல்வள டிப்ளோமாப் பட்டம் பெற்றவர்களுக்கு தொழில் வழங்குவது தொடர்பாக அவசர சந்திப்பு இன்று கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கிளிநொச்சியிலுள்ள தமிழீழக் கல்விக் கழகத்தின் நடுவப் பணியகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெறும்.

பள்ளிகளில் கடலகவளம் கற்பிக்கும் டிப்ளோமாதாரிகளையும் ஏனையோரையும் இந்தச் சந்திப்பில் தவறாது கலந்துகொள்ளுமாறு தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

(எ)

# உரிய காலத்தில் தேர்தல் இல்லையெனில் இ.தொ.கா.ஆதரவை மீள்பரிசீலனை செய்யும்

கொழும்பு.ஜன.25

தேர்தல் நடைபெறவேண்டிய காலத்தில் அவற்றை நடத்தத் தவறினால் அரசுக்கு வழங்கி வரும் ஆதரவை இ.தொ.கா. மீள்பரிசீலனை செய்யநேரிடும் என அக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். ஆழிப்பேரலை அனர்த்தத்தைக் கையில் வைத்துக்கொண்டு ஜனாதிபதி அரசியலில் சூறாவளியை ஏற்படுத்தி விடக்கூடாது எனவும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

நாட்டில் இன்னும் ஐந்து வருடங்களுக்கு எந்தவொரு தேர்தலும் நடக்காது என்று ஜனாதிபதி கூறியுள்ளார். இது தொடர்பாக இ.தொ.காவுடன் தொடர்பு கொண்டபோதே அந்த சிரேஷ்ட உறுப்பினர் இப்படித் தெரிவித்தார்.

அரசு மேற்கொள்ளும் நேர்மையான நடவடிக்கைகளுக்கு இ.தொ.கா. ஒத்துழைப்பை வழங்கும். அவை அரசமைப்புக்கு உட்பட்டவையாக இருக்கவேண்டும். அதன் மூலம் நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற புரிந்துணர்வுடனேயே அரசுக்கு ஆதரவை வழங்கினோம்.

இந்த ஒப்பந்தத்தை அரசு மீறினால் நாம் தொடர்ந்தும் அரசுக்கு வழங்கிவரும் ஆதரவை மீள்பரிசீலனை செய்யவேண்டி வரும். அரசமைப்பின்படி நடைபெறவேண்டிய நேரத்தில் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்பதில் இ.தொ.கா. உறுதியாகவே இருக்கின்றது. நாம் எப்போதும் ஜனநாயகம் அழிக்கப்படுவதற்கு உடந்தையாக இருக்க மாட்டோம் - என்றும் அந்தப் பிரமுகர் மேலும் கூறினார்.

(எ-க)

# நெடுந்தீவு ம.வியின் மணிவிழா நிகழ்வுகள் ஆரம்பம்

மண்டைதீவு,ஜன.25

நெடுந்தீவு மகாவித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டு 60ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு அந்தப் பாடசாலையின் மணிவிழா நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், இந்த வருடத்தை, படசாலைச் சமூகம் மணிவிழா ஆண்டாகப் பிரகடனப் படுத்தியுள்ளது.

ஆரம்பநாள்விழா நிகழ்ச்சிகள் கடந்த 17ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 12மணியளவில் வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தில் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

வித்தியாலய அதிபர் திருமதி சாரதா கிருஸ்ணதாஸ் தலைமையில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில் சமயப் பெரியார்கள் கலந்து கொண்டு பிரார்த்தனையில் ஈடுபட்டதுடன் ஆசியுரை வழங்கினர்.

சிவஸ்ரீ காசிலிங்கசர்மா புலேந்திரசர்மா, அருட்திரு. ஜெபநேசரட்ணம் அடிகளார், தென்னிந்தியத்திருச்சபைப் போதகர் இ.யோன் செல்வம் ஆகியோர் சிறப்புரைகளை வழங்கினர்.

(எ-88)

# நற்கருமம் பலவும் செய்ய உகந்த நன்னாள் தைப்பூசம்

**இன்று தைப்பூசம். இன்றைய தினத்தில் ஆற்றக் கூடிய நற்கருமங்கள் குறித்து விளக்குகின்றது இந்தக் கட்டுரை.**

பூவுலகில் தோன்றிய உயிர்க் குலங்களில் மனிதகுலம் மட்டுமே மிகவும் சிறப்புடையதாக விளங்குகிறது. ஆறறிவு படைத்த மனிதன் ஆற்றொணாத் துயர்க் கடலில் ஆழ்ந்து அல்லலுறுகிறான். ஆசைப் பேயின் கைகளில் அடிமைப்படுகிறான். ஆணவத்தால் அழிகின்றான். வாழ்வில் நிம்மதியை இழக்கிறான். அமைதியைத் தேடி அலைகிறான். இவ்வாறு துன்பத்தால் அல்லல் அகன்று ஆனந்தமடையவும் ஆண்டவனை வழிபடுவதே சிறந்த சாதனம் என்று கற்றுணர்ந்த சான்றோரும் ஆன்றோரும் கூறுகின்றனர்.

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்", "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்பன போன்ற பழமொழிகளும் இதனையொட்டியே தோன்றியவையாகும். இறைவனை வழிபட வெவ்வேறு வகையான வழிபாட்டு முறைகள் உள்ளன. அவரவர் வசதிக்கு ஏற்ப வழிபாட்டினை விரிவாக்கவும் சுருக்கமாகவும் செய்யலாம். எவ்வித வசதியும் இல்லாதவர்கள்கூட ஆலயம் சென்று ஆண்டவனைத் தரிசித்து அவன் திருநாமங்களை ஓதினாலே அதுவே சிறந்த வழிபாடாகும்.



**சிவசக்தி ஐக்கியம் விளக்கும் நன்னாள்**

தைப்பூச நன்னாள் சிவசக்தி ஐக்கியத்தையும், மேம்பாட்டையும் விளக்கும் புனிதமான ஒரு பெருநாளாகும். தை மாதம் உத்தராயண காலத்தின் ஆரம்பம். உத்தராயணம் தேவர்களின் பகற்பொழுதென்பதால் தை மாதம் அவர்களது காலைப்பொழுதாகும். சிவாம்சமான சூரியன் மகர ராசியில் இருக்க சக்தி அம்சமான சந்திரன் கடக ராசியில் (பூச நட்சத்திரம்) ஆட்சி பெற்றிருக்க சூரிய, சந்திரர்கள் பூமிக்கு இருபுறம் நேர்கோட்டில் நிற்றல் தைப்பூசத்தன்று பௌர்ணமியில் நிகழும். உலக சிருஷ்டி ஆரம்பமானதும் இத்தினத்திலேதான். ஆண்டவன் முதலில் ஜலத்தையே படைத்தார். அதிலிருந்து பிரமாண்டம் உருவானது இதனையே நினைவூட்டப் பல ஆலயங்களில் இத்தினத்தில் தெப்போற்சவம் நடைபெறுவதுண்டு.

**முருகன் ஆலயங்களிலும் விசேட வழிபாடுகள்**

சிவசக்தி ஐக்கியமான முருகப்பெருமான் மாட்சிமைபெறும் தினமாகவும் இது அமைகிறது. முருகன் ஆலயங்களில் அபிஷேகம் திருவிழா முதலியன நிகழ்த்தப்படுகின்றன. முருகனை வேண்டிப் பலர் இந்நாளில் விரமிருப்பர். வாயு பகவானும் வருணதேவனும் அக்கினிதேவனும் ஒரு சமயம் தமது வலிமையைப்பற்றி பெருமை பேசித் தம்முள் போட்டியிட்டனர். அப்போது அவர்களருகில் ஒரு சிறு துரும்பு காணப்படவே வாயுபகவான் அதனை அசைக்க முயன்று தோற்றார்.

அக்கினி தேவன் எரிக்க முயன்று தோற்றார். வருணபகவான் அதனை நனைக்க முயன்று தோற்றார். மூவரும் இதுகண்டு திகைத்து அசைவற்று நின்றனர். அப்போது நாரதமுனிவர் அங்கு தோன்றி எல்லோருக்கும் மேலான பரம் பொருட்சக்தியைப் பற்றி எடுத்துரைத்து அவர்களது கர்வத்தை அடக்கினார். தைப்பூச நன்னாளில் அவர்களது அருட்சக்தி அதிகரிக்க அருள் செய்வதாக ஆண்டவன் வாக்களித்தார்.

பதஞ்சலி வியாக்கிபாதர் முதலானோர் தரிசிக்க சிவபிரான் ஆனந்தத் தாண்டவமாடியதும் தைப்பூச நாளிலேதான். இந்தப் புனித நன்னாளில் யாவரும் அசௌகரியம் நீங்கி ஆரோக்கியமும் ஆற்றலும் பெறுவர். "தை பிறந்தால் வழிபிறக்கும்" என்ற வாக்கியத்திற்கிணங்க தை பிறந்த சிலநாள்களில் இத்தினமும் தோன்றிப் புத்துணர்ச்சியூட்டி மணவாழ்வில் மகிழ்ச்சியையும் சகல மங்கலங்களையும் ஊட்டுகிறது.

பெண் பிள்ளைகளுக்கு மூக்குக்குத்தல் மற்றும் நற்காரியங்களை நாள் காரியமாக ஆரம்பித்தல். திருமணத்திற்குப் பெண்பார்த்தல்

**வசந்தராணி சண்முகம்**
காரைநகர்.

முதலியவற்றுக்கு இத்தினத்தைத் தேர்தெடுப்பா. தைப்பூசநாள் விரதக் கட்டுப்பாடுகள் குறைந்த வழிபாடு, திருவிழா இவற்றோடு கூடிய இனிய ஒரு கொண்டாட்டமாக மலர்கிறது.

இறைவன் எங்கும் உள்ளவன். எல்லாம் வல்லவன். அவன் உருவமே கருணையின் உருவம். அவன் கருணையினால் நாம் வாழ்கின்றோம். உலகில் உள்ளன யாவும் அவன் கருணையின் மிகுதியாய் படைத்து நமக்கு அளித்துள்ளான். அதையாவது, நினைத்து நாம் என்ன கைம்மாறு செய்கிறோம்? அவனை நினைத்து அவன் புகழைப்பாடி உள்ளன்போடு வணங்குவோமானால் எமது இன்னல்கள் யாவும் சூரியனைக் கண்ட பனிபோல் அகலும்.

☆

## தசாப்தத்தின் நினைவில்

மண்மகிழ 16 - 01 - 1943



விண்மகிழ 16 - 01 - 1995

அமரர்

**பொன்னம்பலம் தில்லைநாதன்**

(பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன ஊழியர்)

தசாப்தங்களேயானாலும் தந்தையே!
உங்கள் தயவினால் இன்றும் ஈரவிழிகளுடன்

கல்வயல் வீதி,
முதலாம் கட்டை,
சாவகச்சேரி. (41003)(46-11-15) - குடும்பத்தினர்.

### பிரதேச செயலரிடம் முறையீடு

கோப்பாய்ப் பகுதியில் இயங்கும் உணவகங்கள், வெதுப்பகங்கள் போன்றவற்றில் சுகாதாரச் சீர்கேடுகள் நிலவுவதாக பிரதேச செயலரிடம் பொதுமக்கள் முறையிட்டுள்ளனர்.

இந்தப்பகுதியில் உள்ள உணவகங்கள் ஏற்கனவே பல தடவைகள் சுகாதாரப்பரிசோதகர்களினால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

ஆனால் தொடர்ந்தும் இவ்வுணவகங்களில் சுகாதாரம் அற்ற முறையில் உணவுகள் தயாரிக்கப்படுவதாகவும் பரிமாறப்படுவதாகவும் மக்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (10-203-178)

### ஒரு நாள் சம்பளப் பணத்தை வழங்கவுள்ளனர்

சுனாமி கடற்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக சாவகச்சேரி நகர சபை சுகாதாரத் தொழிலாளர்கள் ஒருநாள் ஊதியத்தை வழங்கவுள்ளனர். ஜனவரி மாத சம்பளத்தில் ஒருநாள் சம்பளத்தை பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குமாறு நகரசபைச் செயலாளரிடம் வேண்டுகோள விடுத்ததையடுத்தே சுகாதாரத் தொழிலாளர்கள் இதனை வழங்க முன்வந்துள்ளனர். அத்துடன் நகரசபை உத்தியோகத்தர்கள் 30 ஆயிரம் ரூபா பெறுமதியுடைய உடுபுடைவைகளை பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (10-203-117)

## நினைவினில் ஓராண்டு



அமரர்

**சாம் செல்லையா**

அமரர் சாம் செல்லையா அவர்களின் முதலாவது சிரார்த்ததினம் இன்று ஜனவரி 25ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகின்றது. ரயில்வேத் திணைக்கள முன்னாள் உத்தியோகத்தரும் காலஞ்சென்ற சந்தனம் தம்பதிகளின் புதல்வரும் காலஞ்சென்ற ரஞ்சிதமணியின் கணவருமான அன்னாரை புதல்வர்களான சுகேந்திரன் (நோர்வே), முரளி (லண்டன்), புதல்வி குமுதினி (ஜேர்மனி), மருமக்கள் டிலானி, தபோ, கிறிஸ்டி, மாமியார் கண்மணி ஆகியோர் இன்று நினைவுகூர்வதுடன் அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றனர்.

தகவல்;
பாடசாலை ஒழுங்கை,
வண்.வடமேற்கு, ஆனைக்கோட்டை. (41209) (39-11-15) திருமதி ஐ.கண்மணி [மாமியார்].

# முடிவில்லா வாழ்வின் மூன்றாண்டு நிறைவில்...!



திருமதி

## மேரி இராசமணி மரியாம்பிள்ளை

(இளைப்பாறிய ஆசிரியை, கரவெட்டி)

*முத்துக்கள் பத்தை ஈன்றெடுத்த சிற்பியே!*
*சொத்துக்கள் வேண்டாம் சொர்க்கமே போதுமென்று*
*சோகத்தைத் தந்து ஜோதியாய்க் கலந்தவளே!*
*தியாகத்தின் இருப்பிடமே! எம்மருமைப் பொக்கிஷமே!*
*தித்திக்கும் தேன் தமிழால் இறைபுகழ் பாடியே நீ*
*நித்தியத்தின் நிறைவில் நீடு புகழ் கொண்டிடுவாய்!*

அமலனின் அணைப்பில் உம் ஆன்மா அமைதி பெற அன்னையிடம் வேண்டுகின்றோம்.

ஆத்மசாந்தித் திருப்பலி வவுனிக்குளம் கல்வாரிப் பூங்காவிலே இன்று (25.01.2005) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும்.

வண.பிதா ம.சே.கருணாரத்தினம்,
நாவாந்துறை,
வண.பிதா ம.பெ.ஞானரத்தினம்,
பண்டத்தரிப்பு.

(41210)(39-11-15)


அறிமுகம்!!!
DISH TV மற்றும் KUBAND DTH

DISH TV
STAR Sports, Espn
SUNTV, JEYA TV,
பொதிகை உட்பட 100இற்கு
மேற்பட்ட சனல்கள -KU band
Dish & LNBF Decorder
அனைத்தும Rs.17,500/=
மட்டுமே.

KU BAND DTH SUN TV,
பொதிகை உட்பட 35இற்கும்
மேற்பட்ட சனல்கள் KU band
Dish & LNBF Digital
Receiver அனைத்தும்
Rs 13,000/= முதல்

8அடி CBAND Digital
சிஸ்டம்
Rs.22,500/= மட்டும்.

10அடி CBAND System
Rs.28,500/=
மட்டுமே.

மற்றும் K TV Decorder, Smart Card, கேபிள் TV இற்குரிய அனைத்து உபகரணங்களும் மிகக்குறைந்த விலையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.

செய்மதி தொலைக்காட்சி!

செய்மதி தொலைக்காட்சி மற்றும் கேபிள் TV துறைகளில் இலங்கை முழுவதும் மிக நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தி வரும் Sats - Tech நிறுவனம் தனது சேவையை இலங்கை முழுவதும் NORTH LANKA TELEVISION NET WORK (NLT NET WORK) என்னும் பெயரில் விஸ்தரித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றது. இலங்கையில் அதிநவீன தொழில்நுட்பத்தின் மூலம் (Fiber Optical Technology) கேபிள் TV இயக்குநர்களின் இன்னல்களுக்குத் தீர்வை வழங்கிவருகின்றோம். யாழ். மாவட்டத்தில் எமது Fiber Optical MSOவில் இணைந்து பயன்பெற உடன் தொடர்புகொள்ளவும்.

SATS - TECH ENGINEER'S
M/S நஷனல் வீடியோ சென்ரர் இல. 182, கே.கே.எஸ்.வீதி, (குளப்பிட்டி சேர்ச் அருகில்) கொக்குவில், யாழ்ப்பாணம்.
(C/40477)(12) Phone: (021) 222 5908 / 077 6618580 / 0777 251957 ISLAND wide Hot Line: 0777 710785

# அரசியலில் ஜனாதிபதி புதுப்பிறவி எடுக்க உதவியது 'சுனாமி'

ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக இந்நாட்டு அரசியல் அரங்கில் பல திருப்புமுனைகள் உருவாகி வருவதாகத் தோன்றுகிறது. கடந்த இரு ஆண்டுகளாகப் பரபரப்பாகப் பேசப்பட்ட சமாதானப் பேச்சுகள் குறித்து அக்கறை காட்டப்படாத தேக்க நிலையைத் தொடர்ந்து மீண்டும் பழையபடி யுத்தம் ஆரம்பிக்கப்படும் ஒரு சூழ்நிலையும் உருவானதை வாசகர்கள் நன்கறிவர். அண்மையில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தையடுத்து அரசியல் நிலை புதிய கோணத்தில் செய்யத் தொடங்கியுள்ளது. இன்றைய அரசியல் நிலைக்கு ஒருமாதத்திற்கு முன்னர் இடம்பெற்ற இயற்கை அனர்த்தம் ஏற்படுத்திய தாக்கம் குறித்து அலசுகிறது இக்கட்டுரை. உப்புல் யோசெப் பெர்னாண்டோ எழுதிய இக்கட்டுரை 'லங்காதீப' (20.01.2005) நாளிதழில் வெளிவந்தது. அதன் தமிழ் வடிவத்தை இங்கே தருகின்றோம்.



இவ்வாண்டு இறுதியுடன் சந்திரிகாவின் அரசியல் வாழ்க்கை முடிவடைந்துவிடுமென அண்மைய ஆழிப்பேரலை அனர்த்தம் இடம்பெறு முன்னர் நாட்டுமக்களில் பெரும்பாலோர் நம்பியிருந்தனர். அதேபோன்று தாம் அரசியலில் இருந்து ஒதுங்கிக் கொள்ளவேண்டி ஏற்பட்டுவிடுமோ என்ற சந்தேகம் சந்திரிகாவிடத்திலும் காணப்பட்டது. ஆயினும், அரசியல் அரங்கில் தாம் தொடர்ந்தும் நிலைத்திருப்பதற்கான கடும் பிரயத்தன முயற்சிகளை மேற்கொள்ளச் சந்திரிகா தவறவில்லை. இருந்தபோதிலும், எதிர்பாராதவகையில் ஆழிப்பேரலை அனர்த்தம் இந்நாட்டு அரசியலில் புதுப்பிறவி எடுக்கும் வாய்ப்பை அவருக்கு வழங்கியுள்ளது. இத்தகைய சூழ்நிலை எவ்விதம் உருவாயிற்று என்பதை அந்த ஆழிபேரலைகள் மட்டுமே நன்கறியும்.

சுனாமி என்ற அண்மைய ஆழிப்பேரலை அனர்த்தத்தை ஏழாவது ஆழிப்பேரலை அனர்த்தம் என மீனவர்கள் குறிப்பிட்டதாகவும் முன்னைய அனர்த்தங்களைவிட அண்மைய அனர்த்தம் பெருவலுக்கொண்டதாய் அமைந்ததென அவர்கள் கருதியதாகவும் தெரியவருகின்றது.

### சந்திரிகா சந்தித்த முதல் சுனாமி

சந்திரிகாவின் அரசியல் வரலாறும் ஒருவகையில் ஆழிப்பேரலை அனர்த்தத்தை ஒத்ததே.

தமது கணவரான விஜய குமாரணதுங்கவின் படுகொலைச் சம்பவமே சந்திரிகா சந்திக்க நேர்ந்த முதலாவது அனர்த்தமாகும். அவர் அரசியலில் தலைமை ஏற்க அதுவே காரணமாய் அமைந்தது.

பிரதமர் பிரேமதாஸ மற்றும் அமைச்சர் அத்துலத்முதலி ஆகியோரின் படுகொலைகள் சந்திரிகா சந்திக்க நேர்ந்த இரண்டாவது அனர்த்தமாகும். அவ்வேளையிலேயே அவர் மேல் மாகாண சபையின் முதலமைச்சராகப் பதவியேற்க நேரிட்டது.

தமது தாயாருக்குப் பின்னர் கட்சியின் தலைமைப் பொறுப்புக்கு உரித்துடைய தமது தம்பி அனுரா பண்டாரநாயக்கா திடீரென ஐ.தே. கடசியில் இணைந்துகொண்டமை சந்திரிகா சந்திக்கநேர்ந்த மூன்றாவது அனர்த்தமாக அமைந்தது. 1994இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஸ்ரீல.சு.கட்சிக்குத் தலைமை தாங்கியது மட்டுமன்றி, அதன்மூலம் நாட்டின் பிரதமர் பதவியை அடையவும் அவருக்கு அது சந்தர்ப்பம் ஏற்படுத்திக்கொடுத்தது.

ஐ.தே.கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் காமினி திஸநாயக்க மற்றும் சந்திரிகாவின் பழைய அரசியல் எதிரியான ஓ.சி.அபயகுணசேகர ஆகியோர் கொலையுற நேர்ந்தமையே சந்திரிகா சந்திக்க நேர்ந்த நான்காவது அனர்த்தமாக அமைந்தது. அவையே அவர் ஜனாதிபதிப் பதவியைக் கைப்பற்றிக் கொள்ளச் சந்தர்ப்பம் ஏற்படுத்திக்கொடுத்தன.

1999ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசார வேளையில் அவரைக் குறிவைத்து விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்பட்ட குண்டுத் தாக்குதல் சம்பவம் சந்திரிகாவுக்கு வாய்ப்பாயமைந்த ஐந்தாவது ஆழிப்பேரலை அனர்த்தமாய் அமைந்தது. அக்குண்டுத் தாக்குதலிலிருந்து அவர் உயிர்தப்ப முடிந்ததோடு, அனுதாப அலை காரணமாக இரண்டாவது தடவையாகவும் ஜனாதிபதிப் பதவியை வகிக்கும் வாய்ப்பை அது அவருக்கு ஏற்படுத்திக் கொடுததது.

சந்திரிகாவை எவ்விதமாவது அரசியலிலிருந்து வெளியேற்றும் நோக்கில் செயற்பட்ட ஐ.தே. கட்சியின் பிரதித் தலைவர் காமினி அத்துகோறளையின் திடீர் மரணம் சந்திரிகாவுக்கு வாய்ப்பாய் அமைந்த ஆறாவது ஆழிப்பேரலை அனர்த்தமாய் ஆனது. அவர் மரணிக்காது இருந்திருப்பின் சந்திகாவுக்கும் பிரதம நீதியரசருக்கும் எதிராகக் குற்றவியல் பிரேரணை நிறைவேற்றி பதவியினின்றும் அகற்றப்படும் நிலை சந்திரிகாவுக்கு ஏற்பட்டிருக்கும். காமினி அத்துகோறளையின் திடீர் மரணத்தையடுத்தே ஐ.தே. கட்சியை ஆட்சியிலிருந்து கவிழ்க்கும் தமது திட்டத்தைச் சந்திரிகாவால் வெற்றிகரமாக நிறைவேற்றமுடிந்தது.

### ஏழாவது அனர்த்தம்

தற்போது அண்மையில் ஏழாவது ஆழிப்பேரலை அனர்த்தம் இடம்பெற்று முடிந்துள்ளது. சந்திரிகாவை அரசியலிலிருந்து அப்புறப்படுத்த முயன்ற ஐ.தே. கட்சியின் தேசிய அமைப்பாளர் எஸ்.பி.திஸநாயக்காவைக் குற்றவாளியாக்கிச் சிறைக்கு அனுப்பிய கையோடு இந்த ஏழாவது ஆழிப்பேரலை அனர்த்தம் - சுனாமி - இடம்பெற்று முடிந்துள்ளது. எஸ்.பி.திஸநாயக்காவை சிறைக்கனுப்பிய சம்பவததால் உருவான சந்திரிகாவுக்கு எதிரான எதிர்ப்பலைகளை அண்மையில் இடம்பெற்ற ஆழிப்பேரலை அனர்த்தம் திசைதிருப்பிவிட்டதாகக் கூறினால் அது தவறாகாது.

அதேவேளை, அரசின் இச்செயற்பாட்டுக்கு எதிராக, மக்களைத் தூண்டிவிட்டு அவர்களைக் கிளர்ந்தெழ வைத்து அரசுக்கு நெருக்குதல் அளிப்பதன் மூலம் இந்த ஆண்டு முடிவில் எவ்வகையிலாவது ஜனாதிபதித் தேர்தலை நடத்தவைப்பதென்ற ஐ.தே. கட்சியின் திட்டமும் ஆழிப்பேரலை அனர்த்தத்தில் அடிபட்டுப்போயுள்ளது.

### புலிகளுக்கும் பின்னடைவு

ஐ.தே. கட்சியின் திட்டங்கள் மட்டுமல்ல, விடுதலைப் புலிகள் வகுத்த திட்டங்களும்

**தமிழில்: வீயெஸ்ரி**

ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாகச் செயல் வடிவம் பெற இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. சமாதான முயற்சிகள் மீண்டும் முன்னெடுக்கப் படாவிட்டால், தமிழ் மக்களது சுதந்திரத்துக்கான போராட்டத்தை ஆரம்பிப்பதைத் தவிர தமக்கு வேறெந்த மார்க்கமும் கிடையாதெனத் தமது கடந்த மாவீரர் தின உரையின்போது பிரபாகரன் குறிப்பட்டிருந்தார். தொடர்ந்தும் தேக்கநிலை நிலவுமானால் மிகவிரைவில் போர் நிறுத்த உடன்பாட்டை முறித்துக்கொள்வதென அவர் திட்டமிட்டிருந்ததாகவும் கூறப்படுகிறது. அதன்மூலம் தாம் சந்திரிகாவுக்கு அதிர்ச்சி வைத்தியம் செய்யவிருப்பதாக அவர் குறிப்பிட்டதாகவும் கூறப்படுகிறது. அவ்விதம் போர் நிறுத்த உடன்பாட்டிலிருந்து விலகிக் கொள்வதாக அறிவிக்கும் தமது திட்டத்தை ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாகப் பிரபாகரன் பின் தள்ளிவைக்க நேர்ந்துள்ளது.

அண்மைய ஆழிப் பேரலை அனர்த்தத்தால் விடுதலைப் புலிகளுக்குப் பாரதூரமான இழப்புகள் ஏற்படாதபோதிலும், பிரபாகரன் தமது அரசியல் அணுகுமுறைத் திட்டங்களைப் பின் தள்ளிவைக்க நேர்ந்துள்ளது. இன்றைய சூழ்நிலையில் போர் நிறுத்த உடன்பாட்டிலிருந்து விலகிக்கொள்ளும் தமது திட்டத்தை சர்வதேச சமூகத்தின் முன் பிரபாகரனால் நியாயப்படுத்தமுடியாது. அதுமட்டுமன்றி, அண்மைய அனர்த்தத்தால் பாதிப்புற்ற வடக்கு - கிழக்குத் தமிழ் மக்களின் துயரங்கள், இழப்புகள் மத்தியில் இவ்விதம் போர் நிறுத்த உடன்பாட்டிலிருந்து விலகிக்கொள்வது அவர்களை மேலும் சிரமத்துக்கு உள்ளாக்குவதாய் அமையும். அத்தோடு, விடுதலைப் புலிகளது பாதுகாப்புக் கேடயமாகக் கருதப்படும் கரையோரத் தமிழ் மீனவக் குடும்பங்களே பெரும்பாலும் ஆழிப்பேரலை அனர்த்தத்தால் கடுமையான பாதிப்புற்ற அக்குடும்பங்களுக்கான புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள்ளவும், அவர்களுக்கான குடியிருப்புகளுக்கான மீள்கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளவும் விடுதலைப் புலிகள் கவனமெடுக்கவேண்டியுள்ளது.

எனவே, ஐ.தே. கட்சி வகுத்திருந்த அரசியல் அணுகுமுறைத் திட்டங்கள் மட்டுமன்றி, விடுதலைப் புலிகள் வகுத்திருந்த அரசியல் அணுகுமுறைத் திட்டங்களும் திடீரென இடம்பெற்ற ஆழிப் பேரலை அனர்த்தம் காரணமாகப் பின்னடைவு நிலைக்குத் தள்ளப்படும் சூழ்நிலையால், சந்திரிகா எதிர்கொண்ட முட்டுக்கட்டைகள் தற்காலிகமாகவேனும் விலக நேரும் சூழ்நிலை உருவாவதால் சந்திரிகாவின் பலம் அதிகரிக்க வாய்ப்பு உருவாகியுள்ளது.

ஆழிப்பேரலை அனர்த்தம் இடம்பெறும் முன்னர் சர்வதேச சமூகத்தின் மத்தியில் சந்திரிகாவுக்குப் பெரும் மதிப்போ, வரவேற்போ நிலவியதாகக் கொள்ளமுடியவில்லை. இதனை எதிரணியினர் கூட பல சந்தர்ப்பங்களில் சுட்டிக் காட்டத் தவறவில்லை. ஆனால், தற்போதைய சூழ்நிலையில் சந்திரிகா சர்வதேச சமூகத்துக்கு வேண்டப்பட்ட ஒருவராக மாற்றம் பெற்றுள்ளார். இந்த அனர்த்தத்தின் மூலம் சர்வதேச ஊடகங்களூடாகத் தத்தமது நாட்டுக்குப் பிரபல்யத்தை ஈட்டும் நோக்கில் அபிமானத்தை உருவாக்கிக்கொள்ளும் தேவை சர்வதேச சமூகத்துக்குத் தேவைப்படுகிறது. அதற்கு சந்திரிகாவின் ஆதரவும் அனுசரணையும் அவசியமாகிறது. இதன் காரணமாகச் சர்வதேச சமூகம் தற்போது சந்திரிகாவுடன் நெருங்கிச் செயற்பட முனைவதான பொதுமக்களின் கருத்துத் தவறானதொன்றல்ல.

இவ்வித சூழ்நிலை உருவாவதன் பின்னணி என்ன? சந்திரிகா மட்டுமன்றி, எந்தவோர் உலக நாடும், இவ்வித பாரிய இயற்கை அனர்த்தமொன்று ஏற்படும் வேளையில், அதனைத் தமது அரசியல் வாய்ப்பாகப் பயன்படுத்த முனைவது வழமையானதொன்றே. இவ்வித சந்தர்ப்பமொன்றில் பொதுமக்கள் தமது அரசியல் பேதங்களை ஒதுக்கிவைத்து நாட்டின் தலைமைத்துவத்தின் பின்னால் ஒன்று திரள்வது சாதாரணமானதொன்றே. நாட்டை அவலத்திலிருந்து மீட்டெடுக்கவேண்டுமாயின், நாட்டின் தலைமைத்துவத்தின் மீது நம்பிக்கை வைத்து, அரசைப் பலப்படுத்துவதன்மூலமே இலக்கை எட்டமுடியுமெனப் பாதிக்கப்பட்ட நாட்டின் பொதுமக்கள் நம்புவதே இதற்கான காரணமாகும்.

அவ்வித சந்தர்ப்பமொன்றில் உரிய அதிகாரங்கள் கொண்டிராத நாட்டின் எதிரணியால் அவசியப் பணியெதனையும் நிறைவேற்றி வைத்தல் சிரமம் மிக்கதாகும். இவ்வித பாரிய அனர்த்தம் இடம்பெறும் வேளையில் பொதுமக்களுக்கான தேவைகளை அரசினாலன்றி எதிரணியால் தனித்துப் பூரணமாகப் பெற்றுத்தர இயலாது. அந்தவகையில், இவ்வித சிக்கலான சந்தர்ப்பமொன்றில் உலகின் ஏனைய அரசுத் தலைவர்களுக்குக் கிட்டும் வாய்ப்புப் போன்றதொரு வாய்ப்பே சந்திரிகாவுக்கும் இன்று கிட்டியுள்ளதால் அவரது பலம் அதிகரிக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

### நாட்டை மீண்டும் கட்டி எழுப்ப...

சந்திரிகாவின் அரசியல் வாழ்வின் கடைசி ஆண்டெனக் கருதப்பட்ட இவ்வாண்டை, நாட்டை மீண்டும் கட்டியெழுப்பும் ஆண்டெனக் குறிப்பிடக்கூடிய அளவுக்கு இன்றைய சூழ்நிலை மாற்றியமைத்துள்ளது.

ஏற்பட்ட பேரிழப்பை நிவர்த்திக்கும் வகையில், மீண்டும் நாட்டைக் கட்டியெழுப்பும் பணியை அரசினால் மட்டுமே முன்னின்று செயற்படுத்த இயலும். அப்பணியை வெற்றிகரமாக நிறைவேற்ற எதிரணிகள் ஒன்றிணைந்து அரசுக்குத் துணை நிற்றல் அவசியமென்பது நாட்டின் புத்திஜீவிகள் பலரது கருத்தாகும். இதன் அடிப்படையிலேயே மீண்டும் இந்நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு அரசுக்கு ஆதரவளிக்குமாறு சந்திரிகா எதிரணியினருக்குக் கோரிக்கை விடுத்துவருகிறார்.

இத்தகைய சூழ்நிலையில், இவ்வாண்டின் இறுதியில் இடம்பெற வேண்டிய ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான பேச்சுகள் அரசியல் மடடத்தில் மௌனம் காத்துக் காணப்படுகிறது. அடுத்த ஆண்டின் இறுதிவரை தன்னால் அப்பதவியை வகிக்கமுடியுமென முன்னர் சந்திரிகா வாதிட்டு வந்தார்.

இவ்வாண்டின் இறுதிக்குள் அரசமைப்பில் தேவையான திருத்தம் மேற்கொள்ள முடியாவிட்டால் அடுத்த ஆண்டு முடிவுவரை பதவியைத் தொடர்வதே சந்திரிகாவின் நோக்கமாய் இருந்தது. இவ்வாண்டு இறுதியில் அப்பதவிக் காலம் முடிவுறவேண்டுமென ஐ.தே. கட்சி பலவிதத்தில் அழுத்தம் தரமுயலுமானால் தம்மால் அடுத்த ஆண்டு முடிவுவரை அப்பதவியைத் தொடரமுடியுமென வாதிடும் நோக்கிலேயே அவர் அவ்விதம் கருத்து வெளியிட்டிருக்கக்கூடும். தற்போதைய நிலையில் அனர்த்தம் காரணமாக மீண்டும் நாட்டைக் கட்டியெழுப்ப இரண்டாண்டு காலம் செல்லுமாதலால், அதுவரை தேர்தல் குறித்த சர்ச்சைக்கே இடமேற்படாதென்பதையே அவர் கூறாமல் கூறியிருப்பதாகவும் கொள்ள இயலும்.

### ஐ.தே.கவுக்கு இக்கட்டு நிலை

அதேவேளை, ஜனாதிபதித் தேர்தல் குறித்து அழுத்தம் மேற்கொள்ள இயலாததோர் இக்கட்டை இந்த அழிப்பேரலை அனர்த்தம் ஐ.தே.கட்சிக்கு ஏற்படுத்தியுள்ளது. ஆயினும், அரசமைப்பு ரீதியில் அடுத்த ஆண்டின் இறுதியிலாவது எவ்விதத்திலும் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டாகவேண்டும். ஆனால், அரசமைப்பில் அவசியமான திருத்தம் மேற்கொண்டு தமது ஜனாதிபதிப் பதவிக் காலம் முடிவுற்றதும் தொடர்ந்தும் அரசியலில் நிலைத்திருக்கும் நோக்கில் - அரசில் பிரதமர் பதவியை வகிக்கும் நோக்கில் - இவ்வாண்டு ஜனவரி பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பொன்றை நடத்தச் சந்திரிகா தயாராகி வந்தார். ஆனால், ஐ.தே.கட்சி மற்றும் விடுதலைப் புலிகள் ஆகிய தரப்புக்களுக்கு ஏற்பட்டமை போன்றே, சந்திரிகாவுக்கும் தமது திட்டத்தை நிறைவேற்றிக்கொள்ள இயலாத நிலையை ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்படுத்தியுள்ளது. மொத்தத்தில் 2006 ஆம் ஆண்டின் பின்னர் சந்திரிகாவால் தொடர்ந்தும் அரசியலரங்கில் நிலைத்திருக்க இயலாததொரு சூழ்நிலை உருவானமையே ஐ.தே.கட்சிக்கு இந்த அனர்த்தம் காரணமாகக் கிட்டிய ஒரேயொரு லாபமாகும்.

ஆனால், இன்றைய சூழ்நிலையில் நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதென்ற திட்டத்தைப் பின்தள்ளி, அரசமைப்பில் அவசிய திருத்தம் மேற்கொள்ளும் திட்டத்தை முன்னெடுக்க அரசு முயலுமானால், அனர்த்தம் காரணமாகத் தன் அரசியல் நடவடிக்கைகளை ஒருபுறம் ஒதுக்கிவைக்க முன்வந்த ஐ.தே.கட்சியும் தனது அம்முடிவை மாற்றிக்கொள்ளக்கூடும். மீண்டும் நாட்டைக்கட்டி எழுப்புவதற்கு அரசுக்கு வழங்கப்படும் ஈராண்டு கால அவகாசம் 2006ஆம் ஆண்டின் இறுதியில் முடிவடைந்த பின்னர் சந்திரிகாவால் தொடர்ந்தும் அரசியலில் நீடித்திருக்க முடியாதென்பதை உணர்நதே ஐ.தே.கட்சி தற்போது அமைதி பேணி வருவதாகக் கருதவேண்டியுள்ளது.

சிங்கள மக்கள் எதனையும் இலேசில் மறந்துவிடும் தன்மை கொண்டவர்கள் என பிரபாகரன் முன்னர் ஒரு தடவை குறிப்பிட்டமை இவ்வேளைக்குப் பொருத்தமானதாக அமைகிறது. பிரபாகரனின் இக்கருத்து உண்மையானால் மீண்டும் நாட்டைக் கட்டியெழுப்பவெனவழங்கப்படும் ஈராண்டு கால அவகாசம் முடிவடைந்த பின்னர் அரசால் தொடர்ந்தும் பதவியைத் தக்கவைக்க இயலாத நிலை உருவாகக்கூடும்.

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட நாட்டை மீண்டும் கட்டியெழுப்பும் பணிக்கென வெளிநாடுகள் பல வழங்கிய நிதி உரிய வகையில் நாட்டின் பொதுமக்களுக்குப் பயன்படுத்தப்படாது ஊழல் இடம்பெற்றதாக இன்னும் ஒரு சில மாதங்களில் பொதுமக்களிடமிருந்து குற்றச்சாட்டுகள் கிளம்பக்கூடும். அவ்வித குற்றச்சாட்டுக்கள் அரசுக்கெதிராக கிளம்புமானால் அதில் ஆச்சிரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஏனெனில், அது மனித இயல்பு.

இவ்விதம் திட்டமிட்டு, அரசியல் காய் நகர்த்தல்கள் கனகச்சிதமாக மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், அரசியல் பேரலை எந்த வேளையில், எந்த விதத்தில் திசைதிரும்பும் என்பதை இப்போது எவராலும் எதிர்வுகூற இயலாது. ★

## வீடு விற்பனைக்கு

சுதுமலை வடக்கு, மானிப்பாயில் 6 பரப்புக் காணி, வீடு வளவு பூஞ்சோலையுடன் நல்ல் சுற்றாடலில் 4 அறை, சாப்பாட்டு அறை, 2 ஹோல், அற்றாச் பாத்ரும், ரொயிலட், கொமட் ரொயிலட், சேவன்ட் ரொயிலட் பாத்ரும், கிணறு, தண்ணீர்த் தாங்கியுடன் வீட்டுத் தளபாடங்களுடன் உடன் விற்பனைக்கு உண்டு.

தொலைபேசி இலக்கம் : 0776627005

(C/40610)(42-18-19)


## வல்லைப் பாலத்தில் பஸ் தடம் புரண்டது

குடத்தனை,ஜன.25

வல்லைப் பாலத்தில் பயணிகள் பேருந்து ஒன்று தடம்புரண்டது. பருத்தித்துறையில் இருந்து யாழ். நகர் நோக்கி பயணித்த வட பிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்த மான பஸ்ஸே கடந்த வெள்ளிக்கிழமை காலை 10.30 மணியளவில் வல்லைப் பாலத்தடியில் தடமபுரண்டது.

இச்சம்பவத்தில் பயணிகள் எவரும் காய மடையவில்லை. எனினும் அவ்வழியூடான போக்கு வரத்துக் குறிப்பிட்ட நேரம்வரை தடைப்பட்டி ருந்தது.

பழுதடைந்த நிலையில் உள்ள வல்லைப் பாலத்தில் அண்மைக்காலமாகத் திருத்தவேலை கள் இடம்பெற்று வந்திருந்தமை தெரிந்ததே.

(த-78-ரி)

## கடன் வழங்கும் திட்டம்

வரணி,ஜன.25

தென்மராட்சி கிழக்கு, கொடிகாமம் பல நோ.கூ.சங்கம் தனது கிளை அங்கத்தவர் களுக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா வரை கடன் வழங் கும் திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

(எ-203-170)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜன.25

குடாநாட்டிற்கான கோதுமைமா விநி யோகம் தொடர்பான முக்கிய கலந்துரை யாடல் இன்று செவ் வாய்க்கிழமை காலை 10மணிக்கு யாழ் செய லக கேட்போர் கூடத் தில் நடைபெறவுள் ளது.

யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் நடை பெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ்.மாவட டத்திற்கான 'பிறிமா' நிறு வன முகவர், வெதுப் பக உரிமையாளர் சங கத்தினர், விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கத்தினர் உட்படப் பலர் கலந்துகொள்ள வுள்ளனர்.

(த-5-203)

## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 12 – 04 – 1948



மறைவு 25 – 01 – 1997

அமரர்

**தர்மலிங்கம் கதிர்காமநாதன் (தறுமு)**

(சாந்தி ரான்ஸ்போட் உரிமையாளர்)

ஆண்டுகள் எட்டு ஆனாலும் ஆறவில்லை எம்மனது
ஈண்டு உம்மை எண்ணியே நிதம் வாடுகிறோம்
எப்போதும் உம்நினைவால் ஏங்கியே தவிக்கின்றோம்
இப்போது நினைத்தாலும் தாங்காது எம் இதயம்.

"பன்னீர்"
வேலகாடு, ஊரிக்காடு. (41009)(46-18-19-42) - குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் **கண்ணச்சாமி சக்திவேல்**

தோற்றம்: 13 – 09 – 1946
மறைவு: 26 – 12 – 2004

எம் அன்புத் தந்தையே – கடல்
அன்னையின் சீற்றத்தால் உங்கள் உயிர் பறிபோனது!
எங்களை அநாத்தயரில் ஆழ்த்திவிட்டுச் சென்றது!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

தாழையடி வடக்கு,
தாழையடி. (41174)(46-18-19-42) - குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவலைகள்

சுவாமியின் படைப்பு 21 – 02 – 1962



சுனாமியின் அழிப்பு 26 – 12 – 2004



சுவாமியின் படைப்பு 10 – 10 – 1998

திருமதி
**ஜீ.டைனேஸ்வரி**
(ஆசிரியை, யா/கைதடி விக்னேஸ்வர வித்தியாலயம்)

*அகிலத்தை அளக்கும்*
*ஆங்கிலத்தின் அன்னையே!*
*அகிலத்தை உலுக்கிய சுனாமி*
*அலை உன்னையும்*
*அருமை மைந்தனையும் விடவில்லை!*

செல்வன்
**ஜீ.நிறோஜன்**
(மாணவன், யா/பரியோவான் கல்லூரி)

*கதிர்காம முருகனை*
*கை எடுத்து கும்பிடச் சென்ற*
*ஆங்கிலத்தின் ஆசான்*
*அருமையம்மா விக்னேஸ்வரா*
*ஆங்கிலம் இன்றித் தவிக்கின்றது.*


உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

பாடசாலைச் சமூகம்
(யா/கைதடி விக்னேஸ்வர வித்தியாலயம்).

(41045)(46-18-19-42)

## மாதம் ஒன்று ஆயினும்.....

மண்ணில் 01 – 12 – 1958



விண்ணில் 27 – 12 – 2004

**மௌனகுரு செல்வகுரு** (செல்லாண்டி)

(நெடியகாடு, வல்வெட்டித்துறை)

*நெடியகாட்டில் ஒரு பூ மலர்ந்தது – அது*
*நெடிதுயர்ந்து எம் புகழைத் தாங்கி நின்றது*
*கணபதியான் ஒளிமிளிர தோள் கொடுத்தது – அது*
*கண்ணெனவே நின்றெமது தூணாய் ஆனது*
*தந்தைகுல ஈகையினால் மின்னிற்கு வழிபிறந்தது – அது*
*தனயன் உன் கரங்களினால் காக்கப்பட்டது*
*முந்தையர் செய்த கொடை உயர்ந்து நின்றது – அது*
*முன்னொருபோதும் இல்லாத செயலாய் ஆனது*
*வள்ளல் அடிவந்த வாரிசானது – புவியில்*
*வந்துதித்த தன் கடமை செய்து நின்றது*
*ஆழி தந்த அதிர்ச்சியினால் மீளாய் அண்ணா – பெரும்*
*ஊழிபோற் உன்இழப்பால் தளர்கின்றோம் அண்ணா....*

கடற்கோள் அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டு அகால மரணமடைந்த அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (26-01-2005) அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அனைத்து உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

வல்வை நெடியகாடு கணபதி மின் அமைப்பாளர்கள்
வல்வை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம்
வல்வை நெடியகாடு இளைஞர் கலாமன்றம்
வல்வை நெடியகாடு கணபதி படிப்பகம்
வல்வை நெடியகாடு மோர்மட வரவேற்புக் குழு.

(41172)(46-18-19-42)

## உடைந்த உள்ளத்துடன் 20ஆம் ஆண்டின் நினைவலைகள்

பெற்ற அன்னையின் மடியில் 04 – 06 – 1956



தேவ அன்னையின் காலடியில் 25 – 01 – 1985

அமரர்
**இராஜதுரை ராஜகுமார்**

*பார்க்கத் தவித்துப் பார்த்ததுவும்*
*பாராதிருந்தே தவித்ததுவும்*
*யாருக்கும் தெரியா*
*நினைந்ததுவும்*
*யாரும் அறிந்தே பிரிந்ததுவும்*
*பேசத் தவித்துப் பேசியதுவும்*
*பேசாதிருந்தே தவித்ததுவும்*
*நேசம் தெரிந்து மணந்ததுவும்*
*நீசர் கலைக்கக் கலைந்தனவே!*
*ஆண்டுகள் இருபது சென்றாலும்*

*இதயக்குமுறல்கள்*
*அடங்கவில்லை*
*குமுறும் எரிமலை என்றுதான்*
*வெடித்துச் சிதறுமோ?*
*அப்பாவை அறியா மகள்,*
*அமைதியின்றித் தவிக்கின்றாள்*
*ஆறு வழி கொடுங்கள் அவருக்கு!*
*கடமை தனை முடித்து விட்டு*
*கணவனுடன் இணைவதற்கு*
*விடை கொடுங்கள் எனக்கு!*

பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு உண்டேல் உனை மறவாமை வேண்டும்

24/3, மத்திய கிழக்கு வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.
தொ.பே 222 3514

பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி மேரியம்மா,
ஆசை மகள் தமிழினி.

(C/40478) உதயன் Graphics

# ஆழிப் பேரலையால் பெருமளவில் அழிவுகளைச் சந்தித்து ஆட்டம்கண்டுள்ள அம்பாறை மாவட்டம்

★ 91 நலன்புரி முகாம்களில் ஒரு லட்சத்து எண்ணாயிரத்து 91 பேர் தஞ்சம்.

★ பெண்கள் 38ஆயிரத்து 201, ஆண்கள் 36 ஆயிரத்து 607, சிறுவர் 33ஆயிரத்து 283.

★ 9 ஆயிரத்து 30 பேர் பலி.

★ 2ஆயிரத்து 207 பேர் காணாமற்போனவர்கள்.

★ 29 ஆயிரத்து 97 வீடுகள், 82 வணக்கஸ்தலங்கள் சேதம்.

ஆழிப்பேரலை மிக மோசமாகத் தாக்கிய அம்பாறை மாவட்டம் இன்று திறந்தவெளி அகதிமுகாமாக காட்சியளிக்கின்றது.

மாவட்டத்திலுள்ள 16 பிரதேச செயலகப் பிரிவுகளில் 91 நலன்புரி முகாம்கள் ஏற்படுத்தப்பட்டு ஒரு லட்சத்து எண்ணாயிரத்து 91 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.இவர்களில் 38ஆயிரத்து 202 பெண்கள், 36 ஆயிரத்து 607 ஆண்கள், 33ஆயிரத்து 283 சிறுவர்கள் அடங்குவர்.

இதுவரை கிடைக்கப்பெற்ற புள்ளி விவரங்களின்படி 9 ஆயிரத்து 30 பேர் ஆழிப் பேரலையில் சிக்கிப் பலியாகியுள்ளனர். இங்கு தரப்படுகின்ற புள்ளிவிவரங்கள் அம்பாறை மாவட்ட அரச அதிபர் எச்.எம்.ஹேரத் அபேதீரவிடமிருந்து இறுதியாக உத்தியோகபூர்வமாகப் பெறப்பட்ட தகவல்களாகும்.

மேற்கூறப்பட்ட புள்ளிவிவரங்களின்படி அம்பாறை மாவட்டத்தில் பலியானோர் தொகை முன்னர் 13ஆயிரம் பேர் எனக் குறிப்பிடப்பட்டாலும் தற்போது 9ஆயிரத்து 30 பேர் எனக் குறைவடைந்துள்ளதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

அகதிமுகாம்களின் எண்ணிக்கை 118 ஆக இருந்தது. தற்போது 91ஆகக் குறைந்துள்ளது. அடுத்தவாரம் இத்தொகை 50 ஆகலாமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனாலும் மக்கள் தொகையில் மாற்றமிருக்காது.

வீடிழந்தோருக்கு வீடு கட்டிக் கொடுக்கும் பணியில் அரசு தீவிர கவனமெடுத்து வருகிறது. அமைச்சர் பேரியல் அஷ்ரப் இது தொடர்பாக சகல மாவட்டங்களிலும் பேசி நடவடிக்கை எடுத்துவருகிறார்.

50 பாடசாலைகள் சேதமடைந்துள்ளன. அவற்றிற்குப் பதிலாக வேறிடங்களில் பாடசாலைகளை நடத்த தற்காலிக ஏற்பா[illegible]கள் செய்யப்பட்டுள்ளன. இருப்பினும் அவற்றை நிரந்தரமாக அமைக்கவும் பாரிய செயற்றிட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற அதேவேளை தற்போது நலன்புரி முகாம்கள் தொடர்பான பிரச்சினை முக்கியமாக உள்ளது. *(கள நிலைவர அட்டவணை வடிவத்தில் கீழே)*

# கடல் ஊருக்குள் செல்வதைக் கண்டேன்! நடுக்கடலில் நின்ற காரைதீவு மீனவர் தகவல்

கரையிலிருந்த தோணிகள், இயந்திரப்படகுகள் யாவும் கடலுக்குள் இழுத்துவரப்படுவதையும், மறுகணம் அதேவேகத்தில் கடல் ஊருக்குள் செல்வதையும் கண்டேன்.

இவ்வாறு சுனாமி அனர்த்த வேளையில் நடுக்கடலில் இருந்த காரைதீவு மீனவர் மயில்வாகனம் பரமலிங்கம் (வயது 28) தெரிவித்தார்.

தனது தகப்பனார் மயில்வாகனம், அக்கா ஜெயந்சந்திரிகா, அக்காவின் மகள் டிலக்ஸி, தம்பி சங்கீதன், பிள்ளை சிந்து ஆகிய 5 பேரை இழந்த மீனவர் பரமலிங்கம் தனது அனுபவத்தை இப்படி விவரித்தார். இது விடயமாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அன்று காலை தோணியைத் தள்ளி கடலினுள் செலுத்தினோம். என்னுடன் அறுவர் தோணியில் இருந்தனர். தூரம் சென்று நங்கூரத்தைவிட்டு நின்றவேளை கடலில் நீரோட்டம் தென்பட்டது. நாம் தாமதித்தோம்.

அப்போது கரையில் இருந்த தோணிகள், படகுகள் என்பன கடலுக்குள் அடித்து இழுதது வரப்படுவதைக் கண்டோம் மறுகணம் ஊரைக் காணவில்லை. ஊருக்குள் கடல் செல்வதைக் கண்ணால் கண்டோம். செய்வதறியாது நடுக்கடலில நின்றோம். சுமார் அரை மணிநேரம் எந்த வித ஆட்டமுமில்லாமல் நின்ற நாம் பயத்தில் படகினை மேல்நோக்கிச் செலுத்தினோம். பின்பு ஊருக்குப் போக எண்ணி கரையைநோக்கி அனைவரும் படகைச் செலுத்தினோம். அப்போது ஊருக்குள் போன தண்ணீர் மீண்டும் கடலுக்குள் வருதைக் கண்டோம். ஆனால் அது எம்மைப் பாதிக்கவில்லை.

சற்று நேரத்தில் கரையை அண்மிக்கும் கட்டம் வந்தது. அந்த நேரம் வாழ்க்கையில் இதுவரை சந்தித்திராத அனர்த்தம் நிகழவிருந்ததை கனவிலும் எண்ணவில்லை.

திடீரென சுமார் 20 அடி உயரமான பாரிய அலை மிகவும் வேகமாக எம்மை நோக்கித் துரத்தி வந்தது. நாமும் முடியுமானவரை துடுப்பை வேகமாக வலிந்து கரைக்குக் கிட்ட வந்ததும் எமக்கு மேலால் சுழன்றடித்த பேரலை எம்மைச் சிதறவைத்தது.

தோணி உடைந்து சுக்குநூறாக, நாம் ஒவ்வொரு பக்கம் அலையில் அள்ளுண்டு அடித்துச்செல்லப்பட்டோம். கரையெண்டு எண்ணி தரையில் கால்வைத்த போதுதான் அது நடு ஊர் என்பது விளங்கியது.

வந்த மாத்திரத்தில் அம்பாறைக்கு தப்பி ஓடினோம். அங்கு சென்ற பிற்பாடுதான் எனது குடும்பத்தில் ஐந்துபேரை இழந்த துயரத்தை அறியமுடிந்தது - என்றார். (எ)

### கழுத்துவரை நீர்வந்தபோதும் ஒருவாறு பிழைத்தோம்

கண்ணகி இந்துவித்தியாலய அதிபர் எஸ். மணிமாறன் கூறுகையில்:-

அன்று வீட்டினுள் நின்று கொண்டிருந்தபோது திடீரெனபாரிய அலை வீட்டினுள் புகுந்தது. செய்வதறியாது பிள்ளையைத் தூக்கிப் பிடித்தவாறு மேசை மேல் ஏறினோம். மனைவியும் அப்படி மற்றப் பிளையைத் தூக்கி ஏறினார். சுற்று நேரத்தில் எமது கழுத்துவரை நீர் உயர்ந்தது. பிள்ளைகள் அலறுகின்றனர். கையும் வலித்தது. இருப்பினும் பல்லைக்கடித்துக்கொண்டு நின்றோம். சுனாமி வீட்டையும், எனது மாமனாரையும் கொண்டு சென்றது - என்றார். (எ)

# மனையுமில்லை; மனைவியுமில்லை அம்புலன்ஸ் சாரதி கண்ணீர்த் தகவல்

காரைதீவு வைத்தியசாலை அம்புலன்ஸ் சாரதி எஸ்.மோகனகுமார் சுனாமி பற்றிக் கூறுகையில்:-

அன்று ஞாயிற்றுக்கிழமை எனக்கு விடுமுறை நாள். இருந்தும் கர்ப்பிணித் தாயாரொருவரை கலமுனைக்குக் கொண்டுசெல்லுமாறு டாக்டர் கேட்டதற்கிணங்க கொண்டு சென்றேன். கல்முனைக்குச் சென்று அம்புலன்ஸை திருப்பி ஊருக்கு வருவதற்குள் காரைதீவு கடலில் சிக்கியது. கொம்புச் சந்திக்கு வந்துபார்த்தேன்.

எனது வீடும் இல்லை; மனைவியும் இல்லை; ஒரேயொரு மகனும் இல்லை. அனைத்தையும் இழந்து நடைப்பிணமாய்த் திரிகிறேன். சுனாமி சுட்டது என்னைத்தான் என நினைத்து அலைகிறேன் - என்றார். (ஏ)

# கறுப்பு நிற அலை எம்மை மோதியது காரைதீவு ஆங்கில ஆசிரியர் தெரிவிப்பு

காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரி ஆங்கில ஆசிரியர் கே.புண்ணியநேசன் கூறுகையில்:-

அன்று காலை புத்தக அடுக்கை சீராக அடுக்கிக்கொண்டிருந்தேன். அப்போது மின்சாரம் எரிந்து சத்தத்துடன் வருவது போன்று படபடவென ஓசை கேட்டது. உடனே மனைவியைக்கூட்டிக்கொண்டு 'மெயின் ஸ்விட்சை' நிறுத்திவிட்டுபின்பக்கம் ஓடினோம்.

மறுகணம் பாரிய இரைச்சலுடன் மிகவும் உயரமானகறுப்பு நிற அலையொன்று வந்து மோதியது. நானும் மனைவியும் சிதறினோம். சிதறி மரமொன்றைக்கட்டிப்பிடித்துக்கொண்டு நின்றேன். கழுத்தளவிற்கு மேல் கடல்நீர் சுழன்று சுழன்று ஓடியது. அதில் குழந்தைகளும் பெரியவர்களும் பொருள்களும் அள்ளுண்டு செல்வதைக்கண்டேன். பின்னர் இறங்கிவர இரண்டாவது அலை தாக்கியது.

ஒருவாறு சமாளித்துக்கொண்டு கரைச்சைப் பாலத்தினூடாக மனைவியுடன் வந்துசேர்ந்தேன். எனது மூன்று பிள்ளைகளும் ஏற்கனவே வந்துவிட்டனர். எனினும் எனது அம்மாவும் தங்கச்சியும் சுனாமிக்குப் பலியாகிவிட்ட செய்தி பின்னர் தான் தெரியவந்தது. - என்றார். (எ)

தொகுப்பு
காரைதீவிலிருந்து
வி.ரி.சகாதேவராஜா

# உதவிசெய்யச் சந்தர்ப்பம் கிடைப்பது ஒரு கொடை

## காரைதீவு புனர்வாழ்வுக்குழுத் தலைவர் தெரிவிப்பு

ஒருவருக்கு உதவி தேவைப்படும் சந்தர்ப்பத்தில் எம்மால் எவ்வாறாவது உதவி செய்யச் சந்தர்ப்பம் கிடைத்தால் அதனை ஒரு கொடையாகக் கருதவேண்டும். இன, மத, சமய பேதமின்றி இரவு பகல் பாராமல் செய்யும்இச்சேவையைக் கண்டு யாரும் அச்சமடைய வேண்டியதில்லை.

இவ்வாறு காரைதீவு சுனாமி அனர்த்த நிவாரண புனர்வாழ்வுச் செயலணிக்குழுத் தலைவரும காரைதீவு மக்கள் வங்கி முகாமையாளருமான ஜே.கே. பிரான்சிஸ் தெரிவித்தார்.

தமது குழுக்கூட்டத்தில் கலந்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

நிவாரணங்கள் உரியவர்களுக்கு உரிய வேளையில் சென்றடையவேண்டுமென்று கருதுகிறோம். காரைதீவில் நிவாரணம் சீராக வழங்கப்படுவதாக அரச அதிபர் கூறியுள்ளார். எமக்கு அது பெருமையைத் தருகிறது.

ஆஸ்திரேலியாவிலிருந்து எமக்கு 2 லட்சத்து 35ஆயிரத்து 80ரூபா கிடைத்துள்ளது. எமது வைப்புக்கணக்கில் பகிரங்கமாக அதனை வைத்துள்ளோம். இப்படிப் பல் வெளிநாடுகளிலிருந்து தொடர்புகொண்டு நிவாரணம் மற்றும் புனர்வாழவு நடவடிக்கைக்கு உதவமுன்வந்துள்ளனர்.

எமது சமூகசேவை எத்தகைய இடையூறு வந்தாலும் தொடரும்- என்றார்.

# மலையேறி உயிர் பிழைத்தோம் மலைமுருகன் ஆலயக்குரு தகவல்

அடர்ந்த காட்டுப்பகுதியில் உள்ள பிரசித்தி பெற்ற உகந்தை மலைமுருகன் ஆலயக்குரு கோபி சர்மா கூறுகையில்:-

அன்று கோயிலில் நானும் சிவாயநம என்பவரும் ஆரையம்பதியின் முன்னாள் தபாலதிபரும் இருந்தோம். காலையில் ஆலய முன்றிலில் இருந்த கடையிலிருந்து ஒரு பெண் "முகுது எனவா" "கடல்வருகிறது" என ஓலமிட்டுக்கொண்டு ஓடி வந்தாள். எட்டிப்பார்த்தோம் கடல் வேகமாக வந்துகொண்டிருந்தது.

அதனிடையில் வனஜீவராசிகள் திணைக்கள ஊழியர்கள் விரைந்து வந்து எம்மை அருகில் உள்ள மலையில் ஏற்றினர். அங்கிருந்து நடப்பவற்றை துல்லியமாகப்பார்த்தோம்.

ஆலயச்சுற்றுமதிலை உடைத்துத் தகர்த்து உள்ளே நுழைந்து அப்பாலும் சென்றது. அப்பால் யாருமில்லை. மறுநாள் நடந்து ஊர்வந்துசேர்ந்தோம்.

கையில் கமரா இருந்திருந்தால் சுனாமியை அழகாகப் படம் பிடித்திருக்கலாம் - என்றார். (எ)

# அம்பாறை மாவட்ட களநிலைவரம்

| இல. | பிரதேச செயலகம் | இறந்தோர் | காணாமல் போனோர் | அகதி முகாம் | அகதி மக்கள் | பாதிப்புற்ற வீடுகள் | சமய ஸ்தலங்கள் | பாடசாலை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | அம்பாறை | 0 | 0 | 5 | 634 | 0 | 0 | 0 |
| 2. | தமன | 0 | 0 | 3 | 207 | 0 | 0 | 0 |
| 3. | லாகுகலை | 1 | 0 | 1 | 137 | 20 | 1 | 0 |
| 4. | பொத்துவில் | 577 | 59 | 12 | 19,397 | 2179 | 7 | 7 |
| 5. | அட்டாளைச்சேனை | 12 | 5 | 3 | 984 | 427 | 5 | 3 |
| 6. | அக்கரைப்பற்று | 33 | 48 | 5 | 2,053 | 1,414 | 7 | 5 |
| 7. | ஆலையடிவேம்பு | 383 | 67 | 3 | 3,754 | 361 | 4 | 1 |
| 8. | திருக்கோவில் | 740 | 140 | 9 | 15,498 | 4,008 | 8 | 9 |
| 9. | நாவிதன்வெளி | 0 | 0 | 6 | 2,080 | 0 | 0 | 0 |
| 10. | கல்முனை (முஸ்லிம்) | 3,636 | 915 | 14 | 24,996 | 9,856 | 15 | 6 |
| 11. | கல்முனை (தமிழ்) | 1,151 | 141 | 10 | 11,147 | 3,545 | 7 | 3 |
| 12. | நிந்தவூர் | 127 | 2 | 6 | 4,708 | 1,494 | 13 | 6 |
| 13. | காரைதீவு | 899 | 91 | 5 | 7,481 | 2,030 | 7 | 6 |
| 14. | சாய்ந்தமருது | 1,471 | 739 | 6 | 14,361 | 3,763 | 8 | 4 |
| 15. | சம்மாந்துறை | 0 | 0 | 2 | 584 | 0 | 0 | 0 |
| 16. | இறக்காமம் | 0 | 0 | 1 | 70 | 0 | 0 | 0 |
| | | 9,030 | 2,207 | 91 | 1,08,091 | 29,097 | 82 | 50 |

உ

ௐ

ஸ்ரீராமஜெயம்

## யாழ். - வண்ணை

## ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

## விசேட பிரார்த்தனை நிகழ்வு

கடந்த 26.12.2004இல் நிகழ்ந்த ஆழிப்பேரலை அனர்த்தத்தில் பலியான மக்களின் ஆத்மா சாந்தியடையவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆத்ம பலம் வேண்டியும் மேற்படி தேவஸ்தானத்தில் தாரணவருஷம் தை மாதம் 13ஆம் நாள் (26.01.2005) புதன்கிழமை காலை 6.45 மணிக்கு நடைபெறும். பூஜையுடன் மோட்ச தீபம் ஏற்றப்பட்டு தொடர்ந்து காலை 9.00 மணிக்கு விசேட அபிஷேகமும் பூஜையும் மோட்ச அர்ச்சனையும் நடைபெற்று 10.30 மணிக்குக் கூட்டுப்பிரார்த்தனை (பஜனை) நிகழும். அடியார்கள் யாவரும் வந்து மேற்படி நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

★ வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம்.
*யாழ்ப்பாணம்.* (சி-40614)(43-18-15-24) - ஆதீன மஹாசபை.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கணபதிப்பிள்ளை மகேஸ்வரி

(காரைநகர்)



யாழ்ப்பாணம், இல.114/3, பிறவுண் வீதியை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி கணபதிப்பிள்ளை மகேஸ்வரி 21-01-2005 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சட்டத்தரணி ஆறுமுகம் கனகசபை களபூமி, காரைநகர் தம்பதிகளின் புத்திரியும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் தம்பதிகளின் அன்பு மருமகளும் சுப்பிரமணியம் கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் அமிர்தானந்தன் (ஆஸ்திரேலியா), ஆனந்தகுமார் (கனடா), சிவகுமார், கமலாம்பிகை (கனடா), அருளாம்பிகை (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சாரதாதேவி, சிற்கலாயாழினி, விஜயலஷ்சுமி, தவனேஸ்வரன், பத்மசிறிரங்கன் ஆகியோரின் அன்பு மாமியாரும் சுபனா, அபி, நிவாசினி, தனுஜா, சுபோ, ஆரணி, சிவானி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற சோமசுந்தரம் பரமேஸ்வரி, காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் தையல்நாயகி பரமலிங்கம், கௌரீஷ்வரி பொன்னம்பலம் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2005) செவ்வாய்க்கிழமை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, 10.00 மணிக்கு அவரின் பூதவுடல் தகனக்கிரியைக்காகக் கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**T.P.: 222 6193**
114/3, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
(41232)(26-18-15-24)

தகவல்:
எஸ்.கே.கணபதிப்பிள்ளை
*(கணவர் – ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர் நீர்ப்பாசனத் திணைக்களம்).*

## திருமதி சோதிமணி கனகசுந்தரம்

காரைநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சோதிமணி கனகசுந்தரம் 23.01.2005 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் இளைப்பாறிய தபால் அதிபர் கனகசுந்தரத்தின் அன்பு மனைவியும் அற்புதமலர் (கனடா), சிவமலர் (பிரான்ஸ்), அற்புதராசா (ஜேர்மனி), ஆனந்தராசா (ஆனந்தன் தொலைத்தொடர்பகம், காரைநகர்), சிவராசா (பிரான்ஸ்), அன்னமலர் ஆகியோரின் அன்புத் தாயாரும் பாலச்சந்திரன் (பேபி மாஸ்ரர் - கனடா), சிறீஸ்கந்தராசா (பிரான்ஸ்), தினமணி (ஜேர்மனி), கமலாதேவி, லோகேஸ்வரி (பிரான்ஸ்), இராசதுரை (கிராம உத்தியோகத்தர், காரை தெற்கு J/44) அன்பு மாமியாரும் பொன்னையா (இளைப்பாறிய கணக்குப் பரிசோதகர்), சிவபாலன் (முன்னாள் மனேச்சர், ஈரோஸ் பாமன் கடை), புஸ்ட பீலாவதி, சிவமணி, ஜெகசோதி (ஆசிரியர், யாழ்ற்றன் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் மீரா, ஹரி, கஜன், ரோஜினி, செந்தூரன், மயூரன், ஆத்திகன், அஜித்தன், அருந்தா, அமிர்தா, மதுஷன், மதுரா, பவானந்தன், லக்ஷிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2005) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் சாம்பலோடை மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*காரைநகர்.*
**T.P.: 0602 213474, 0602 213231**
(41227) (24-18-15)

தகவல்: அ.கனகசுந்தரம்
*(கணவர் – இளைப்பாறிய தபால் அதிபர்)*




## சனசமூக நிலையத்துக்கு கதிரைகள்

யாழ்ப்பாணம்,ஜன.25

நவாலி வடக்கு சனசமூக நிலையத்திற்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின்கீழ் 43 கதிரைகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இதற்கான நிதியை வழங்கியுள்ளார்.

இதேவேளை, நீண்டகாலமாக மின்சாரமின்றி இருந்த மேற்படி சனசமூக நிலையத்திற்கு மின்னிணைப்பு வழங்கவும் நிதி வழங்கப்பட்டுள்ளது. (10-185)

## புதிய இடத்தில் தபாலகம்

வரணி,ஜன.25

கொடிகாமம் அஞ்சலகம் ஏ-9 வீதியில் புகையிரத நிலையத்திற்கு முன்பாகக் கடந்த புதன்கிழமை தொடக்கம் இயங்கிவருகிறது.

இந்த அஞ்சலகம் முன்னர் தனியார் வீடொன்றில் இயங்கிவந்தமை குறிப்பிடத்தக்கது. (10-170-204)

## பணம் கையளிப்பு

சுழிபுரம்,ஜன.25

சுனாமி பாதிப்புக்குள்ளானோருக்கு உதவுமுகமாக ஒரு தொகைப் பணத்தைச் சேகரித்த தொல்புரம் கிராம பொது அமைப்புகள் அதனை வலி.மேற்குப் பிரதேச இலங்கை செஞ்சிலுவைச் சங்கக் கிளையினரிடம் கையளித்துள்ளனர்.

அப்பகுதிப் பொதுமக்களிடமும் வெளிநாடுகளில் வாழும் உறவுகளிடமும் இருந்து சேகரிக்கப்பட்ட ஒரு தொகைப் பணமே இவ்வாறு கையளிக்கப்பட்டுள்ளது. (10-28-ரி)

## 141 குடும்பங்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.25

பருத்தித்துறை - கொட்டடி கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கப் பரப்பில் 141 குடும்பங்கள் சுனாமி பேரழிவினால் பாதிக்கப்பட்டுள்ளன.

பாதிப்புக்குள்ளாகிக் கடற்றொழில் மற்றும் வீடுகளை இழந்த குடும்பங்களுக்குத் தொழில் மற்றும் வீடமைப்பு உதவிகளை வழங்கி உதவுமாறு கொட்டடி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர் கேட்டுள்ளனர். (10-185)

## வடமராட்சி கடற்றொழில் சங்கங்களின் அறிவிப்பு

வடமராட்சி,ஜன.25

வடமராட்சி வடக்குக் கரையோரப் பகுதிகளில் மணல் அள்ளவோ அல்லது அங்கு காணப்படும் பொருள்களை எடுத்துச் செல்லவோ கூடாது என அவ்வப்பகுதிக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அறிவித்துள்ளன.

அத்துடன், இதுதொடர்பான விளம்பரப் பலகைகளும் கரையோரங்களில் வைக்கப்பட்டுள்ளன. (10-173)

## கல்விச் செயற்பாடுகள் ஆரம்பம்

குருநகர்,ஜன.25

குருநகர் சென்.ஜேம்ஸ் கல்வி முன்னேற்றக்கழகத்தின் கல்விச் செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுவருவதாகச் செயலாளர் சீ.எம்.நெல்சன் தெரிவித்துள்ளார்.

ஆண்டு 7 தொடக்கம் ஆண்டு 6 வரை பாடசாலைகளில் கல்வி கற்றுவரும் மாணவர்களுக்கான மீட்டல் வகுப்புகள், இரவுப் பாடசாலை, வறிய மாணவர்களுக்கு உதவுதல் ஆகிய நடவடிக்கைகள் தமது கழகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (10-51)



## House for Rent or Lease

Newly renovated modern upstair house, seven rooms, 4 bathrooms / toilets situated within 3 miles off Palaly Road. More than 8 vehicles can be parked. Suitable for Office, NGO's Expatriates.

**Contact: 0777736335** (C/40596) (24-18)

உங்கள் விமானப் பயணத்திற்கு!

**Aero Lanka**

In Domestic Operation

New way of flying



ஏரோ லங்காவின்
விஸ்தரிக்கப்பட்ட
உள்ளூர் விமான சேவை
தற்போது
யாழ். – கொழும்பு – திருமலை ஆகிய நகரங்களுக்குச்
சேவையாற்றி வருவது அறிந்ததே!!!
மேலும் எமது சேவை பற்றிய
முழு விவரங்களுக்கு/தகவல்களுக்கு

தென்மராட்சி மக்களின்
நன்மை கருதி

**Jaffna Office**
No.86, PointPedro Road,
Jaffna. Tel.:021-2226242
Fax:021-2225600

எமது புதிய காரியாலயம்
முதல்மாடி, நவீனசந்தை,
சாவகச்சேரி.
தொலைபேசி:021 222 7979

கொழும்பு - யாழ். | யாழ். - கொழும்பு



## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
28 - 09 - 1927

மறைவு
29 - 01 - 2002

**திருமதி மாணிக்கம் அன்னம்**

திதி: தைப்பூசம் (25.01.2005)

"நெஞ்சிருக்கும்வரை உங்கள் நினைவிருக்கும்..."

*"அபிராமி மகால்", அச்சுவேலி தெற்கு.*
*அச்சுவேலி.* (சி-40601) (24-18-15)

- குடும்பத்தினர்.

## எம் நெஞ்சைவிட்டு அகலாத
## 31ஆம் நாள் கண்ணீர்ப் பூக்கள்



கென்றிக் எமறெஞ்சியா (டல்சியா)
ஆண்டவன் படைப்பு: 17.09.1978
இயற்கையின் அழிப்பு: 26.12.2004



கென்றிக் எட்வீசன்றோய்
ஆண்டவன் படைப்பு: 09.08.1992
இயற்கையின் அழிப்பு: 26.12.2004

கடலன்னை தாலாட்டும் தாழையம்பதியில் கடலின்
மடியில் துயின்ற எம் செல்வங்களே!
எங்கள் வாழ்வின் விடிவெள்ளியாய் இருந்து
எம்மைத் தவிக்கவிட்டு மறைந்த மாயம் தான் என்ன?
அள்ளி அள்ளித் தந்தாள் கடலன்னை ~ அவள்
உங்களை அள்ளிச் சென்ற செய்தி கேட்டு
அலை அலையாக வரும் கண்ணீரை
அடக்கமுடியாமல் தவிக்கின்றோம்
மாதம் ஒன்றுதான் கழிந்தாலும் உங்கள் நினைவுகள்
எங்கள் நெஞ்சைவிட்டு அகலாது செல்வங்களே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இவர்களின் ஆத்மா சாந்தியடைய இன்று (25.01.2005) செவ்வாய்க்கிழமை யாழ். புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் 10.30 மணிக்கும் காலை 7.30 மணிக்கும் தாழையடி புனித அந்தோனியார் ஆலயத்திலும் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவர்களுடைய இழப்பினை அறிந்து எமக்குத் தொலைபேசி மூலமாகவும் பண உதவி மூலமாகவும் மற்றும் இறுதிச்சடங்கில் பங்குபற்றி எமக்கு அனுதாபங்களைத் தெரிவித்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

*தாழையடி கிழக்கு,*
*தாழையடி.*

**திருமதி கென்றிக் லீலிமலர் குடும்பத்தினர்.**

(41230) (24-18-15)

# தைப்பூசத் திருவிழா

யாழ்ப்பாணம்,ஜன.25

இணுவில் கந்தசுவாமி கோயிலில் தைப்பூசத்தை முன்னிட்டு இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6மணிக்கு மஞ்சத்திருவிழா நடைபெறவுள்ளது.

முற்பகல் 11மணிக்கு சங்காபிஷேகமும் தொடர்ந்து விசேட பூசைகளும் இடம்பெற்று மாலை 6மணிக்கு சண்முகப் பெருமான் வள்ளி, தெய்வயானை சமேதரராக திருமஞ்சத்தில் வீதிவலம் வரவுள்ளார்.(10-204)

☆ ☆ ☆

தொல்புரம், கொட்டியம்பதி ஸ்ரீ ஆதிமுத்துமாரி அம்மன் ஆலயத்தில் தைப்பூசத் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9மணிக்கு நடைபெறவுள்ளது.

விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று அம்பாள் வீதியுலா வருதலும் இடம்பெறும். (10-204)

☆ ☆ ☆

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கோயிலில் தைப்பூச உற்சவம் இன்று விசேடபூசை, ஆராதனை, வீதியுலாக்களுடன் இடம்பெறும். (173)

# பவளவிழா ஏற்பாடுகள்

வலி.தென்மேற்கு,ஜன.25

பண்ணாகம் தெற்கு ஐக்கிய நாணயச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு 75 வருடங்கள் நிறைவு பெறுவதை முன்னிட்டு அடுத்த மாதத்தில் பவள விழாவைச் சிறப்பாக நடத்துவதற்கு சங்க நிர்வாகம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

சங்கத்தின் கூட்டம் தலைவர் மா.பாக்கியநாதன் தலைமையில் அண்மையில் நடைபெற்றபோது 1930ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கத்தின் பவளவிழாவைச் சிறப்பான முறையில் கொண்டாடுவது என்றும் பவளவிழா மலர் ஒன்றை வெளியிடுவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(10-135)


## ACCA

நீங்கள் 16 வயது அடைந்தவரா?
அல்லது கூடியவரா?
O/L அல்லது A/L தகைமை இல்லையா?
கவலை இல்லை..................நீங்களும் கணக்காளர் ஆக முடியும்.

UNIVENTURE

**Study for ACCA – CAT(Certified Accounting Technician)**

Four subjects- computer based examination
Five subjects- Written examination

Be Different : Stand out from a crowd

***By obtaining a BSc (Hons) Applied Accounting degree from Oxford Brooks University UK***

பெற்றோரின் கனவு நனவாகிட உங்கள் பிள்ளைகளின் எதிர்கால வெற்றிக்கு CAT இன் அரியதொருவாய்ப்பு..................
ஆம் உங்கள் பிள்ளை தனது 19 வயதில் சிறந்த கல்விமானாக உருவாகிட CAT ஐ நாடுங்கள்.

Once Qualified
**Qualified for Life**

**Start Date: 19th Feb 05**
*மேலதிக விளம்பரங்களுக்கு*

**UniVentures Institute of Business Management**
**55, Martin Road, Jaffna. 021 222 7666**


# 31ஆம் நாள் இதய அஞ்சலி



எமது பாடசாலை மாணவி

## அ.அருணாலக்சினி

அவர்கள் 26-12-2004 இயற்கை அனர்த்தத்தால் முல்லைத்தீவில் அமரத்துவமடைந்ததையிட்டு ஆறாத்துயரில் ஆழ்ந்திருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை,
குருநகர். (41236)(26-11-19)

அதிபர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்.


## திருமணக் கார்

* இச்சேவையை ஒழுங்குசெய்யும் விடுதிகளுக்கும தொலைத்தொடர்பு நிலையங்களுக்கும் கமிஷன் வழங்கப்படும்.
* குளிரூட்டப்பட்ட சொகுசுக்கார், சில்வர்நிறம்
* திருமண சேவைக்கும்
* முக்கிய பிரமுகரின் (VIP) பயன்பாட்டிற்கும் மட்டும் உரியது. (வரையறுக்கப்பட்ட தூரங்களிற்கு)

தொடர்பு: தொ.பே.இல. 222 6286
0777 283795

(மேற்படி இலக்கங்களைக் குறித்து வையுங்கள்)
(41253)(26-11-19)


# நெஞ்சைவிட்டகலாத 31ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னையின் மடியில்
16 - 12 - 1995



ஆழிப்பேரலையின் பிடியில்
26 - 12 - 2004

## திருப்பதிநாதன் நிறஞ்சனா

(விழிப்புல வலுவிழந்தோர் இல்லம், வாழ்வகத்தை வதிவிடமாகக் கொண்ட மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியின் ஆரம்பப் பிரிவு மாணவி)

காலமெல்லாம் ஒன்றாக வாழ்வோமெனக்
கண்டிருந்த கனவுகளைக் கலைத்துவிட்டு
கண்மணியே கணப்பொழுதில் கடலலையில் கலந்தமையால்
கண்ணீரில் மிதக்கின்றோம், கலங்கித் துடிக்கின்றோம்.

இவருடன் ஆழிப்பேரலையின் பிடியில் சிக்கி உயிர்நீத்த இவரின் அம்மம்மா, பெரியசித்தி, அக்கா, அக்காவின் மகள் ஆகியோரையும் இந்நாளில் நினைவுகூருகின்றோம்.

உடுத்துறை வடக்கு,
உடுத்துறை, தாழையடி. (41245)(26-11-19)

- குடும்பத்தினர்.


## பதவி வெற்றிடம்

தனியார் நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் பதவிகளுக்கு ஆண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கணக்கியல் அறிவு, இரும்புவியாபாரம் போன்றவற்றில் முன்னனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதோடு (1), (2) பதவிகளுக்கு கணனி அறிவு மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும். அனுபவத்திற்கேற்ப கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

(1) கணக்குப் பதியுநர்
(2) சீட்டை எழுதுநர்
(3) விற்பனை உதவியாளர்

விளம்பரத் திகதியில் இருந்து 10 நாள்களுக்குள் விண்ணப்பிக்கவும்.

**யாழ்ப்பாண இரும்பகம்,**
**32, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

(சி-40618)

## தேவை

1.Computer Hardware Technicians
(முன் அனுபவம் தேவை)
2.Mobile Phone Technicians
(முன் அனுபவம் தேவை)
3.சாரதி (சாரதி அனுமதிப்பத்திரம்,
முன் அனுபவம் தேவை)

விண்ணப்பங்களை 7நாள்களுக்குள் கீழ்காணும் முகவரிக்குச் சான்றிதழ் பிரதிகளுடன் விண்ணப்பிக்கவும்.

**ஆளணி முகாமைப் பணிப்பாளர்**
**வடகிழக்குத் தொழில்நுட்பம் (NET)**
34, சட்டநாதர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
T.P.: 222 3786

(சி-40622)


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய நிகழ்வும்

மலர்வு
21 – 06 – 1936



உதிர்வு
26 – 12 – 2004

## அமரர் சின்னையா மார்க்கண்டு

ஆண்டு முடிவதில் ஆழிப் பேரலையாய்
வந்த இச் சுனாமியில்
அகல் விளக்காய் இருந்தவெம்
தெய்வமே!! அணைந்ததோ
உன்னுயிர் கடல்மடியில்
வெந்தது எம் உள்ளம் உம் பிரிவில்
வேதனை தீர்ந்திட முடியவில்லை
குலவேந்தனே நீ சென்று மறைந்தீரோ!

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் அனைத்தும் இன்று (25-01-2005) செவ்வாய்ககிழமை பருத்தித்துறை, வியாபாரிமூலை எரிந்த அம்மன் கோயிலடியில் இடம்பெற்று, அதனைத் தொடர்நது கரவெட்டியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நிகழும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர் அனைவரையும் அன்பாக அழைக்கின்றோம்.

*'சன்டில்குள வீதி,*
*கரவெட்டி மேற்கு, கரவெட்டி.*

- குடும்பத்தினர்.

(41241)(46-11-19-26)

# நெஞ்சைவிட்டகலாத 31ஆம் நாள் நினைவஞ்சலிகள்

அன்னையின் மடியில்
08 – 01 – 1980



சுனாமியின் பிடியில்
26 – 12 – 2004



அன்னையின் மடியில்
05 – 01 – 1924

## செல்வி தனுசியா கொன்சன்ரைன்

(யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி முகிழ்நிலை ஆசிரியர், யா/தும்பளை சிவப்பிரகாச வித்தியாலய உள்ளகப் பயிற்சி ஆசிரியர்)

## கந்தப்பு கிருஸ்ணபிள்ளை

(விசகடி வைத்தியர்)

[மாமுனை, செம்பியன்பற்று.]

*தெய்வத்துள் தெய்வமான தெய்வீகத் தீபங்களோ*
*தேடிநாம் தவிப்பது தெரியவில்லையா உங்களிற்கு.*
*இல்லமெங்கும் துள்ளல் நடைபோடும்*
*இன்ப நினைவுகளால் இன்னலில் துடிக்கின்றோம்.*

*விழி நிறையக் கனவுடனே வலம்வந்த வண்ணமலர்*
*விரிந்து மணம் பரப்புமுன்னே உதிர்ந்து விட்டதனால்*

*பெற்றோரும் உறவுகளும் பெரும் துயரில் மூழ்கி*
*மாறாத் துயரத்தால் மாய்ந்து தவிக்கின்றோம்.*

*விழாமல் நாம் வாழ வேராகி நின்று*
*ஆலாகி விழுதாகி ஆளாக்கி விட்டு*
*அன்புப் பேர்த்தியின் துணையுடனே*
*அவனிவிட்டுப் பெரும்பயணம் சென்றதேனோ.*

"மனோ இல்லம்"
அரசடி லேன், வல்லிபுரப்பரியாரியார்
ஒழுங்கை, பருத்தித்துறை.
தொ.பே.: 0712373378

–பெற்றோர்,
குடும்பத்தினர்.

(41244)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கமலாம்பிகை ஆறுமுகம்



அனலைதீவைப் பிறப்பிடமாகவும் அராலி மத்தி, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஆறுமுகம் கமலாம்பிகை 22.01.2005 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர் ஆறுமுகத்தின் அன்பு மனைவியும் மங்கையர்க்கரசி, மகாலிங்கம் (கனடா), அமரர் சிவபாலன், சிவநேசன் (லண்டன்), கிருஷ்ணலீலா (ஜேர்மனி), புஸ்பராணி ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவனேசன், விஜயகாந்தன், சிவானந்தம், ஜெயா, ஜெயலட்சுமி ஆகியோரின் மாமியும் சுகந்தன், பிருந்தா, கஜேந்திரன், கஜித்தா, ஜெருண், கம்சிதா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26-01-2005) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேலங்காடு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அராலி மத்தி,*
*வட்டுக்கோட்டை.*
*T.P.: 0602213437*
*077 6257982*

(41240)(26-11-19)

தகவல்:
S. சுகந்தன்
(பேரன்).

## பாலசிங்கம் தெய்வானைப்பிள்ளை (செல்லமுத்து)

திக்கம்புரை, வசாவிளானைப் பிறப்பிடமாகவும், சங்கானை வீதி, அச்சுவேலியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட பாலசிங்கம் தெய்வானைப்பிள்ளை நேற்று (24.01.2005) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பாலசிங்கத்தின் அன்பு மனைவியும் பொன்னம்பலம் - சின்னப்பிள்ளையின் அருமைப் புதல்வியும் திருநாவுக்கரசு, தியாகராஜா, சுப்பிரமணியம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் நவரத்தினம், சிவக்கொழுந்து, காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் முத்தம்மா கதிர்காமத்தம்பி (பிரான்ஸ்), முருகேஸ்வரன் (ஜேர்மனி), யோகராணி (ஜேர்மனி), புவனேஸ்வரி (ஜேர்மனி), சிவானந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பராசக்தி, நாகரத்தினம், காலஞ்சென்றவர்களான தில்லைநாதன், இராஜேஸ்வரன் மற்றும் மகாலட்சுமி, சிவகௌரி, யோகேஸ்வரன், வயவராசா, சிவதர்சினி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறியத் தரப்படும்.

சங்கானை வீதி,
அச்சுவேலி
(பொலீஸ் நிலையம் முன்பாக)

(41243)(26-11-19)

தகவல்:
பா.நவரத்தினம்.
T.P:0776000143
:0776622188

# 31ம் நாள் நினைவலைகள்!



தி.மேரிறூபா
கொ.லூர்துமரியராணி
செ.சுலெக்சனா
இ.ராஜ்ஜீவன்
உ.அஜில்க்கா
நீ.உதயசீலி
பி.அனோஜா
கொ.அருள்விஜ்யன்
ம.ஜினோல்ட்துஷ்யந்தன்

உ.அஜில்டா
எ.கபில்ஜெயராஜ்
இ.ராஜ்ஜீவி
ப.மேரியுனேற்றா
றொ.பிரின்சன்
ம.மயூரினா
எ.நிதர்சன்
ஏ.ஜெலான்மரினோ
அ.மேரிடினோயினி

2004.12.26 ஞாயிறு காலை சுனாமி ஆழிப் பேரலைகளின் கோரத் தாண்டவத்தில் காவுகொள்ளப்பட்ட எமது மாணவமணிகள் பதினெண்மரையும், அவர்தம் உறவுகள் ஐம்பத்துமூவரையும், இவ் அனர்த்தத்தின் போது பலியான ஏனையோரையும் இந்நாளில் நெஞ்சுருக நினைவு கூருகின்றோம். . .

-அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலைச் சமூகத்தினர்-
யா/மணற்காடு றோ.க.த.க.பாடசாலை.


ஓம் விராட் விஸ்வப் பிரமமனே நம

திறப்பு விழா 25.01.2005

யாகினி பிறின்டேர்ஸ்

நிகழும் மங்களகரமான தாரண வருடம் தை மாதம் 12ஆம் திகதி (25.01.2005) செவ்வாய்க்கிழமை பகல் 10.42 முதல் 11.18 வரை வரும் தைப்பூசம் சித்த யோகமும் கூடிய சுப நேரத்தில் எமது ஸ்தாபனத்தைத் திறந்து வைப்பதற்கு வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்மனின் திருவருள் கூடியுள்ளது. இதனை நண்பர்கள், உறவினர்கள், வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

YAKINY Printers

[வண்ணை நாச்சிமார் கோவில் முன்பாக]

இல. 620,
காங்கேசன் துறை வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.


# 16ஆம் நாள் நினைவலைகள்



மலர்வு 11 - 05 - 1931

உதிர்வு 11 - 01 - 2005

அமரர்

## காத்திலிங்கம் கந்தசாமி

(அத்தண்ணா)

நாளை (26.01.2005) புதன்கிழமை காலை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் ஊறணி தீர்த்தக் கடற்கரையில் நடைபெறும் கல்லுப்போடும் நிகழ்விலும் கலந்து அமரரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஏ.ஜி.ஏ. லேன்,
நெடியகாடு,
வல்வெட்டித்துறை. (41238) (24-11-15) - குடும்பத்தினர்.


பத்மா விருந்தினர் விடுதி

இல. 835, நாவலர் வீதி, அரியாலை (கனகரத்தினம் ம.ம.வித்தியாலயத்துக்கு அருகில்) உள்ள மாடி வீடு 25-01-2005 தொடக்கம் விருந்தினர் விடுதியாக இயங்கும். குளியலறை வசதிகளோடு தனியறைகளும் இரண்டு படுக்கையறைகளும் வாடகைக்குண்டு.

தொடர்பு: சிவா
T.P.: 0777 293265 (சி-41237)


# முதலாம் வருட நினைவஞ்சலி



அமரர்

## சீனியர் சிவயோகமலர்

தோற்றம் 03-07-1934 மறைவு 06-02-2004

மண்ணில் மக்கள் வாழ சேவை செய்தீர்!
கண்ணை இமை காப்பது போல் காத்து நின்றீர்!
கண்ணைமூடித் துறப்பதற்குள் தெய்வமானீர்!
என்னுவார் நெஞ்சத்தில் நிலைத்திருப்பீர்!

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

பொன்னம்பலம் வீதி,
காரைநகர். (41258) (24-11-15)

# 25ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 11 – 04 – 1932

மறைவு 01 – 01 – 2005

## திருமதி பாலசுப்பிரமணியம் ஈஸ்வரி

*அம்மா நீ எங்கே சென்றாய்?*
*எங்கும் நாம் தேடுகின்றோம்*
*தேடிக் கொண்டே இருப்போம்*
*எங்கள் இனிய அம்மாவே!*
*மீண்டும் எங்களுடன் வந்திடம்மா!*
*என்றும் உந்தன் வரவை எதிர்பார்த்திருப்போம்.*

01.01.2005 அன்று சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவியின் பிரிவுச் செய்தி அறிந்து எமது இல்லம் விரைந்து துயரத்தைப் பகிர்ந்து, இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும், மலர்வளையம் வைத்தும் தொலைபேசி, தந்தி, கண்ணீர் அஞ்சலி மூலம் துயரத்தை பகிர்ந்து கொண்டவர்களுக்கும் எமது தாயார் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் நோய்வாய்ப்பட்டு இருந்தபோது வைத்தியம் செய்த வைத்திய நிபுணர்கள், தாதிகள், சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் நோயாளர்கள் பராமரிப்பு பகுதியினருக்கும் பல வழிகளில் உதவிபுரிந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

25.01.2005 இன்று அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்தில் கலந்து அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
விளானை,
களபூமி, காரைநகர். (41259)(43-4-15-24) கணவர், பிள்ளைகள், குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## சுப்பையா யோகலிங்கம் (காந்தி)



சாவகச்சேரி, கோயிற்குடியிருப்பைப் பிறப்பிடமாகவும் டென்மார்க்கில் வசித்தவரும் கொற்றாவத்தையை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட சுப்பையா யோகலிங்கம் 21.01.2005 சிவபதமடைந்தார்.

T.C.E.O. பருத்தித்துறையிலும் கமநல சேவை யாழ். திணைக்களத்திலும் தொழில்நுட்ப உத்தியோகத்தராகக் கடமையாற்றிய இவர், காலஞ்சென்றவர்களாகிய சுப்பையா - முத்துப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் கொற்றாவத்தை அமரர்களாகிய மலேசியன் பென்சனியர் இளையதம்பி - சரஸ்வதி தம்பதிகளின் மூத்த மருமகனும் காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் சிவகாந்தி (ஜேர்மனி), சிவசீலன் (கனடா), சிவசெல்வி (நியூசிலாந்து), மனோகரன் (கனடா), சிவராணி (கனடா), சிவகரன் (டென்மார்க்), சிவசக்தி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் விஜயகுமார் (ஜேர்மனி), சசீந்தினி (கனடா), இரவிகரன் (நியூசிலாந்து), சாரத்லதா (கனடா), குலசிங்கம் (கனடா), யோகமலர் (டென்மார்க்), பாஸ்கரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் திருமதி செல்லமுத்து குமாரசாமி, திருமதி செல்வதி பரமசிவம், அமரர் சிவஞானசுந்தரம், தர்மலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் குமாரசாமி, Dr.பரமசிவம், புவனேஸ்வரி, செல்வராஜா (கனடா), ராஜேஸ்வரி, Dr.கனகரத்தினம், இராதாகிருஸ்ணன், பாலசுப்பிரமணியம் (கனடா), புவனேஸ்வரி, சந்திரவதனா ஆகியோரின் அன்பு மைத்துனரும் சோமாஸ்கந்தராசா, கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகலனும் பிரகாஷ், சதீஸ், வாரகா, கோகுல், கனிஸ்யா, அனிஸ்யா, லேனுஸ்யா, மதுரா, மோகிதன், திலக்ஷன், பிருந்தா, நிருஷான், கிரிஷான், மதுஷான், மீனுஷா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வல்வெட்டித்துறை ஊறணி இந்து மயானத்தில் நாளை (26.01.2005) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெறும். இந்த அறவிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

கரணவாய் வடக்கு,
கொற்றாவத்தை,
வல்வெட்டித்துறை. (41264) (24-11-15)

தகவல்:
குடும்பத்தினர்.

# நெஞ்சம் நெகிழும் 31ஆம் நாள் நினைவலைகள்



**சுனாமியின் அழைப்பில் 26.12.2004**

**திருமதி செல்லத்துரை விறிசிற், அமரர் வர்ணகுலசூரிய செபஸ்ரியாம் பீற்றர், செல்வி அந்தோனிப்பிள்ளை அருணா லக்சினி, திருமதி அந்தோனிப்பிள்ளை பற்றிமா, செல்வி சண்முகராசா பிருந்தா.**

"உயிர்ப்பும் உயிரும் நானே
என்னில் விசுவாசம் கொள்பவன்
இறப்பிலும் வாழ்வான்"

மெலிஞ்சிமுனை,
கரம்பொன்,
ஊர்காவற்றுறை. (41257) (24-11-15)

சகோதரர், கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 17.11.1999 இறப்பு 26.12.2004

## ஜெகதீஸ்வரன் கிருபாகரன்

பருத்தித்துறையில் தவழ்ந்த நீ!
உடுத்துறையில் உற்றாரைத் தேடிப் போய்
பாவம் ஏதும் அறியாப்பிள்ளை கிருபாகரா!
பாரினில் பரிணமித்த கொடூர ஆழியவளை
அலையினுள் அள்ளுண்டு போனாயே!
நிலைதடுமாறி நிம்மதியிழந்து தவிக்கிறோம் நாம்

இழந்துதவிக்கும்:
அப்பா - வே.ஜெகதீஸ்வரன் (ஜெகன்)
அம்மா - சரஸ்வதி (குஞ்சுக்கிளி)
அம்மம்மா - மு.சந்திரமதி
மாமாமார் - மு.கர்க்கண்டன்,மு.ரமேஸ்.

பருத்தித்துறை. (சி-40627)

# 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 03.03.1931 மறைவு 03.02.1996

## திருமதி அன்னலட்சுமி இராசையா

திதி : தைப்பௌர்ணமி

எங்கள் குடும்பத்தின் கலங்கரை விளக்கமே
ஒன்பதாம் ஆண்டின் இறுதியில் தங்களின்
நினைவுகளைப் பசுமையுடன் போற்றுவதுடன்
அமரர் உலகில் சிவன் பாதத்தில் சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

கணவர்: இராசையா
மக்கள்: தவமணி,இராஜலட்சுமி, இராஜ்குமார்,
மருமக்கள்:பூரணம்பிள்ளை,தவச்செல்வன், சியாமளாதேவி
பேரப்பிள்ளைகள்:
தர்மிகா, தனுஷிகா, சந்தோஷ், அமரீஷன், ஆதர்ஷன், இராகவி, கபிஷன்,
உறவினர், நண்பர்கள்.

அன்னலட்சுமி வாசா,
மாத்திரா வளவு,
வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.
(41269)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மண்ணகம் 21 - 07 - 1946 23 - 04 - 1997



விண்ணகம் 26-12-2004

திருமதி **சின்னாச்சன் நவரத்தினம்** | செல்வி **றொன்சிகா நவரத்தினராசா**

திருமதி சின்னாச்சன் நவரத்தினம் அவர்களும் அவரது பேர்த்தி செல்வி றொன்சிகா நவரத்தினராசா அவர்களும் கடந்த 26.12.2004 அன்று கடல் அன்னையின் சீற்றத்துக்கு உள்ளாகி எம்மை ஆறாத் துயரில் விட்டுப்பிரிந்ததனை நினைவுகூர்வதோடு, இச்செய்தி கேட்டவுடன் துயரில் கலந்துகொண்டு உதவிகள் புரிந்த தும்பளை சக்தி மரக்காலை வாகன உரிமையாளர், தும்பளை சைவப்பிரகாச மகா வித்தியாலய அதிபர், தும்பளை கிராமசேவையாளர் (J/405), தும்பளை கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம், தும்பளை சாந்தன் கடை உரிமையாளர், கொற்றாவத்தை பூமகள் ச.ச.நிலையம், புத்தூர் கலையகம் ச.ச.நிலையம், ஊர்திகள் மூலம் உதவிகள் புரிந்த குழுவினர், தொலைபேசி, கடிதங்கள் மூலம் ஆறுதல் படுத்திய உள்ளங்கள் மற்றும் பல்வேறு வழிகளில் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நெஞ்சு நெகிழ்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தற்போதைய முகவரி:
ஆவரங்கால் கிழக்கு, புத்தூர். (41277)

தகவல்:
குடும்பத்தினர்.


உ
சிவமயம்

புதுக்கடைத் திறப்பு விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான தாரண வருடம் தை மாதம் 12ஆம் நாள் (25.01.2005) செவ்வாய்க்கிழமை மு.ப. 11.06 மணி முதல் பி.ப. 12.36 மணி வரையுள்ள சித்த யோகமும் பூச நட்சத்திரமும் கூடிய சுப வேளையில் திருநெல்வேலியில் எம்மால் புதிதாக அமைக்கப்பட்ட

**கிறீன்பலஸ் எம்போறியம்**

என்னும் புடைவை வாணிப ஸ்தாபனத்தை நல்லூர் மனோன்மணி அம்மன் திருவருள் துணைகொண்டு திறப்புவிழா செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் வருகைதந்து விழாவைச் சிறப்பித்து வாழ்த்துமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

N. மயூரன்.

பலாலி வீதி,
திருநெல்வேலிச் சந்தி,
திருநெல்வேலி.



GREEN PALACE EMPORIUM

மிகக் குறைந்த விலை நிறைந்த ரகங்கள் நிகரில்லாத தரம்

(C/40625)


# விபத்தில் காயமடைந்த இளைஞன் மரணம்!

யாழ்ப்பாணம்,ஜன25

கடந்த செவ்வாய்க்கிழமை திக்கம் பகுதியில் ஹன்ரர் வாகனத்தில் இருந்து தவறிவீழ்ந்து மயக்கமடைந்ததாகக்கூறி, யாழ்.போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்ட இளைஞர் ஒருவர் 6 நாள்களின் பின் நேற்று மரணமானார். உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த சோமசுந்தரம் அருண்பிரஷாத் (வயது-19) என்ற இளைஞரே மரணமானவராவார்.

இவரது சடலம் மரண விசாரணையின் பின் நேற்று மாலை உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (8-12)

இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களை நினைவுகூர்ந்து நடத்தும்

## ஐக்கிய ஒன்றிப்பு வழிபாடு

**இடம்:** பரிபேதுரு ஆலய மெதடிஸ்த திருச்சபை, யாழ்ப்பாணம்.
(யாழ்.மத்திய கல்லூரிக்கு அருகில்)
**காலம்:** 25.01.2005 பி.ப. 4.00 மணி
**அருளுரை:** வண.கலாநிதி டயன்சன்கார் (முன்னாள் அதிபர், தமிழ்நாடு இறையியல் கல்லூரி)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ்.கிறிஸ்தவ ஒன்றியம்
Y.M.C.A. கட்டடம்,
109, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
ஒன்றிப்புக்கான ஆணைக்குழு,
யாழ்.மறைமாவட்டம்,
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம். (41200)

# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை நாகலிங்கம்

**(இளைப்பாறிய பரிசோதகர் - மீன்பிடித் திணைக்களம், முன்னாள் உரிமையாளர்- ஸ்ரீகணேசா ஸ்ரோர்ஸ் மாகோ, முன்னாள் பிரபல வர்த்தகர் - கிளிநொச்சி)**

கணபதிப்பிள்ளை நாகலிங்கம் அவர்கள் 24.01.2005 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும் கணபதிப்பிள்ளை - தங்கமுத்து தம்பதிகளின் மகனும் வல்லிபுரம் - சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் ரதி, ரஞ்சினி (ஆசிரியை, யா/புற்றளை மகா வித்தியாலயம்), ராகினி (பிரான்ஸ்), ராஜு (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும வீ.க.சண்முகநாதன் (பிரதேச செயலகம், சாவகச்சேரி), க.முருகையா (பிரதேச செயலகம், பருத்தித்துறை), மு.கோபாலகிருஸ்ணன் (பிரான்ஸ்), செ.சந்திரசேகரம் (நோர்வே) ஆகியோரின் மாமனாரும் ஜனகன் (2 ஆம் வருட பொறியியல் பீட மாணவன், மொரட்டுவ பல்கலைக்கழகம்), தனஞ்ஜெயன் (பொறியியல் பீடம், மொரட்டுவ பல்கலைக்கழகம்), காயத்திரி, ரஜிதா, நிவேதா (பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவிகள்), சுஜவன் (பிரான்ஸ்), தர்சினி (பிரான்ஸ்), சுதர்சன் (பிரான்ஸ்), கௌசிகன் (நோர்வே), கஜன் (நோர்வே) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (24.01.2005) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் புலோலி ஆனைவிழுந்தான் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா. சரஸ்வதி(மனைவி).

மனேச்சர் வளவு, புற்றளை,
புலோலி தெற்கு, புலோலி. (சி-40630)(29-14-16)


நிறைஞ்சனாஸ் சங்கானை

அர்ஜுன் (இருவேடம்) லைலா வடிவேல் நடித்த

விஜய் சூரியா



காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00, (பி.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு
ANACONDA - 2 இரவு 8.45
(C/39654)

நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
பிரசாந்த், சினேகா, வடிவேல், ஜனகராஜ் இன்னும் பலர் நடித்த

ஆயுதம்



கா.நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30(பி.நே.)
இரண்டாவது வாரம் வெற்றிவாரம்

ராஜா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
சரத்குமார் (இருவேடம்), நயன்தாரா, லட்சுமி, வடிவேல், பிரகாஸ்ராஜ், நெப்போலியன் நடித்த
கே.பாலச்சந்தரின்



ஐயா இயக்குநர் ஹரி

காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பி.நே.)
ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்



இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
தனுஸ், ஸ்ரீதேவி, கருணாஸ், கபாலி, குணால், நாசர் நடித்த

தேவதையைக் கண்டேன்

தினசரி 11.00, 3.00, 7.00, 10.00 (பி.நே.)
(C/39654)


# மரண அறிவித்தல்கள்

## நல்லையா அழககுலசிங்கம்



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் மல்லாவி 3 ஆம் யூனிற்றில் தற்காலிகமாக வசித்தவருமாகிய நல்லையா அழககுலசிங்கம் நேற்று (24.01.2005) திங்கட்கிழமை நீர்வேலியில் அவரது இல்லத்தில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2005) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2 மணியளவில் நீர்வேலி இந்துமயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தயவுசெய்து கேட்டுக்கொள்கின்றோம்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி. (41260)(16-14-29)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## திருமதி சுப்பிரமணியம் சரஸ்வதி



பளையைப் பிறப்பிடமாகவும் மறவன்புலோவை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சரஸ்வதி 23.01.2005 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் ராமநாதர், ராசம்மா, காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் பரமேஸ்வரி, தங்கலட்சுமி, குணரத்தினம், மகேஸ்வரி, விநாயகமூர்த்தி ஆகியோரின் அன்புத் தாயாரும் குமாரசாமி, தங்கம்மா, காலஞ்சென்ற தவமலர் மற்றும் நடராசா, பரம்சோதி, ஸ்ரீரஞ்சினி, கனகசிங்கம், ஜெயராணி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (24.01.2005) திங்கட்கிழமை உடையார்கட்டிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விஜயாஸ்ரோர்,
உடையார்கட்டு. (41274)(16-14-29)

தகவல்:
பிள்ளைகள்.

## பொன்னையா செல்லத்துரை

**(இளைப்பாறிய அரச உத்தியோகத்தர்)**

புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும் 3 ஆம் கட்டை, கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா செல்லத்துரை 21.01.2005 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - தங்கம்மா அவர்களின் அன்பு மகனும் காலஞ்சென்ற தில்லையம்பலம் சின்னம்மா அவர்களின் அன்பு மருமகனும் லீலாவதியின் (தையல் ஆசிரியை) அன்புக் கணவரும் காலஞ்சென்ற கனகாம்பிகை, ஜெகநாதன், யோகாம்பிகை, செல்வராஜா, மோகனாம்பிகை, ஜெகதாம்பிகை கதிர்காமநாதன், தவநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற கருணாகரசிங்கம், ஜெயந்தி, காலஞ்சென்ற இராஜரட்ணம், நிர்மலா, மகேந்திரன், காலஞ்சென்ற மனோஜீவா, தயாளினி ஆகியோரின் அன்பு மாமனாரும் கௌரி, ஜலஜா, ஜனகன், ஜனனி, ஜனந்தன், ஜசிந்தன், ரகுநாதன், லக்ஷன், துஷ்யந்தி, சுமன், லவதர்ஷன், தட்சாயணி, டுக்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.01.2005) புதன்கிழமை 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

3 ஆம் கட்டை,
கல்வியங்காடு. (41267)(29-14-16)

தகவல்:
மனைவி,பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

உரும்பிராயைச் சேர்ந்த

## சோமசுந்தரம் அருண்பிரஷாத்

**(சணா - S.V.M. ஊழியர்)**



உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் அருண்பிரஷாத் 24.01.2005 திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் ஓட்டுமடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற வேலுப்பிள்ளை மற்றும் பாக்கியம் தம்பதிகளினதும் உரும்பிராயைச் சேர்ந்த காலஞ்சென்ற முருகேசு - தவமணி தம்பதிகளினதும் அன்புப் பேரனும் சோமசுந்தரம் - சாந்தராணி (ராணி) தம்பதிகளின் ஏகபுத்திரனும் கிருஷாந்தி (4 ஆம் வருடம், லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி), றிவானி (A/L 2003, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அருமைத் தம்பியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2005) செவ்வாய்க்கிழமை மாலை 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இளங்காடு இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'யோகவாசம்'
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய். 077 6675043 (41275)(29-14-16)

தகவல்:
வே.சோமசுந்தரம் (தந்தை).

## இராசையா செல்வானந்தம் (மேசன் செல்லம்)

மீசாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் மீசாலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா செல்வானந்தம் நேற்று (24.01.2005) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் பத்மாவதியின் அன்புக் கணவரும் மயூரன், சுமித்திரா, சித்திரா ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2005) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ப.ஸ்ரீதரன் (மைத்துனர் - கணபதி அரிசி ஆலை, மீசாலை).

மீசாலை வடக்கு,
கொடிகாமம். (41262)(29-14-16)

# ஹெல்கிஸனின் கல்முனை விஜயம் நேற்று இறுதி நேரத்தில் ரத்தானது

நோர்வே வெளிவிவகார பிரதி அமைச்சர் விடர் ஹெல்கிஸன் நேற்று கல்முனைக்கு மேற்கொள்ளவிருந்த விஜயம் இறுதி நேரத்தில் ரத்துச்செய்யப்பட்டது.

நேற்றுமுன்தினமிரவு கொழும்பில் நடந்த இராஜதந்திர நகர்வுகளின் திடீர்த் திருப்பத்தால் ஹெல்கிஸனும், நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸகரும் நேற்றுக் காலை அவசரமாகக் கிளிநொச்சி செல்லவேண்டி ஏற்பட்டது. இதனால் அவர்களின் கல்முனை விஜயம் இறுதி நேரத்தில் ரத்தானது என்று தெரிகிறது.

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டது கல்முனைப் பிராந்தியமாகும். இங்கு 15 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். பெரிய நீலாவணை தொடக்கம் பொத்துவில் வரையான கரையோரக் கிராமங்கள் ஒவ்வொன்றும் அரைவாசிப் பகுதிக்குமேல் கடலுக்கு இரையாகிவிட்டன.

- இவ்வாறு பேரழிவுக்குள்ளான கல்முனைப் பிராந்தியத்தைப் பார்வையிடவும், பாதிக்கப்பட்ட மக்களைச் சந்திக்கவும் என நோர்வே வெளிவிவகார பிரதி அமைச்சர் தலைமையிலான குழுவினர் நேற்றுக் காலை வருகைதரவிருந்தனர். அதற்கான நிகழ்ச்சி நிரலும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

நோர்வே பிரதிநிதிகளின் தமிழ்ச் சமூகத்தினருடனான சந்திப்பு கல்முனை பாத்திமா கல்லூரியிலும்,. முஸ்லிம் சமூகத்தினருடனான சந்திப்பு சாய்ந்தமருது ஜும்ஆ பெரிய பள்ளிவாசலிலும் ஏற்பாடாகி இருந்தன. எனினும் நேற்றுக் காலை இறுதி நேரத்தில் அவர்களின் கல்முனைப் பகுதிக்கான விஜயம் ரத்துச்செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. முன்னைய திட்டத்தின் தமிழ், முஸ்லிம் பிரமுகர்கள், பள்ளிவாசல், கோயில் தர்மகர்த்தாக்கள் மற்றும் ஆழிப்பேரலை அனர்த்த முகாமைத்துவக் குழுவினர் பெரும் கவலையும், விசனமும் அடைந்துள்ளனர்.

முன்னர் திட்டமிட்டதன்படி கல்முனை விஜயத்தை முடித்துக்கொண்டு ஹெல்கிஸன் நோர்வே புறப்படுவதாக இருந்தார். பின்னர் நேற்று அவர் தனது கிளிநொச்சி விஜயத்தை முடித்துக் கொண்டு நேரே விமான நிலையம் சென்று நோர்வே பயணமானார் என்று தெரிவிக்கப் பட்டது. (க-8)

## ஆஸ்திரிய அமைச்சர் நேற்று வருகை

ஆஸ்திரியாவின் வெளிவிவகார அமைச்சர் உருஸ்லு பிளஸ்மிக் நேற்றுக்காலை இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்தடைந்தார். பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஆஸ்திரியாவினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட நிவாரண உதவிகளை அவர் பார்வையிடவுள்ளதுடன், இலங்கைக்கு மேலும் தேவைப்படும் உதவிகள் பற்றியும் அவர் ஆராயவுள்ளார்.

அவர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோரை நேற்று மதியம் சந்தித்துப்பேசினார்.

தென்மாகாணத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளை அவர் இன்று பார்வையிடவுள்ளார்.

## ஹெலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறுவனம் ஒன்றின் பெயருக்கு இவை அனுப்பட்டிருந்தன. உரிய அனுமதி இல்லாமல் ஹெலிக்கொப்டர்களின் தொகுதிகளைக் கொண்டு வருவதற்கான தேவை குறித்துச் சம்பந்தப்பட்ட அரசசார்பற்ற நிறுவனத்திடம் பொலீஸார் விசாரணை நடத்தவுள்ளனர். இரு ஹெலிகொப்டர்களின் தொகுதிகளும் தற்போது பொலீஸாரின் பொறுப்பில் உள்ளன. (க-8)

## நேற்றிரவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சூட்டுச் சம்பவம் நடந்த இடத்திலிருந்து சுமார் 100 மீற்றர் தொலைவில் வெள்ளவத்தை பொலீஸ் நிலையம் அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## பொதுக் கட்டமைப்பை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டன. ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழர்தாயகப் பிரதேசத்தில் நிவாரணம், மீள்கட்டுமானம் ஆகிய பணிகளை முன்னெடுப்பதற்கு அரசும் புலிகளும் சேர்ந்து பொதுக் கட்டமைப்பொன்றை - இணக்கமான பொறிமுறை ஒன்றை - ஏற்படுத்தவேண்டும் என இப்பணிக்ளுக்குப் பெருமளவு உதவி வரும் சர்வதேசச் சமூகம் வலியுறுத்தி வருகின்றது என்பது தெரிந்ததே.

இதுதொடர்பாகக் கொழும்பிலுள்ள இலங்கை அரசின் சமாதானச் செயலகமும் கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகமும் ஏற்கனவே கருத்துப் பரிமாறல்களைச் செய்துவந்தன என்றும் விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கை அரசின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் கலாநிதி ஜயந்த தனபால, ஜனாதிபதியின் ஆலோசகர் மனோ தித்தவெல, புனர்வாழ்வு நிவாரணம், மீள் இணக்க அமைச்சின் பணிப்பாளரும் ஜனாதிபதியின் பேச்சாளருமான ஹரீம் பீரிஸ் ஆகியோர் அரசுத் தரப்பிலும் -

புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், பொருளாதார ஆலோசகர் ஜோய் மகேஸ்வரன் - ஆகியோர் புலிகள் தரப்பிலும் -

இவ்வாறு பல சுற்றுக் கருத்துப் பரிமாறல்களில் ஈடுபட்டனர் எனக் கூறப்பட்டது. இவர்களின் சந்திப்பு கொழும்பில் நோர்வேத் தூதுவரின் இல்லத்திலும் நடைபெற்றதாகத் தெரிகின்றது. கடந்தவார இறுதியில் கொழும்பு வந்த நோர்வேயின் - இரு அமைச்சர்கள் அடங்கிய - உயர்மட்டக்குழு மேற்படி பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடனும் ஏனைய அரசுத் தலைவர்களுடனும் விரிவாகப் பேச்சு நடத்தியபின்னர் வன்னிசென்றது. அங்கு தமிழ்த் தேசியத் தலைவர் வே.பிரபாகரனுடனும் ஏனைய புலிகளின் தலைவர்களுடனும் இந்த விடயம் குறித்தும் விரிவாகப் பேசியது. பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவது தொடர்பாக இச்சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டது என்றும் -

இவ்விடயம் தொடர்ந்தும் ஆராயப்படும் என்றும் -

அப்பேச்சுக்களின் பின்னர் அறிவிக்கப்பட்டது. கிளிநொச்சியில் பேச்சு நடத்திவிட்டுத் திரும்பிய நோர்வேக் குழுவினர், அந்த விடயம் குறித்து கொழும்பில் அரசுத் தலைவர்களுடனும் விரிவாக ஆராய்ந்தனர். அதில் ஏற்பட்ட முன்னேற்றத்தையடுத்து - புதிய விடயங்களோடு - நோர்வேக் குழுவினர் நேற்றுக் காலை கிளிநொச்சிக்கு மீண்டும் ஹெலியில் பறந்தனர். புதிய தகவல்களை புலிகளின் தலைமைக்கு அவர்கள் தெரிவித்தனர் என்று கூறப்பட்டது. எனினும், நேற்றுப்பேசப்பட்ட விடயங்களை வெளிப்படுத்தாமல் இருதரப்புமே அசாதாரண அமைதிபேணியதைக் குறிப்பிடத்தக்க விடயம் எனச் செய்தி வட்டாரங்கள் சில சுட்டிக்காட்டின.

இலங்கைக்கு வருகைதந்து அரசு மற்றும் விடுதலைப் புலிகளின் தலைவர்களைச் சந்தித்துப்பேசிய நோர்வேயின் உயர்மட்ட அனுசரணைக்குழுவில் இடம்பெற்றிருந்த இரு அமைச்சர்களும் நேற்று அதிகாலையே கொழும்பிலிருந்து புறப்பட்டுச் சென்றனர்.

பிரதி வெளிவிவகார அமைச்சரான விடர் ஹெல்கிஸன் நேற்றுக் காலை ஹெலிகொப்டர் மூலம் கல்முனைக்குச் சென்று அங்கு அனர்த்தப் பாதிப்புக்களைப் பார்வையிட்டபின்னர் நேற்றுமதியம் கொழும்பிலிருந்து நோர்வே திரும்புவார் எனத் திட்டமிடப்பட்டிருந்தது.

ஆனால், அனர்த்த நிவாரணத்தைக் கவனிப்பதற்கான பொதுக் கட்டமைப்பை உருவாக்கும் விடயம் தொடர்பாக நேற்றுமுன்தினமிரவு கொழும்பின் அரசுத் தலைமையின் பக்கத்தில் சில முடிவுகள் எடுக்கப்பட்டு அது நோர்வே அனுசரணைத் தரப்புக்குத் தெரிவிக்கப்பட்டதையடுத்து விடர் ஹெல்கிஸனின் பயணத் திட்டம் மாற்றப்பட்டது.

நேற்றுக் காலை கல்முனைக்குப் பதிலாகக் கிளிநொச்சிக்கு அவர் ஹெலியில் பறந்தார். அங்கு விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான புலிகளின் உயர்மட்டக் குழுவினரோடு அவர் பேச்சு நடத்தினார். அரசுத் தரப்பின் இந்த விவகாரம் தொடர்பாகத் தெரிவிக்கப்பட்ட தகவல்களைப் புலிகளுக்கு அவர் தெரியப்படுத்தினார். அச்சந்திப்பை முடித்துக்கொண்டு அவர் ஹெலிமூலம் கிளிநொச்சியிலிருந்து புறப்பட்டார். அந்தக் ஹெலிகொப்டர் நேரடியாகக் கட்டுநாயக்க விமானத் தளத்தை வந்தடைந்தது. நேற்றுப் பிற்பகல் அவர் அங்கிருந்து நோர்வேக்குப் புறப்பட்டுச் சென்றார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-8-க)

## மாவட்ட மட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சகலரையும் ஐக்கியப்படுத்திச் செயற்படுத்துவது அந்த நடவடிக்கைகளின் வெற்றிக்கு முக்கியமானதாகும்.

அத்தோடு, இதன் மூலம் அதிகார வர்க்கத்தின் கைகளில் அப்பணி சிக்கிப் பாதிப்புறுவதையும் தவிர்க்கமுடியும், மனிதநேய நடவடிக்கைகளைச் செம்மையாக மேற்கொள்ளவும் வழிபிறக்கும்.

அதுவே, வெளிப்படைத் தன்மையையும், பொறுப்புச்சொல்லும் நிலையையும்கூட ஏற்படுத்தும்.

அனைவரையும் இணைத்துக்கொள்ளும் வழி முறையே முழுமையான, சிறப்பான நடவடிக்கைக்குப் பொருத்தமானது என ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதனையே மனிதநேய முகவர் அமைப்புகளின் தலைவர்களும் வலியுறுத்தியுள்ளனர்.

இந்தத் தலைவர்கள் இங்கு வந்து களநிலைமையை நேரில் பார்வையிட்டதன் பின்னரே அவர்கள் இதனைத் தெரிவித்துள்ளனர் எனத் தமிழ்ச்செல்வன் மேலும் குறிப்பிட்டார்.

சகல புனர்நிர்மாண, மீள்கட்டுமானப் பணிகளையும் இணைத்த இந்தப் பொறி முறையை மாவட்ட ரீதியில் விஸ்தரிக்க வேண்டும். அதற்கு அனைத்து அதிகாரிகளினதும் ஒத்துழைப்பையும், ஆதரவையும் பெற்றுக்கொள்வது அவசியம்.

எனவே, இது தொடர்பில் விடுதலைப் புலிகள், தமது ஆதரவைச் சகல மட்டத்திலும் எந்த அரசியல் வேறுபாடும் இன்றியும், இனப் பாகுபாடு இன்றியும் வழங்குவர்.

பொறுப்புகளை வகிக்கும் சகலரும், தத்தமது அரசியல் நிலைப்பாட்டுக்கு அப்பால் நின்று புனர்நிர்மாண நடவடிக்கைகளில் மக்களுக்கு உதவ - கைகொடுக்க - முன்வரவேண்டும் என அவர் மேலும் வலியுறுத்தினார்.

பொறுப்பு வகிப்பவர்கள் இவ்வாறு செய்தால் தான், மக்கள் மீண்டெழுந்து, தடைகளைத் தாண்டித் தமது வாழ்வை அவர்களாகவே கட்டியெழுப்ப முடியும் எனவும் தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதும், உள்ளூர் மட்டத்திலான பங்கேற்பைச் சாதகமாக வலுப்படுத்தும்.

உள்ளூரில் அவரவருக்கே உரிய பிரத்தியேகத் தேவைகளும் உள்ளன. அவற்றை நிறைவுசெய்யவும் இப்பணிகளில் அடிமட்டத்திலான பங்கேற்பு உதவும் என்றும் தமிழ்ச்செல்வன் குறிப்பிட்டார்.

திட்டமிடல், அபிவிருத்திச் செயலகத்தால் தேவை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அம் மதிப்பீடு கூட்டத்தில் பங்குபற்றியோருக்குச் சுருக்கமாக விவரிக்கப்பட்டது.

அத்தோடு, செயலணிப் பொறிமுறை அடங்கலான உள்ளூர் கட்டமைப்பின் தொழிற்பாடு குறித்தும் அக்கூட்டத்தில் விளக்கம் அளிக்கப் பட்டது. (க-8)

## பிரபாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலைமையை அவதானித்த பாடசாலை அதிபர், உடனடியாகத் தலையிட்டு "நிவாரணப் பணியும் வேண்டாம் குழப்பமும் வேண்டாம் இடத்தைக் காலிசெய்யுங்கள்" என்று ஜே.வி.பியினரை பாடசாலையிலிருந்து வெளியேற்றி விட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. இதனால் பெரும் மோதல் ஒன்று தவிர்க்கப்பட்டது. (ஐ-க)


**WALK-IN INTERVIEW**

Applications are called from qualified and experienced persons to fill an immediate vacancy in Newton Electricals Hospital Road, Jaffna

**Computer Operator**
having a sound knowledge and experience in computerized Accounting.

Interested persons should call over at this office of The Institute of Informatics Studies, 100, Clock Tower Road, Jaffna on 30.01.2005 from 10.00 am to 1.00 pm with their testimonials.

Manager,
Newton Electricals

**G.A.Q., B.A. யாழ். பேராதனை பல்கலைக்கழகம்**

G.A.Q. Paper Class
தமிழ் - M.சுரேஸ்
அரசறிவியல் - T.திருமுருகன்
இ/நாக. - கந்த சத்தியதாசன்

ஆரம்பம்: 27.01.2005 மாலை 4 மணி

**திகழ் கல்வி நிறுவனம்**
கே.கே.எஸ். வீதி, இணுவில். (41226)

**சான்றிதழ் வழங்கும் வைபவம்**

எதிர்வரும் மாசி மாதம் 5ஆம் திகதி நடைபெற இருக்கும் எமது நிறுவனத்தின் 9ஆவது நிறுவன தின விழாவில் கல்வியாண்டு 2004 இல் கற்கை நெறிகளை முடித்துக்கொண்ட மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட இருப்பதால், கல்வியாண்டு 2004இல் கற்கை நெறிகளை முடித்துக்கொண்ட மாணவர்கள் அனைவரும் 28.01.2005ஆம் திகதிக்கு முன்பு அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறீர்கள்.

இயக்குநர்,
IIS, யாழ்ப்பாணம்.
(சி-40504)

**நான்கு காவலாளிகள் தேவை**

மேலதிக விவரங்களுக்கு சுயவிவரத்துடன் நேரில்வரவும்.

**ஸ்ரீ டிஜிற்றல் கலர் லாப் (கொனிக்கா கலர் லாப்)**
இல.14, ஸ்ரீ வேங்கடேசன் வீதி,
பெருமாள் கோயிலடி,
யாழ்ப்பாணம்.
T.P.: 021-222 3493. (சி-40631)(30)

அநேக மாணவர்களின் வேண்டுகோளிற்கிணங்க
**பொருளியல்**
**திரு. K.உதயன்**
**A/L DAY CLASS**
(Mon., Wed., Fri. - 7.00 (S.L.T.)
**A/L - 2005**
(Sat., Sun. - 10.30)
த்விர்க்க முடியாத காரணத்தால் நிறுத்தப்பட்ட அனுமதிகள் இதோ மீண்டும் வழங்கப்படுகின்றன.
விக்னா கல்வி நிறுவனம்
(சி-40598)

**கிறிஸ்தவ சேவ ஆச்சிரமம்**
**மருதனார்மடம்**
**நன்றி செலுத்தும் நற்கருணை வழிபாடு**

அன்புடையீர்,
அருட்திரு. சேவக் சாம் T.அல்பிரட் (சாம் அண்ணன்) நினைவாகவும் அவர் தம் வாழ்வுக்கும் திருப்பணிக்குமாக இறைவனுக்கு நன்றி கூறும் நற்கருணை வழிபாடு 26.01.2005 புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு ஆச்சிரம ஆலயத்தில் நடைபெறும்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
- பரிபாலனசபை.
(41248)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி இலட்சுமிப்பிள்ளை ஆறுமுகம்



கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த ஆறுமுகம் இலட்சுமிப்பிள்ளை சனிக்கிழமை 22.01.2005 அன்று பிற்பகல் 7.55 மணிக்குக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளைப்பாறிய ஆசிரியர் மு.சி.ஆறுமுகத்தின் அன்பு மனைவியும் ஞானந்தனிமுதல்வன் (ஆஸ்திரேலியா), அருந்தவராசா (ஓமான்), ஆனந்தராசா (கனடா), புஸ்பேஸ்வரி, யோகேஸ்வரி, காலஞ்சென்ற விக்னேஸ்வரன், கருணேஸ்வரியின் அன்புத் தாயாரும் மதிபாலசிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர்), சுப்பிரமணியம் (ஆசிரியர், கொ/தொண்டர் வித்தியாலயம்), இந்திராணி (ஆஸ்திரேலியா), ஜெயகௌரி (கொழும்பு), ஜெயந்தி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் அன்புச் செல்வி, தாரணி, அனுராதா, அபிராமி, நிமலன், நிறைஞ்சன், நிருபன், நிறோசன், இளநங்கை, வேணுகோபன், நந்தகோபன், லபீசன், ஹரீஸ், அஸ்வினி, றோகான், விசயரட்ணம், முருகதாசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ராகுல், றோசினி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2005) செவ்வாய்க் கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் வேருண்டை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வே.மதிபாலசிங்கம்.
*கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.* (41279)(30)

### செல்வி ஐங்கரன் நிரோஷா



கோயில் வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட யாழ். மங்கையர்க்கரசி மகாவித்தியாலய மாணவி செல்வி ஐங்கரன் நிரோஷா நேற்று (24.01.2005) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் ஐங்கரன் - புஸ்பவதி தம்பதிகளின் அன்பு மகளும் சிவசாந்தன் (யாழ். மத்திய கல்லூரி), பிரசாந்தன், சௌமியா ஆகியோரின் சகோதரியும் முருகையா-கோவிந்தம்மா, காலஞ்சென்ற சிங்கவேலு - தேவசேனா தம்பதிகளின் பாசமிகு பேர்த்தியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2005) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் பிற்பகல் 3 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
*இல.238, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.* (42180)(30)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.01.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.